

கல்கி
KALKI
3.9.64
60



மபத்லால் க்ரூப்

பாப்ளின்கள்–ஷர்ட்டிங்குகள்

மேலும் கிடைக்கிறது "டெபிலீஸ்ட்" தரத்தில்.

நியு ஷராக் (ஷராக்) அஹமதாபாத் • நியு ஷராக், நடியாத் • ஸ்டேண்டர்ட், பம்பாய் • ஸ்டேண்டர்ட், (நியு சைனு) பம்பாய் • ஸ்டேண்டர்ட் தேவாஸ் • ஸாஸுன், பம்பாய் • ஸாஸுன் (நியு யூனியன்) பம்பாய் • ஸுரத் காட்டன், ஸுரத் மபத்லால் பைன், நவ்ஸாரி.

Alyars 94GSP. 464 TM

மண்ணின் மணம்

வாசல் பெருக்கிக் கோலமிட
வாலைக் குமரி கைப்படவே
வீசித் தெளித்த புனல் போலே
விண்ணின் கரிய மேகப்பெண்

மாசில் நிலமகள் மலர்ந்திடவே
வழங்கும் மழைநீர் தரும் மணமே
பூகம் பொதிகைச் சந்தனமாம்
பொதிகையுமறியாத் தமிழ் மணமாம்!

கண்ணின் மணியாம் குழவிதனைக்
கையில் அணைத்து, மாந்தரெலாம்
உண்ணு அமுதே, என்றன்னை
உச்சி மோந்த மணமே போல்


விண்ணின் மழைநீர் மேல்படர
விம்மித் தழைத்துப் பூரித்த
மண்ணின் மணமே நறுமணமாம்,
மலர்கள் அறியா ஒரு மணமாம்!


- மின்னூர் சீனிவாசன்

கல்கி

பொருளடக்கம்

குரோதி ஆவணி 29 – செப்டம்பர் 13


எரு, கருப்புப் பணத்தை
வோட்டுப் பெட்டி
ஒரு கண்ணுக்கு பூதக் கண்ணாடி, மறு கண்ணுக்கு மறைப்புத் திரை


ஆட்சிமொழி விஷயமாக, நேருஜி அளித்த வாக்குறுதியின் அஸ்தி



மலர் 24 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 7

முறைகேட்டின் எல்லை

தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி செய்யும் மாயாஜால தந்திரங்கள் பலவற்றை நாம் பார்த்திருக்கிறோம். தொழிலதிபர்களை வசப்படுத்திக் கொண்டு ஏராளமாகப் பணம் திரட்டி, வாக்காளர்களை ஏற்றிக்கொண்டு வரப் பெரும் கணக்கில் வாகனங்களை ஏற்பாடு செய்து 'தட்சிணை' தந்து வோட்டுப் பெறும் அநியாயத்தைப் பார்த்திருக்கிறோம். நேரடியாகவும் மறைமுகமாகவும் பயமுறுத்தி அதன் மூலம் வோட்டுப் பெற்ற அக்கிரமத்தைப் பார்த்திருக்கிறோம். மாற்று அபேட்சகர்கள் அபேட்சைப் பத்திரத்தைத் தாக்கல் செய்யும் தருணத்தில் அவர்களை விலை கொடுத்து வாங்கிவிட்டு, காங்கிரஸ் அபேட்சகருக்கு 'ஏகமனதான தேர்வு' என்கிற அதிருஷ்டத்தையும், பின்னர் பெரும் பதவியும் அளிப்பதைப் பார்த்திருக்கிறோம். இவை யாவற்றுக்கும் சிகரமாகக் காங்கிரஸார் நடத்திய ஒரு தேர்தல் தகிடுதத்தம் சென்ற வாரம் வெளியாகியுள்ளது. கோண்டாத் தேர்தல் மனுவின்மீது வெளியாகியுள்ள தீர்ப்பைப் படித்தபின், நம் நாட்டு அரசியல் நிலைமை இவ்வளவு அசுத்தமாயிற்றே என்று விசனமும், வெட்கமும், வெறுப்பும் அடைகிறோம். அதே சமயத்தில் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஓர் உத்தம புருஷரும், நிர்வாக அநுபவம், விஷயஞானம், தேசபக்தி எல்லாம் நிரம்பப் பெற்றவருமான ஸ்ரீ என். தண்டேகர் அவர்கள் மக்கள் சபையில் இடம் பெறுவது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த கோண்டா தொகுதியில் சென்ற பொதுத் தேர்தல்களின்போது மக்கள் சபைக்குக் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட ஸ்ரீ ராமரத்ன குப்தா ஒரு கோடீசுவரர். தாம் வெற்றி பெற்றால் கோண்டா தொகுதியில் பத்தாயிரம் பேருக்கு வேலை அளிக்கும் ஒரு தொழிற்சாலை நிறுவப்போவதாக ஆசை காட்டியவர். மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ஸ்ரீ தண்டேகர் 'அயல் மனிதர்' என்று இந்தத் தேசிய ஐக்கியவாதியின் சார்பில் பிரசாரம் செய்யப்பட்டது. இவ்வளவுக்கும் பின்னர் மக்களுக்கு ஸ்ரீ தண்டேகரிடம் மதிப்புக் குறையவில்லை. மகாராஷ்டிரத்தினர் எனினும், தங்கள் ராஜ்யத்தில் நீண்டகாலம் உயர் அதிகாரியாகப் பணியாற்றி, அதே சமயத்தில் பொது மக்களிடம் அன்பான தொடர்பு கொண்டிருந்த ஸ்ரீ தண்டேகருக்குத்தான் பெருவாரியான வாக்குகளை அளித்தார்கள். வோட்டு எண்ணியபோது ஸ்ரீ தண்டேகரின் வாக்குகள் ஏறுமுகமாக இருப்பதைக் கண்டதும் காங்கிரஸின் சார்பில் நீசமான தந்திரங்கள் கையாளப்பட்டன. வோட்டெடுப்பில் சம்பந்தப்பட்டிருந்த அதிகாரிகளைக் கையில் போட்டுக் கொண்டு, மீண்டும் வாக்குகளை எண்ணச் செய்தனர். ஓர் இராத்திரி அவகாசம் கிடைத்தது. மாயமந்திரம் போட்டதுபோல், முன்பு தண்டேகருக்குச் செல்லுபடியாகியிருந்த இரண்டாயிரத்துச் சொச்சம் வோட்டுச் சீட்டுக்களில் இப்போது இரு முத்திரைகள் பதிவாகி, அவை ரத்து செய்யப்பட்டன. காங்கிரஸ் கோடீசுவரர் அமோக வெற்றி பெற்றார்!

தேர்தல் முடிவை ஆட்சேபித்து ஸ்ரீ தண்டேகர் மனுப் போட்டார். மனுவை விசாரித்த முன்னாள் மத்தியப் பிரதேச ஹைகோர்ட்டு நீதிபதி ஸ்ரீ பி. கே. சௌத்ரி அவர்கள், காங்கிரஸ் அபேட்சகரின் பல ஊழல்களை வெள்ளிடைமலையாகத் தெளிவுபடுத்தி, சுதந்திரக்கட்சி அபேட்சகர் தண்டேகர் தேர்தலில் வெற்றி பெற்றதாகத் தீர்ப்புக் கூறியுள்ளார்.

இது ஒரு தனிப்பட்ட காங்கிரஸ் அங்கத்தினரின் இழிசெயல் என்று மட்டும் கருத இடமில்லை. ஏனெனில் அந்த அபேட்சகருக்கு ஆதரவாக இருந்த தேர்தல்

அதிகாரி அச்சமயம் தம் பேரில் குற்றம் சாட்டப்பட்டு விசாரணையிலிருந்தவர். இவருக்கு உடனே பதவி உயர்வு அளிக்கப்பட்டது. இது உத்தரப் பிரதேச சர்க்கார் செய்த காரியம். ஆனால் அந்தச் சர்க்காரோ தவற்றுக்காகப் பச்சாத்தாபப் படாமல் தீர்ப்பில் சர்க்காரைப் பற்றிச் சொல்லியிருப்பதையெல்லாம் நீக்க வேண்டும் என்று எண்ணுகிறது. சட்டத்தைக் காக்க வேண்டிய சர்க்காரே முறை மீறிவிட்டு, அதனை யாரும் எடுத்துக் காட்டவும் கூடாது என அக்கிரமம் செய்யுமெனில் இனி காங்கிரஸ் ஆட்சியையும், அதற்குப் பயந்து பணி செய்யும் அதிகாரிகளையும் நம்பித் தேர்தல்களை ஒப்படைப்பது எப்படி?



ஸ்ரீ என். தண்டேகர்

கோண்டா தீர்ப்புக்குப் பின் காங்கிரஸ் தலைவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். சதாசாரம், நிர்வாகத் தூய்மை, மக்களின் ஒழுக்கம், ஜனநாயகம் இவை பற்றிப் பேச இனி அவர்களுக்கு வாய் ஏது? மக்களின் வாக்குகளை மனம் போனபடி மாற்றிச் சத்தியத்தைச் சிதைத்துள்ளவர்கள், வரி தராமல் பணம் பதுக்குவதைவிடக் கொடிய குற்றத்தைப் புரிந்தவராவர். அதிகாரிகளை வசப்படுத்தி வாக்குப் பெட்டிகளைத் திறந்து அவற்றிலுள்ள வாக்குகளை மாற்றிவிடச் செய்வது பகற்கொள்ளையுடனும், கற்பழிப்பதுடனும் ஒப்பிட வேண்டிய குற்றம் என்கிறார் ராஜாஜி.

மகத்தான குற்றம் பகிரங்கமாகி, சத்தியம் வெற்றி பெற்றது பற்றி ஆறுதல் அடைகிறோம். எப்படியாயினும் ஸ்ரீ தண்டேகர் அவர்கள் தமக்குரிய மக்கள் சபை ஸ்தானத்தை இரண்டரை ஆண்டுகள் இழந்திருந்ததற்கு எவ்வகையிலும் நஷ்ட ஈடு செய்ய இயலாது. காங்கிரஸ் ஊழலுக்கு மக்களின் கண்ணைத் திறந்து வைத்த நல்ல பணிக்காகச் செய்யப்பட்ட தியாகமே இது எனக் கொள்ளலாம்.

சுதந்திரா மகாநாடு

திருச்சி மாநகரில் இம்மாதம் இருபத்தியாறாம் தேதி சுதந்திரக் கட்சியின் தமிழகக் கிளை, மகாநாடு நடத்துகிறது. ராஜாஜி பங்கு கொள்கிறார். கட்சியின் தமிழகத் தலைவர்களும், சுதந்திரக் கட்சித் தலைவர் ஆசாரிய ரங்கா, பொதுக் காரியதரிசி ஸ்ரீ மஸானி, ஸ்ரீ வி. பி. மேனன், ஸ்ரீமதி காயத்ரிதேவி ஆகியோரும் **கோண்டா** வீரர் ஸ்ரீ தண்டேகரும் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அழுத்தமான முறையில் சுதந்திரக் கட்சிக் கொள்கைகளை மக்கள் மனத்தில் பதிக்க மகாநாடு முயலும். ஏராளமான பொருட்செலவு செய்து 'கும்பமேளா' நடத்தச் சுதந்திரக் கட்சிக்கு வசதி கிடையாது; அத்தகைய மனப் போக்கும் கிடையாது. கௌரவமான முறையில் மகாநாடு சிறப்பாக நடைபெற ஆண்டவன் அருளுவான்.

உணவு தான்ய கார்ப்பரேஷன்

மந்திரி திரு சி. சுப்பிரமணியம் கெட்டிக்காரர் என்பது நமக்கு முன்பே தெரியும். அதை மற்றும் ஒரு முறை நிரூபித்து விட்டார்.

அவர் மேல் காங்கிரஸ் வட்டாரத்தில் யாருக்கு என்ன கோபமோ தெரியவில்லை. நல்லபடியாகக் கனரகத் தொழில் இலாக்காவில் பணிபுரிந்து வந்தவரை உணவு இலாக்காவுக்கு மாற்றிவிட்டார்கள். உணவு இலாக்கா பல மந்திரிகளை விழுங்கி ஏப்பம்விட்ட இலாக்காவாகும். அப்படியொரு துர்க்

கதி தமக்கும் நேர்ந்து விடுமோ என்று அஞ்சிக் கெட்டிக்காரரான ஸ்ரீமான் சி. சுப்பிரமணியம் உணவு இலாக்கா பொறுப்பைத் தூக்கி ஒரு கார்ப்பரேஷன் தலையில் போடப் பார்க்கிறார்.

அடிக்கடி கமிட்டிகள், கார்ப்பரேஷன்கள், கமிஷன்கள் என்ற சொற்கள் இன்றைய ஆட்சி முறையில் அடிபடுவதைக் காண்கிறோம். திட்டக் கமிஷன் எத்தனையோ ஊழல்களுக்குக் காரணமான ஸ்தாபனம். ஆயினும் திட்டக் கமிஷனைக் குறித்து மக்கள் பெருத்த ஆட்சேபம் செய்வதற்கு வசதி இல்லை. இதுவே ஒரு மந்திரியின் பொறுப்பாக இருந்தால், மக்கள் கிளர்ச்சி நடத்துவார்கள்; தூது போவார்கள்; கேள்வி கேட்பார்கள்; வேறு பல உபாயங்களை நாடுவார்கள். ''திட்டக் கமிஷன் சிபாரிசின் மீது தான் அதைச் செய்தோம்'' என்று திட்டக் கமிஷன் தலையில் பொறுப்பைப் போட்டுப் பல தகராறுகளிலிருந்து தப்பிக்கவும் மந்திரிகளால் இயலுகிறது. திட்டக் கமிஷன் அங்கத்தினர்களைக் கேட்டால், ''சிபாரிசுதான் செய்வோமே தவிர, நடத்தி வைப்பது மந்திரியும், அவர் கீழுள்ள நிர்வாகமும் தான்'' என்று திருப்பிக் கூறுவார்கள்.

இதே போல் பொறுப்பைத் தட்டிக் கழிக்கத்தான் இப்போது உணவு தான்ய கார்ப்பரேஷன் ஏற்பட்டிருக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது.

வர்த்தகத் துறையில் சர்க்கார் நுழைந்தது. சர்க்கார் வர்த்தக கார்ப்பரேஷன் நியமித்தது. அதன் மூலம் நாம் பெற்றுள்ள அனுபவம் என்ன? மலேயாவில் சுமார் இருபது ரூபாய்க்கு வாங்கும் பாக்கை இந்தியாவில் எழுபத்திரண்டு ரூபாய்க்கு விற்கிறது! சுமார் முந்நூற்றைம்பது சதவிகிதம் விலை ஏற்றி விற்கிறது! தனி முதலாளிகள் சிமின்ட் விநியோகம் செய்து வந்த போது மூன்று ரூபாய்க்குக் கிடைத்த மூட்டை இப்போது ஏழரை ரூபாய்க்குத்தான் கிடைக்கிறது. உணவுப் பண்ட விலைவாசி உயர்வைச் சமாளிக்க ஏற்படுத்தும் கார்ப்பரேஷன் இப்போதுள்ள விலையை விட அதிக விலைக்கு விற்கத்தான் வழி செய்யும்!

இந்தக் கார்ப்பரேஷன் உணவு விற்பனையில் ஏகபோகம் செய்யாவிடினும், அதன் பெருத்த சக்தியில் தனி நபர்கள் ஒடுங்க வேண்டியதுதான். இந்தக் கார்ப்பரேஷனுக்குப் பல ஏகபோக சலுகைகள் கட்டாயமாக வழங்கப்படும். சர்க்கார் வர்த்தக கார்ப்பரேஷன் மூலக் கனிப் பொருள் ஏற்றுமதி வர்த்தகத்தில் பிரவேசித்தவுடன் பல கனி உரிமையாளர்கள் அத்தொழிலை விட்டதுபோலவே உணவு வியாபாரத்திலும் ஏற்படும்.

உணவு தான்ய கார்ப்பரேஷனை உற்சாகமாக வரவேற்கப் பழைய அனுபவம் நம்மை அனுமதிக்கவில்லை. சர்க்கார் அல்லது உத்தியோகஸ்தர்கள் நடத்தும் வியாபாரத்தில் அபரிமித செலவும் நஷ்டமும் ஏற்படப் போவதை எதிர்பார்க்கலாம். உணவு தான்ய உற்பத்தியும் விநியோகமும் ஆதிநாட்களிலிருந்து தனி மனிதனின் தொழிலாகவே இந்நாட்டில் இருந்து வந்திருக்கிறது. இந்நாட்டுப் பண்பு, வாழ்க்கை முறை இவற்றை அநுசரித்து நடந்து கொள்வதுதான் ஆட்சியாளரின் கடமை.

என்ன சேதி?

நிலக் கொள்கையும் நாராயணரும்

திட்டக் கமிஷன் அங்கத்தினர்களில் ஒருவரான ஸ்ரீமன் நாராயணர் அவர்கள் 'பத்து ஆண்டுகளுக்கு நிலச் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் விவசாயத்தைக் கெடுக்கக் கூடாது; விவசாயத் துறையில் ஸ்திரத் தன்மை ஏற்படுத்த வேண்டும்' என்று பேசியிருக்கிறார். கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்து என்ன பயன்? ஏதோ தவறு நடந்துவிட்டது என்பதை உணர்ந்து பேசினாரே என்ற மட்டில் மகிழ்ச்சி அடைகிறோம்.

நில உச்சவரம்புச் சட்டங்கள் காரணமாக மக்களின் அன்றாட உணவுப் பொருட்களான நெல்லும் கோதுமையும் சாகுபடி செய்து வந்த பெரிய பல மிராசுதார்கள் கரும்புச் சாகுபடிக்குத் திரும்பிவிட்டார்கள். இன்னும் பலர் முதலீடு செய்யச் சக்தியற்றவர்களுக்குத் தங்கள் வயல்களைத் துண்டு போட்டு விற்றுவிட்டு, நகர்ப்புறங்களில் வியாபாரத்துக்கு வந்துவிட்டார்கள். இதனால் இன்று நில உரிமை பெற்றவர்கள் நல்ல விதையும், உழவு மாடுகளும், எருவும் வாங்கக் கையில் பணமின்றி ஏனோ தானோ என்று பயிர் செய்யும் நிலையிலிருக்கிறார்கள்.

பதினேழாவது திருத்தம் நிறைவேறிவிட்ட பிறகு எந்த விவசாயிக்குத்தான் விவசாயத்தில் அக்கறை இருக்

கும்? பரம்பரையாக நடந்துவந்த இந்நாட்டின் பெரிய தொழிலை நாசப்படுத்தி விட்டு, இப்போது உணவுக்கு அமெரிக்காவையும் ஆஸ்திரேலியாவையும் இறைஞ்ச வேண்டிய நிலைமையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

விவசாயத்தில் ஸ்திரமில்லை என்று ஸ்ரீமன் நாராயணர் மனச்சாட்சி ஒப்பக் கூறியிருக்கிறார் என்றால், பதினேழாவது சாஸன மாற்றத்தை ரத்துச் செய்வதற்குத் தம் கட்சியினரிடம் முயற்சி எடுக்க வேண்டும்.

கேரளக் குழப்பம்

நாம் இதை எழுதும் தறுவாயில் கேரளத்தில் காங்கிரஸ் கட்சிப் பிரிவுகளிடையே கோஷ்டிப் பூசல் வலுவடைந்து ஆட்சியே கவிழும் நிலைக்கு வந்துள்ளது. கவிழ விடாமல் தடுப்பதற்குக் காங்கிரஸ் காரியதரிசியும், ஸ்ரீ எஸ்.கே. பாட்டீலும் திருவனந்தபுரத்துக்கு விரைந்தும் பலனில்லை என்று தெரிகிறது. மந்திரி சபை கவிழ்ந்து, ராஷ்டிரபதி ஆட்சி ஏற்படலாம் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அப்படி ஏற்பட்டால் ஜனநாயக ஆட்சி முறையில் நம்பிக்கையுள்ளவர்கள் எல்லோரும் குதூகலமாக வரவேற்கவே செய்வார்கள். சமீபத்தில் கேரள ராஜ்யத்தில் தேர்தல் நடக்கவிருக்கிறது. தேர்தலின் போது காங்கிரஸ் பதவியிலிருந்தால் தேர்தல் நேர்மையாக நடைபெற முடியாது; கட்சிகள் சம பலத்தில் போட்டியிட முடியாது என்பதை அறிந்தே, தேர்தலுக்கு ஆறு மாதங்கள் முன்பு ராஜ்ய சர்க்கார்களும், டில்லி சர்க்காரும் பதவியை விட்டு விலகி ராஷ்டிரபதி ஆட்சி ஏற்பட வேண்டும் என்று ராஜாஜி நீண்ட காலமாகக் கூறி வந்திருக்கிறார். கோண்டா தேர்தல் பிரச்னைக்குப் பின், ராஜாஜியின் கருத்தை அமுல் செய்வது எவ்வளவு அவசியமானது என்பது மேலும் உறுதியாகியுள்ளது.

தெய்வாதீனமாகக் கேரளத்தில் இப்படி ஒரு நிலைமை தோன்றினால் ஜனநாயகம் பிழைக்க நல்ல வாய்ப்பு உண்டு. ஆட்சியாளர் காதில் ஏறாத கோரிக்கை ஆண்டவன் காதில் விழுந்தது என்று மக்கள் மகிழ்வார்கள்.

மனமார வரவேற்கிறோம்

'இந்தோனேஷிய ஆக்கிரமிப்புக்கு ஆளாகியுள்ள மலேஷியாவுக்கு நாம் பூரணமாக உதவி புரிய வேண்டும்; அதன் சமாதானத் திட்டங்களுக்கு மட்டும் ஆதரவு தராமல், போர் மூண்டாலும் அப்போது மலேஷியாவுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும்' என்று 'கல்கி'யில் அடிக்கடி கூறியிருக்கிறோம். இவ்விஷயத்தில் சர்க்கார் 'வழவழ குழகுழ' என்று பேசி வருவதற்காக வருத்தப்பட்டிருக்கிறோம். சமீபத்தில் கோலாலம்பூரில் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் பேசியிருப்பதைப் பார்த்துப் பெருத்த திருப்தி கொள்கிறோம். எந்தச் சூழ்நிலையிலும் மலேஷியாவுக்கு இந்தியாவின் ஆதரவு உண்டு என்பதே சர்க்காரின் கொள்கை என ஸ்ரீ டி. டி. கே. அவர்கள் தெளிவாகக் கூறியிருப்பதை மனமார வரவேற்கிறோம்.

காங்கிரஸின் கம்யூனிஸம்

டில்லியில் காங்கிரஸ் பிரமுகர்கள் ஓயாமல் சோதிடர்களைச் சுற்றி வந்து, எந்த அதிகாரத் தலைவருக்குக் காலம் முடியும், எப்போது தங்களுக்கு அதிகார வாழ்வு கிடைக்கும் என்று ஆருடம் கேட்பது சர்வ சகஜமாகி விட்டதாம். சோதிட மந்திரி ஒருவரை நியமித்து, சோதிட இலாகா ஒன்றையும் டில்லியில் நிறுவ வேண்டும் என்று அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் அக்கட்சி அங்கத்தினர் ஒருவரே கிண்டல் செய்யுமளவுக்கு ஆளும் கட்சி அங்கத்தினர்களுக்கு அதிகாரப் பிரேமையும், பதவிப் பிரமையும் முற்றியிருக்கின்றன. இந்தச் சமயத்தில் தான் 'பதவித் துறவு' என்ற பித்தலாட்டத்துக்கு அஸ்திவாரமான காமராஜ் திட்டத்துக்குப் புத்துயிர் அளிப்பது போல் அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் பலர் பேசி யிருக்கிறார்கள். 'எங்களுக்குப் பதவி மோகமே இல்லை; இதோ பதவியை விட்டுப் புறப்படத் தயார்' என்றெல்லாம் சிலர் கூறி யிருக்கிறார்கள். அளவுக்கு மீறித் தங்கள் தியாக புத்தியை விளம்பரப் படுத்திக் கொள்வதால் மக்களின் மதிப்பைப் பெற்றுவிட முடியாது. மிகையான நடிப்புக் காரணமாக, எதிர்பார்ப்பதற்கு நேர்மாறான பலனைத்தான் அடைவார்கள்.

உண்மையில் யாரும் பதவியைத் துறப்பார்களோ மாட்டார்களோ அரசாங்கத்தை விடக் கட்சிக் காரியம் தான் முக்கியம் என்ற கருத்து இப்போது நன்றாக நிலைப்பட்டு விட்டது. மந்திரி சபையானது கட்சி இழுத்தபடி தான் ஆடும் என்பது நிச்சயமாகி விட்டது. இது ஜனநாயகப் பாதையிலிருந்து வெகுதூரம் விலகிக் கம்யூனிஸப் பாதையில் இணைந்து விட்ட போக்கு என்பதைச் சொல்லத் தேவையில்லை.

திரிசங்கு நிலைமை

கொழும்பு ஆகஸ்டுமீ 31உ

நாடற்றவர்களெனப்படுவோர் தற்சமயம் இலங்கையில் இருப்பவர்கள். அவர்களைக் கட்டாயத்தின் பேரில் இந்தியாவுக்கு நாடு கடத்த முடியாது. இவர்கள் சம்பந்தமாக இந்தியப் பிரதம மந்திரியுடன் பேச்சு நடத்துவதினால் பிரச்னை தீர்ந்து விடப் போவதில்லை. கடந்த பதினெட்டு ஆண்டுகளாக இலங்கை இந்தியப் பிரதமர்கள் பல தடவை சந்தித்துப் பேசத்தான் செய்திருக்கிறார்கள். அப்படிச் சந்தித்தும் இப்பிரச்னைக்கு ஒரு நல்ல முடிவு ஏற்படாத காரணம் பிரச்னையில் சம்பந்தப்பட்ட நாடற்ற மக்களின் பிரதிநிதிகளை அரசாங்கம் கலந்து கொள்ளாததுதான். பல முறை செய்த தவற்றையே ஈழ அரசாங்கம் மீண்டும் செய்யப் போகிறது. அக்டோபர் மாதம் இலங்கைப் பிரதமர் கெய்ரோ மகாநாட்டுக்குச் சென்று திரும்புகையில் தில்லியில் இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசத் திட்டமிட்டிருக்கிறார். இந்தச் சந்திப்பு பலனளிக்க வேண்டுமானால் இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கு முன்னால் இலங்கையில் உள்ள நாடற்ற மக்களின் பிரதிநிதிகளுடன் இலங்கைப் பிரதமர் பேச்சுக்கள் நடத்தி ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டும். அவ்விதம் ஒரு முடிவுக்கு வந்தால் அந்த முடிவை ஏற்குமாறு இந்தியாவிடம் கோருவது சுலபம். இதைத்தான் சமீபத்தில் பார்லிமெண்ட் சபையில் பல அங்கத்தினர்கள் வலியுறுத்தினார்கள். ஆனால் அரசாங்கம் வேறு விதமாக நினைக்கிறது. நாடற்ற மக்களின் பிரதிநிதிகளோடு பேச்சு நடத்த அரசினர் தயாராயில்லை. இதைக் கவனிக்கும் போது நாடற்ற மக்களின் பிரச்னைக்கு நியாயமான, சுமுகமான முடிவு செய்ய அரசாங்கத்துக்கு உண்மையாக அக்கறை இருக்கிறதா, அல்லது இந்தியாவுடன் பேச்சு நடத்துவதைப் போல் நடத்தி விட்டு, அப்பேச்சுகள் பலனளிக்கவில்லை யெனக் காரணம் சொல்லி இந்திய வம்சாவளியினர்களை இம்சிக்கும் புதிய சட்ட திட்டங்களைக் கொண்டு வரத்தான் திட்டமிட்டிருக்கிறதா என்று வினவத் தோன்றுகின்றது.

இலங்கைப் பிரஜாவுரிமை பெறத் தவறிய இந்திய வம்சாவளியினர்கள் எல்லாரும் இந்தியப் பிரஜைகள் என்பதே இலங்கை எப்பொழுதும் கடைப்பிடித்து வரும் கொள்கை யென்றும், இம்மக்கள் நாடற்றவர்கள்என்பதையோ அல்லது இந்தியர்கள் அல்லவென்பதையோ இலங்கை அரசாங்கம் ஒரு காலத்திலும் ஒப்புக் கொண்டதில்லை யென்றும் பிரதமருடைய பார்லிமெண்டரிக் காரியதரிசி ஈழப் பார்லிமெண்டில் ஒரு விரிவான அறிக்கையை விடுத்தார்.

இலங்கையைப் போலவே இந்தியாவிலும் ஒரு பிரஜாவுரிமைச் சட்டம் இருக்கிறது. அதன்படி இந்தியப் பிரஜைகளாகக் கூடியவர்களை யெல்லாம் தனது பிரஜைகளாக ஏற்றுக் கொள்ள இந்தியா எப்பொழுதும் தயாராக இருக்கிறது. ஆனால் 'இலங்கையில் இருக்கும் நாடற்ற மக்கள் இந்திய வம்சாவளியினர்களானாலும் அவர்கள் இந்தியப் பிரஜைகளல்ல; அவர்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை அளிக்க வில்லை யென்ற காரணத்தினால் அவர்கள் இந்தியப் பிரஜைகளாகிவிட மாட்டார்கள். இலங்கை தனது பிரஜாவுரிமையை மறுக்கும் நபர்களை யெல்லாம் இந்தியா தனது பிரஜைகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது அர்த்தமற்ற கொள்கை' — இதுதான் இந்தியாவின் வாதம். சுருக்கமாகச் சொல்லப் போனால் இலங்கைப் பிரஜாவுரிமை பெறாது இலங்கையிலிருக்கும் பத்து லட்சம் இந்திய வம்சாவளியினர் இரு தேசப் பிரஜைகளாகவும் இல்லாமல் நாடற்றவர்கள் என்று வர்ணிக்கப்பட்டு வருகிறார்கள். திரிசங்கு நிலையில் அவர்கள் தடுமாறுகிறார்கள்.

இருதரப்பினரில் ஒருவரும் சிறிதுகூட விட்டுக் கொடுக்கத் தயாராயில்லாத வரையில் பேச்சு நடத்துவதில் என்ன பயன்? எனவே பிரச்னையால் பாதிக்கப்படுவோரின் தலைவர்களுடன்தான் இலங்கை சர்க்கார் பேசி ஏதாவது சமாதானம் காண வேண்டும்.

ஃ ஃ ஃ

இலங்கையில் உள்ள சகல தின, வார, மாதப் பத்திரிகைகளையும் கடுமையாகக் கட்டுப்படுத்தி அவற்றின் சுதந்திரத்தைப் பறித்து எல்லாப் பத்திரிகைகளையும் அரசாங்கத்துக்குப் பக்கமேளம் தட்டும் இதழ்களாகச் செய்ய ஒரு மசோதாவைக் கொண்டுவர அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. இம்மசோதாவை எதிர்த்துச் சகல அரசியல் கட்சிகளும் மக்களும் நாடுமுழுவதும் அதிதீவிரமாகக் கிளர்ச்சி செய்ததன் பயனாக அரசாங்கம் இம்மசோதாவைக் கைவிட்டு விட்டது. ஆயினும் பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் எண்ணத்தை மாத்திரம் இன்னும் கைவிடவில்லை. சில திருத்தங்களுடன் மசோதாவைத் திரும்பத் தயாரிக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

இலங்கையர் — வர்த்தகம் என்ற சொல்லுக்கு அரசாங்கம் புதிய வியாக்கியானம் கொடுத்து அதை ஜனவரி முதல் தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டு வர உத்தேசித்திருக்கிறது. தற்சமயம் ஒரு ஸ்தாபனத்தில் 51 சதவிகிதப் பங்கு இலங்கையர்களுக்கு இருந்தால் அந்த ஸ்தாபனம் இலங்கையர் ஸ்தாபனமாகக் கருதப்பட்டு வருகிறது. இனி நூற்றுக்கு நூறு பங்கு இலங்கையருக்குச் சொந்தமாக இருக்கும் ஸ்தாபனங்கள் மட்டுமே இலங்கையர் வர்த்தக ஸ்தாபனமாகக் கருதப்படும். அவைகளுக்கு மட்டுமே ஏற்றுமதி இறக்குமதி லைசென்சுகள் வழங்கப்படும். இதன்படி தற்சமயம் இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகத்துக்காகப் பதிவு செய்து கொண்டுள்ள பல வர்த்தகர்கள் லைசென்சுகளை இழக்க நேரிடும்.

— ரஜனி

இலங்கைக் கடிதம்



பனாமா
இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco leaves.
செழுமையான வர்ஜீனியாப் புகையிலை
சீர்நிரவிய கலவை
புதுமை மயமானது
GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD
விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட். பம்பாய்-56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது
GT. (P) 632 TM
Greens' Advtg.

வளரும் விஞ்ஞானம்

அகர வரிசையில் வெளியாகியுள்ள பல புத்தகங்களைக் கொண்ட கலைக் களஞ்சியம் (தமிழ் என்ஸைக்ளோபீடியா) இருக்கிறது. அவற்றின் எடையையும் நீங்கள் அறிந்து கொள்கிறீர்கள். பிறகு அவற்றை விலைக்கு வாங்கியுள்ள நீங்கள் ஒவ்வொரு புத்தகத்திலும் உங்கள் பெயரை எழுதுகிறீர்கள். இப்படி உங்கள் பெயரை எழுதியதால் அந்தக் கலைக் களஞ்சியப் புத்தகங்களின் எடை எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது? சிகரெட் புகையை ஊதி வெளிப்படுத்துகிறான் ஒருவன். அந்தப் புகையின் எடை என்ன?



'இதையெல்லாம் யாரால் கணக்கிட முடியும்?' என்று நினைக்காதீர்கள். அந்த எடையையும் கச்சிதமாகக் கண்டுபிடித்துக் கூறக்கூடிய கருவியைத் தயாரித்திருக்கிறார்கள் அமெரிக்காவிலே! (படம்) எட்டரை பவுண்டு எடையுள்ள இந்தத் தராசு விண்வெளிக் கப்பல்களில் ஆராய்ச்சிகள் நடத்தப் பெரிதும் பயன்படுகின்றன. இத்தராசின் பல பகுதிகள் பூதக் கண்ணாடி இல்லாமல் வெறும் கண்ணால் பார்க்க முடியாத அளவுக்கு மிகச் சிறியனவாய் உள்ளன.

ஃ ஃ ஃ

விமானங்களை உயரே ஏற்றவும் கீழே இறக்கவும் விமான ஓட்டி, தன் சாமர்த்தியத்தையும் அனுபவத்தையும் மூளையையும் இன்று உபயோகிக்க வேண்டியிருக்கிறது. சில தருணங்களில் தவறு இழைத்துவிடக் கூடிய மனித அறிவை மட்டும் வருங்காலத்தில் நம்பி இருக்க மாட்டார்கள்! விமானங்கள் மேலே ஏறுவதைச் சரியானபடி கட்டுப்படுத்தும் கருவிகள் இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன! இந்தக் கருவி விமானத்தின் எடையையும் அதில் ஏற்றப்பட்டிருக்கும் சாமான்களின், மனிதர்களின் எடைகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு அதற்கேற்ப, இந்த வேகத்தில் செல்லும் விமானத்தை மேலே உயர்த்த அதற்கான விசையை இந்தத் தருணத்தில் பிடித்து இழுக்க வேண்டும் என்று விமானிக்குச் சொல்லித் தரும். தொடர்ந்து இதேபோல், விமானிக்கு இதைச் செய், அதைச் செய் என்று கட்டளை பிறப்பித்துக் கொண்டே இருக்கும். தானாக இயங்கும் இந்தக் கருவி சொல்கிறபடி காரியங்களைச் செய்துகொண்டு போவதுதான் விமான ஓட்டியின் வேலை. விமானத்தின் இன்ஜின் எவ்விதத்திலாவது பழுதுபட்டிருந்தால் அதற்கேற்ப விமானி எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கூட இந்தக் கருவி கட்டிக் காட்டும்! லண்டன் போன்ற பெரிய விமான கூடங்களில் விமானங்கள் பல அடிக்கடி ஏறி இறங்குவதால் ஏற்படும் சத்தம் அந்த நகரவாசிகளுக்குத் தொல்லை கொடுக்கும். இந்தக் கருவி அதைக்கூடத் தவிர்த்து, இந்த மார்க்கமாகப் போனால் நகரில் வாழும் மக்களுக்கு விமானத்தின் ஓசையால் தொந்தரவு ஏற்படாது என்று சொல்லித் தருமாம்! இந்தக் கருவி பெருமளவுக்கு உபயோகத்துக்கு வந்த பிறகு விமானங்கள் மேலே ஏறும்போது ஏற்படும் விபத்துக்கள் கணிசமாகக் குறைந்துவிடும். ஒரு கோடி முறை விமானங்கள் மேலே ஏறினால் அதில் ஒருதடவை சிறு விபத்து நேரலாம், அவ்வளவுதான்!

ஃ ஃ ஃ

வீட்டில் வளரும் பூனைகளைப் பற்றி ருஷ்ய உயிரியல் நிபுணர்கள் சில அதிசயமான உண்மைகளைக் கூறுகிறார்கள். பூனைக்கு மற்றப் பூனைகளைக் கண்டால் பிடிக்காது. தான் வசிக்கும் இல்லத்தின் பக்கம் வேறு எந்தப் பூனையும் அணுக இடம் தராது. பூனை தன் இரையின் கழுத்தைக் குறிபார்த்துக் கவ்விக் கொல்லும். பொம்மை எலியைப் பரீட்சார்த்தமாகப் பலவித கோணங்களில் மாற்றிவைத்தாலும் கூடப் பூனை அதன் கழுத்தையே கவ்வும். நாய் வாலை ஆட்டினால் சந்தோஷத்தையும் நேராக உயர்த்திக் கொண்டால் பயம் அல்லது கோபத்தையும் குறிக்கும். பூனைக்கு இவை நேர்மாறான அர்த்தத்தைக் குறிக்கின்றன! அதனால்தான் இரண்டுக்கும் இடையே சதா பகைமை இருக்கிறது என்றாலும் பூனை பயந்து ஓடாமல் எதிர்க்கத் துணிந்தால் நாய் போரிட அஞ்சி ஓடிவிடும் என்பது நிச்சயம்! பழகிய இடத்தைவிட்டுப் பிரியப் பூனைக்குப் பிடிக்கவே பிடிக்காது. மார்ட்டின் என்ற அமெரிக்க டாக்டர் வேறு ஊரில் குடி புகுந்தார். அவருடைய பூனை புதிய வீட்டிலிருந்து கிளம்பி ஒரே மாதத்தில் 1120 கிலோமீட்டர் தூரத்தைக் கடந்து பழைய வீட்டுக்கே சென்றுவிட்டது! பூனைகளது மீசை மட்டுமின்றி அதன் உடல் ரோமங்கள் ஒவ்வொன்றும் சிறு சலசலப்பையும் அதற்கு உணர்த்திவிடும். பூனையின் நரம்புக் குவியல்களின் அமைப்பு அவ்வளவு சிறப்பாக உள்ளது. பூனையை எப்படிக் கீழே போட்டாலும் அது நேராக வந்து நிற்பது ஏன்? உருண்டு விழும் பூனை தன் கால்களையும் வாலையும் உடம்புடன் ஒட்டினாற்போல் வைத்துக் கொண்டு விடுகிறது. நான்கு கால்களும் கீழ் நோக்கி இருக்கும்போது அதன் உடலின் சுழற்சி நின்றுவிடும். அப்படியே நேராகக் கீழ் நோக்கி விழும். கடைசி வினாடியில் பூனை கால்களை நீட்டித் தரையில் நின்று சமாளிக்கும்.

கயல்விழி

அகிலன்

விரைந்து சென்று கொண்டிருந்தன மாட்டு வண்டிகள். மௌனமாக அமர்ந்திருந்த பைந்தமிழ்க் குமரனின் சிந்தனை வேகமாகச் செயல்பட்டது. தங்களிடம் பிடிபட்டவன் ஓர் ஒற்றன் என்ற உண்மையைத் தற்போதைக்கு வெளியிடுவது உசிதமல்ல என்ற முடிவுக்கு வந்தான் அவன். அடுத்த ஊரின் எல்லையில் பொதுமக்களும் ஊர்ச் சபையாரும் அவர்களை வரவேற்கக் காத்திருந்தனர். வழியில் தங்களைக் கள்வர்கள் வழி மறித்ததாகவும் அவர்களில் சிலரைத் தற்காப்புக்காகக் கொல்ல நேர்ந்ததையும் ஊர்ச் சபையாரிடம் கூறினான் பைந்தமிழ்க் குமரன். சிறைப் பிடிக்கப் பட்டிருந்தவனை அவர்களிடம் ஒப்படைத்தான்.

ஊர்ச்சபையார் திடுக்கிட்டார்கள்: ''இந்தப் பகுதியில் வழக்கமாகக் கள்வர் நடமாட்டம் இருப்பதில்லையே!''

''போர் நடந்து முடிந்தாலே இப்படியெல்லாம் நடைபெறுவதுண்டு. மேலும் எங்களிடம் பெருஞ் செல்வம் இருப்பதாகவும் செய்திகள் பரவியிருக்கின்றன. அதைக் கேட்டு வந்திருப்பார்கள்.''

அவர்களுடைய பகுதிகளில் இப்படிப்பட்ட தீமைகள் நடப்பதென்றால் அதனால் அவர்கள் எவ்வளவு துன்புறுவார்கள் என்பது பைந்தமிழ்க் குமரனுக்குத் தெரியும். மக்களை எவ்வித அச்சமும் சூழாமல் காக்கும் கடமை அவர்களுக்கு உண்டு. ஆகவே அதை அவர்கள் தங்களுடைய குறைபாடு என்றே கருதினார்கள்.

காயம் பட்டிருந்த புலவர்களுக்கு இரவோடு இரவாகச் சிகிச்சைகள் நடைபெற்றன. எல்லாம் விரைவில் ஆறிவிடக் கூடிய சிறு காயங்கள்.

''ஐயா! இனி ஓர் ஊரிலிருந்து அடுத்த ஊருக்கு எங்களைக் கொண்டு போய்ச் சேர்க்கும் பொறுப்பு, எங்களை அனுப்பி வைப்பவர்களைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும்'' என்றார் ஆதிச்சதேவர்.

''அவ்வாறே செய்கிறோம்.''

மறு நாள் அந்த ஒற்றனுக்குக் கள்வனுக்குரிய தண்டனையளித்துச் சிறையில் தள்ளினார்கள்.

''பிரபு! தாங்கள் அவனைக் கள்வனாகவே மாற்றி விட்டீர்கள். அவனும் தன்னைக் கள்வனென்று ஒப்புக் கொண்டிருக்கிறான்!''

அம்பலக் கூத்தன் தனிமையில் பைந்தமிழ்க் குமரனிடம் பேசினான்.

''வேறு என்ன செய்வது?'' என்றான் பைந்தமிழ்க் குமரன். ''அமைச்சர் சோழ வல்லபரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒற்றன் என்று அவன் தன்னைக் கூறிக்கொள்ள முடியுமா? பாண்டிய நாட்டின் ஒற்றனல்ல இவன். அவருடைய சொந்த ஒற்றன். அரசருக்குத் தெரியாமல் அவர் வைத்திருக்கும் பணியாளன்.''

'' அமைச்சருக்கு இந்தச் செய்தி எட்டினால்?''

''செய்தி எட்டினால்? எட்டினால்?'' என்று தன்னையே கேட்டுக் கொள்வது போல் ஒருகணம் தடுமாறினான் பைந்தமிழ்க் குமரன். ''கட்டாயம் இது அவருக்கு எட்டிவிடும். வந்தவர்களில் ஒருவன் தப்பி ஓடி விட்டானல்லவா?''

''என்ன நடக்கும்?''

''வெளிப்படையாக ஏதும் செய்ய மாட்டார். இந்த



ஒற்றனைச் சிறையிலிருந்து விடுவிக்க முயன்றால் அவர் செய்கை வெளிப்பட்டு விடும். ஆகவே, அடுத்த நடவடிக்கை களைப் பற்றி ஆலோசனை செய்வார்.''

''நாம் என்ன செய்வது?''

''வருவதெல்லாம் வரட்டும். நம் முடைய பாதை எளிமையான பாதை யில்லையே !''

அரண்மனையின் அரச போகத்தை விட்டு, அங்கே தன்னோடு ஒருவனாக உறவாடித் துன்பங்களை மேற்கொண்டு வாழும் சுந்தர பாண்டியனின் பேச்சு, அம்பலக் கூத்தனின் உள்ளத்தை நெகிழ்ந்து உருகச் செய்தது.

ஏழாம் அத்தியாயம்

புலவன் அளித்த பரிசு

சயங்கொண்ட சோழ வல்லபரின் ஒற்றர் தலைவனான மாவலிராயன் சிற கொடிந்த பறவையாக அந்தப் பகுதி களில் சில தினங்கள் தலைமறைவாகத் திரிந்தான். வந்த காரியத்தை முடிக் காமல் திரும்புவதற்கு அவனுக்கு மனம் இல்லை. எப்படியாவது பைந்தமிழ்க் குமரனைப் பிடித்து அமைச்சரிடம் கொண்டு போய் நிறுத்திவிட வேண்டும் என்பது அவன் திட்டம்.

எஞ்சியிருந்த ஒரே துணைவனும் சிறையில் அடைக்கப்பட்டு விட்டான். மாவலிராயனிடம் கையில் பொருள் இருந்தது. ஆனால் துணைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. பைந்தமிழ்க் குமர னைச் சுற்றிலும் எப்போதுமே கூட்டம் இருந்தது. மேலும் பொருளாசை காட்டி மாவலிராயனால் சில ஆட் களைக் கூடத் தன் பக்கம் சேர்க்க முடிய வில்லை. பாண்டிய நாட்டு மக்களோ தங்களிடமிருந்த எல்லாவற்றையும், அப் புல வனின் காலடியில் கொட்டிக் கொண் டிருந்தார்கள்.



அமைச்சரைச் சந்திப்பதற்குத் துணிவில்லாமல் உழன்று கொண்டிருந்தவன் கடைசியில் வேறு வழியின்றி மதுரைக்கு வந்தான். ''தங்கள் முகத்தில் விழிப்பதற்கே எனக்கு நாணமாக இருக்கிறது'' என்று தொடங்கி, நடந்தவற்றைக் கூறி முடித்தான்.

அவன் கூறியதை அவர் அமைதியாகக் கேட்டு விட்டு, ''உன் சக்திக்கு மீறிய விஷயம் என்று தோன்றுகிறது: உடனே நீ திரும்பியிருக்கலாம்'' என்று கூறினார். ஒற்றர்களில் ஒருவன் சிறைப்பட்டது பற்றி அவர் சிறிதும் கவலைப்பட வில்லை. சிறைப்பட்டவன் தன்னைக் கள்வனென்று சொல்லிக் கொண்டானு என்பதை மட்டிலும் அறிந்து கொண்டார்.

''ஆமாம், அந்தப் புலவன் யார் என்பதைத் தீவிரமாக விசாரித்து அறிந்தாயா?''

''ஊருக்குள் பலர் பல கதைகளைச் சொல்லுகிறார்கள். கொடுங்குன்றத்து மலைக் குகைக்குள் யாரோ ஒரு சித்தர் வாழ்ந்து வந்தாராம். அவருடைய சீடன் இவன். நன்றாகத் தமிழ் பயின்றிருக்கிறான். சித்தர் எங்கேயோ வடக்கே போய் விட்டார். இப்போது இவனை எல்லோரும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடுகிறார்கள். அவனிடம் தெய்வ சக்தி இருப்பதாகவும் நம்புகிறார்கள்.''

''நீ என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்டார் அமைச்சர்.

''ஏதோ ஒரு சக்தி இல்லா விட்டால் அவனைச் சுற்றிலும் மக்கள் இப்படிக் கூட்டம் கூட்டமாய்த் திரள மாட்டார்கள்'' என்றான் மாவலிராயன். ''வள்ளுவருக்கு அவன் விளக்கம் சொல்லுவதை ஒரு தனிக் கலையாகக் கற்றிருக்கிறான். ஊர்ச் சபையாருக்கும் ஆளுங்கணத்தாருக்குமே அவன் ஒழுக்க விதிகளைத் துணிந்து சொல்லுகிறான். அவனிடம் தெய்வ சக்தி இருக்குமென்றே நானும் நினைக்கிறேன்.''

சயங்கொண்ட சோழ வல்லபர் தமக்குள் அவனைப் பற்றி ஒரு முடிவுக்கு வர முயன்றார்: நாடு ஒரு பெரிய அதிர்ச்சியிலிருந்து மீண்டிருப்பதால், மக்களுக்கு ஏதாவது ஒரு நம்பிக்கை தேவையாக இருக்கிறது. வள்ளுவரின் பெயரால் அவன் நம்பிக்கையைப் பரப்புகிறான் போலும். மேலும் அவனுடைய இருப்பிடத்துக்கு அருகில் எல்லைப் போர் நடந்திருப்பதால், அவன் அதை நேரில் கண்டிருப்பான். அந்த உணர்ச்சியால் உந்தப்பட்டு, குகைக்குள்ளிருந்து மக்களிடையே வந்திருக்கிறான்.

''படையைப் பெருக்கிச் சோழர்கள் மீது போர் தொடுக்க வேண்டுமென்று அவன் மக்களைத் தூண்டி விடுகிறானு?'' என்று கேட்டார்.

''இல்லை; போர் வேண்டுமென்று அவன் பேசுவதே யில்லை'' என்றான் ஒற்றன். ''அடிக்கடி 'புலவர் படை' என்ற சொற்களைத்தான் கூறுகிறான். அரசரின் செங்கோல் ஆளுங்கணத்தாரிடமும் ஊர்ச் சபையாரிடமும் இருக்கிறதாம். அவர்கள் சான்றோர்களாக இருந்தால் குடிமக்களுக்குத் துன்பமே கிடையாதாம்.''

''கற்பனைப் புலவனின் அற்புதமான கற்பனை!'' என்று கூறி நகைத்தார் சோழ வல்லபர். ''போகட்டும்! அவன் வள்ளுவரைப் படித்ததால் சித்தப் பிரமை கொண்டிருக்கிறான் என்று தெரிகிறது. வள்ளுவருக்கு முன்பே கயமைத்தனமும் உண்டு; தன்னலமும் உண்டு. எதற்கும் உனக்குத் துணையாக ஓர் ஆளை அனுப்புகிறேன். அவனைக் கண்காணித்து அவ்வப்போது எனக்குச் செய்திகள் அனுப்பிக் கொண்டிரு.''

கயல்விழியின் கூத்தைப் பற்றிக் கூறி, ''அவள் கூத்தைப் பார்த்தவுடன் பாண்டி மக்களுக்கு ஆவேசமே வந்து விடுகிறது!'' என்றான்.

''பெண்களைப் பொருட் படுத்த வேண்டாம். அவர்களுக்கு எவ்வகையிலும் தீங்கிழைக்கக் கூடாது என்பது சக்கரவர்த்திகளின் கடுமையான கட்டளை. போரால் ஏற்பட்ட ஆத்திரம் பாண்டியர்களிடம் இருக்கத்தான் செய்யும். கூத்து நடத்தி அதை அவர்கள் தீர்த்துக் கொள்ளட்டுமே!''

மாவலிராயனை அனுப்பி விட்டுச் சிறிது நேரம் சிந்தனை செய்தார் அமைச்சர். ஆளுங்கணத்தாரிடமும் குடிமக்களிடமும் ஒருவன் இப்படிச் செல்வாக்குப் பெற்றுவருவதை அவரால் பொறுக்க முடியவில்லை. ஆயுத வளர்ச்சியை விட அறிவு வளர்ச்சி ஆபத்து நிறைந்தது. உடனடியாக அவனால் ஏதும் ஆபத்து விளையாதென்றாலும், திடீரென்று சோழ சாம்ராஜ்யத்துக்கு எதிராக அவன் குடிமக்களைத் திரட்டத் துணிந்தால்?...

பொறுத்திருந்தார் சயங்கொண்ட சோழ வல்லபர். மாவலிராயனிடமிருந்து ரகசிய ஓலைகள் அவருக்கு வரத் தொடங்கின. ஊருக்கு ஊர் பெரும் பொருள் திரட்டுவதில் கண்

ணும் கருத்துமாக இருந்தாலும் அந்தப் புலவன். மக்களாகவே அவனிடம் கொண்டு வந்து குவித்தார்களாம்.

பாண்டியரிடமே சொல்லி அவன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் வந்து விட்டதைக் கண்டார் அமைச்சர். அவனுடைய புகழ் மதுரை மாநகருக்கே எட்டத் தொடங்கி விட்டது. அரசரும் இதற்குள்ளாக அவனைப் பற்றிக் கேள்வியுற்றிருப்பார்.

குலசேகர பாண்டியர் இன்னும் தமது அரண்மனை மாளிகைகளையோ அதன் மதில்களையோ புதுப்பித்துக் கொள்ள வில்லை. இடிபாடுகளுக்கிடையில் எஞ்சியிருந்த அந்த ஒற்றை மண்டபத்தையே தமது அரண்மனையாக்கிக் கொண்டிருந்தார். அரசியல் அலுவல்கள் நடைபெறுவதற்காக அங்கங்கே சிறு சிறு பணி மனைகள் மட்டிலும் புதியனவாகக் கட்டப் பெற்றிருந்தன. மதுரை மாநகரில் உள்ள குடிமக்களுக்கு அவர் வீடுகள் கட்டச் செய்தாரே தவிர, தம்முடைய வசதியை அவர் பெருக்கிக் கொள்ளவில்லை.

பாண்டியரைச் சந்தித்த அமைச்சர் வழக்கம் போலவே அன்றும் அரசரிடம் அரண்மனை எழுப்புவது பற்றி வற்புறுத்தினார். அமைச்சருக்கு அதில் ஆர்வமில்லை; மன்னரை மகிழ்விப்பதற்காக அவர் பேசிய பேச்சு.

''அரசே! அரண்மனையும் கோயிலும் பெரிதாக இருந்தால்தான் மக்களுடைய பயபக்தியை நாம் பெற முடியும். கடவுளின் கோயிலையும் அரசரின் திருமாளிகையையும் ஒன்றாக மதிப்பவர்கள் நம்முடைய மக்கள். குடிமக்களின் மனத்தில் தாங்கள் உயர்ந்து விளங்க வேண்டும் என்பதற்காகவே நான் இதைக் கூறுகிறேன், முதலில் நாம் அரண்மனையைத் துரிதமாகக் கட்டி முடிக்க வேண்டும்.''

''குடிமக்களின் மனத்தில் நம்முடைய அரண்மனை உயர்ந்து விளங்க வேண்டும் என்பதில்லை; நாம் உயர்ந்து விளங்கினால் போதும்!'' என்றார் பாண்டியர். ''போருக்குப் பின் வீடு இழந்தவர்களில் இன்னும் ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் மழையிலும் வெயிலி



கோளாறும் குழப்பமும்!

காலஞ்சென்ற பிரதமர் நேரு ஒருமுறை சென்னைக்கு வந்தபோது ஐலண்ட் மைதானத்தில் ஒரு பெரும் பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கான ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. பிரதமர் பேசிக் கொண்டிருந்தார். ஒரு மூலையில் ''ஒன்றும் கேட்கவில்லை'' என்று கூச்சல் எழுந்தது. எந்த ஒலிபெருக்கியில் கோளாறு என்று தெரியவில்லை. தலைவர்களெல்லாம் ''அமைதியாயிருங்கள்!''- என்று கேட்டும் பயனில்லை. உடனே நேரு ''என் பேச்சு யாருக்குக் கேட்கிறதோ அவர்களெல்லாம் கையைத் தூக்குங்கள்'' என்றார். உடனே பல கைகள் எழுந்தன. ''கேட்காதவர்கள் கை தூக்குங்கள்'' என்று மீண்டும் கூற, அதற்கும் சிலர் கை தூக்கினார்கள். உடனே நேருஜி ''கேட்கவில்லை என்றால் எப்படிக் கேட்டது?'' என்று பலத்த சிரிப்புக்கிடையே வினவினார்.



லும் அவதியுற்றுக்கொண் டிருக்கின்றன. மட்டியூரை முதலில் புதுப்பிக்க நினைத்தேன். இறைவனருளால் எவனோ ஒரு புலவன் அதைச் சாதித்திருக்கிறான். நம்முடைய தனபண்டாரத்தின் நிலைமையையும் தாங்கள் அறிந்திருக்கிறீர்கள்.''

மட்டியூர்ப் பேச்சு வந்தவுடனேயே, அதுவே ஏற்ற சமயம் என்று தோன்றியது அமைச்சருக்கு.

''தனபண்டாரத்தை நிரப்புவதற்கு நாம் மக்களிடம் இரட்டிப்பாக இறை செலுத்தும்படி கட்டளையிட வேண்டியதுதான். போர் நடக்காத பகுதி மக்கள் இறை செலுத்தக் கடமைப் பட்டவர்கள்.''

வருத்தத்துடன் சிரித்தார் பாண்டியர். ''போர் என்ற காரணத்தால் அவர்கள் ஏற்கனவே நமக்குப் பெரும் பொருள் கொடுத்தவர்கள். இனியும் அவர்களைத் துன்புறுத்தினால் வெறுப்புத்தான் மிஞ்சும். மக்களின் வெறுப்பின் மேல் எந்த அரசுமே புது மாளிகைகள் எழுப்பிக் கொண்டு வாழ முடியாது.''

''மக்களிடம் பொருள் இல்லாமலா இன்று மட்டியூர் முளைத்திருக்கிறது?'' என்று கேட்டார் அமைச்சர். ''நம்முடைய அரசின் சட்டங்களைத் துச்சமாக மதிக்கும் அதிகாரத்தை எவனோ ஒரு நாடோடிப் புலவன் கைப்பற்றியிருக்கிறான். நம்முடைய அரசுக்கு இதைவிட இழிவு வேறொன்றுமில்லை!''

துணுக்குற்றார் பாண்டியர்; ''அமைச்சரே!'' என்று பதறினார்.

''ஆம், அவனுடைய அதிகாரம் நாடெங்கும் பரவி விடும் போல் தெரிகிறது. குடி மக்கள் அவனைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டார்கள்.''

''அத்தகைய ஒரு சான்றோனை நாமல்லவோ அழைத்து வந்து நம் சபையில் வைத்துக் கௌரவிக்க வேண்டும்? நாமல்லவோ அவனுக்குப் பெருமைகள் செய்ய வேண்டும்? நமது பாண்டிய மண்டலத்தின் பெருமையை நமக்கே சுட்டிக் காட்டி யிருப்பவன் அவனல்லவா...?''

பாண்டியர் உற்சாகத்தோடு அந்தப் புலவனைப் பாராட்டத் தொடங்கி விட்டார். சயங்கொண்ட சோழ வல்லபருக்கு மன்னரின் புகழுரைகளைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

''பரிசில்கள் பெறுவதற்காகப் பாடிப் பிழைக்கும் ஒருவன்...''

''அமைச்சரே!'' என்று குறுக்கிட்டு விட்டு, விழுந்து விழுந்து சிரித்தார் பாண்டியர். இதைப் போய் ஒரு மனவேற்றுமைக்குக் காரணமாக்க விரும்பாதவர் போல் அவர் சிரித்தார். ''பரிசில்கள் பெறுவதற்காகப் பாடுகிறார்களா புலவர்கள்! நம்மால் வள்ளுவருக்கு எந்தப் பரிசைக் கொடுக்க முடியும்? இந்த உலகம் முழுதும் கொடுத்தாலும் ஒரு குறளுக்கு ஈடாகுமா? இராமகாதை பாடிய கம்பநாட்டாழ்வாருக்குச் சோழ சாம்ராஜ்யத்தையே கொடுத்தாலும் அவர் பாடலுக்கு முன்பு அது நிற்குமா? நீங்கள் சோழ நாட்டைச் சார்ந்தவராக இருந்தும், குலோத்துங்கரின் வள்ளல் தன்மையை உணர்ந்தவராக இருந்தும் இப்படி நினைக்கிறீர்களே! தங்களை மறந்து பணியாற்றும் அந்தப் புலவர்களது பூத உடலைக் காக்க வேண்டியது நம் கடமை என்பதால், நம் நன்றி உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்காக அவர்களுக்குக் காணிக்கை அளிக்கிறோம்!''

அப்போது வெளியில் படை திரண்டு வருவது போல் பேரொலி எழுந்தது. கடல் அலைகளின் பேரிரைச்சல் சிறிது சிறிதாக நெருங்கி வருவது போல் கேட்டது. முரசுகள், வாத்தியங்கள், குதிரைக் குளம்பொலிகள் எல்லாமே சேர்ந்து கேட்டன.

மேன் மாடத்தில் அமர்ந்திருந்த இருவரும் திடுக்கிட்டு எழுந்தார்கள். மாடத்தின் முகப்புக்குப் போய்த் தெற்கே

திரும்பினார்கள். இது என்ன ஜன சமுத்திரம்! எங்கிருந்து இது இப்படிப் பெருக்கெடுத்து வருகிறது? மதுரை மாநகரத்து மக்களும் வேடிக்கை பார்க்கத் திரண்டு விட்டார்கள்.

குதிரைகள், யானைகள், காளைகள், வண்டிகள், மனிதர்கள், மனிதர்கள், மனிதர்கள்! சயங்கொண்ட சோழ வல்லபருக்கு எல்லாம் விளங்கிவிட்டது. அவருக்கு வந்த ஓலைச் செய்தியைக் கண்டபோது அது இத்தனை சக்தியைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருந்தது என்பதை அவர் அறியவில்லை. கோவில் யானைகள் மீதும், காளை மாடுகள் மீதும் அந்தப் புலவன் குவியல் குவியலாய்ப் பொருள்களை மூட்டை கட்டி அனுப்பியிருந்தான். உணவு தானியங்கள் நிறைந்த வண்டிகளை இழுக்க முடியாமல் இழுத்துக் கொண்டு வந்தன மாடுகள். இரு புறங்களிலும் குதிரைகள்மீது காவல் வீரர்கள். உழைப்பை நல்கி ஊரை வளப்படுத்துவதற்கு உழைப்பாளர் பெரும் படையும் உடன் வந்திருந்தது.



''கோடை ரிப்பேர்...பிள்ளையார் கோடை ரிப்பேர்....!''

மண்டபத்தின் வாயிலில் யாரோ ஒருவர் ஓலையுடன் வந்திருப்பதாக அறிவித்தான் காவலன். அவர் தம்மைப் புலவர் படையைச் சேர்ந்தவர் என்று கூறினாராம்.

''உடனே அழைத்து வா!'' என்று கட்டளையிட்டார் அரசர்.

வயது முதிர்ந்த ஒரு புலவர் அங்கு வந்து, பாண்டியரை வாழ்த்தி விட்டு, ஒரு திருமுகத்தை அவரிடம் பணிவோடு நீட்டினார்.

''எங்கள் புலவர் பெருமகன் பைந்தமிழ்க் குமரன் பாண்டியப் பேரரசுக்குத் தம்முடைய அன்பு நிறைந்த வணக்கத்தைத் தெரிவிக்கும்படி கூறினார். எங்களுடைய காணிக்கையாக இதைப் போரினால் பாதிக்கப் பெற்ற மதுரைமாநகரப் பெருமக்களுக்கு அளிக்கிறோம். அரசர் திருவுளம் கொண்டு ஏற்றருள வேண்டும்!''

வரும் பொருள்களின் அளவு பற்றிய கணக்குகள் நிறைந்த ஒரு பெரிய ஓலைச் சுவடிக்கட்டை அடுத்தாற்போல் அரசரிடம் வழங்கினார் புலவர். பாண்டியருக்குப் பேச நா எழவில்லை. வெற்றிடமாய்க் கிடந்த தன பண்டாரத்தை நினைத்து அவர் இது வரை வருந்தாத நாளில்லை. இப்போதோ அந்த மண்டபம் முழுவதும் நிறைத்தாலும் இடம் போதாது.

''பாண்டிய நாட்டின் நிலப்பரப்பைவிட விசாலமான மனம் கொண்ட புலவர்பெருமக்களே! புலவர்களாகிய நீங்களே வள்ளல்களாகவும் மாறி, அன்பின் ஆட்சி எவ்வளவு உயர்ந்தது என்பதைச் சுட்டிக் காட்டிவிட்டீர்கள். இந்த நாடுள்ள அளவும் உங்களை அது மறக்காது!'' பாண்டியரின் நாத் தழுதழுத்தது.

சயங்கொண்ட சோழ வல்லபரின் கண்கள் இரத்தச் சிவப்பாக மாறின.

''புலவரே! உங்கள் தலைவன் வயதில் இளையோன் என்று கேள்வியுற்றோம். வயதில் முதிர்ந்த நீங்கள் எப்படி அவனைத் தலைவனாகக் கொள்ளலாம்?''

அரசர் முகம் இந்தக் குறுக்கீட்டால் சுருங்கியது. புலவரோ அமைச்சருக்கு உடனடியாக மறுமொழி கூறினார்.

''பாண்டியன் நெடுஞ்செழியனின் புறப்பாடல் ஒன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமக்கு வழிகாட்டியிருக்கிறது. அதையே இதற்கு மறுமொழியாகக் கூறுகிறேன்'' என்றார் புலவர்.

உடனே பாடலும் எழுந்தது:

''ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வெனாது—அவருள்
அறிவுடை யோனால் அரசுஞ் செல்லும்!''

பாண்டியரின் கண்களில் அடக்க முடியாத அளவுக்கு நீர் பொங்கியது. 'இளைய பாண்டியன் இருந்தால் அரசை அவனுக்கே வழங்கியிருப்பேனே!' என்று மனம் புழுங்கினார் அவர். **(தொடரும்)**


எழிலோவியமான
பிரிண்டுகள்
பிரிண்டுகளிலே நாகரிகத்தின் உச்சம். கண்கொள்ளா வியப்பு, பூரிப்பு, கற்பனை கடந்த வனப்பு: அவைதாம் எங்கள் வாயில்கள், சின்ட்ஸுகள், பாப்ளின்கள், மற்றும் பிற வகைகள். நவீன பாணிகளும், பழம்பெரும் பாணிகளுமாக, பல்வேறு வண்ண வகைகளிலே கொள்ளைகொள்ளும் உங்களை. சால்வார் கமீஸ் உடுப்பாக, நல்லாடையாக, சேலையாக, ஒளிதவழும் விளையாட்டுடையாக, உங்களை நாகரிக எழிலோவியமாக்கக் காத்திருப்பவை. உங்கள் உள்ளம் விரும்பும் வனப்போடு உருப்பெற்ற நெசவு.
சாயாஜி மில்ஸ் நம்பர் 1, பரோடா
அஹமதாபாத், சாயாஜி மில்ஸ் லிமிடெட்டின் ஒரு பிரிவு.
கப்பலட்சுமி மில்ஸ் லிட்., கேம்பே.

பீக்கிங்கில் 55 நாட்கள்

ஒரு சின்னஞ் சிறு ஆதாரத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு பெரிய படத்தைச் சிருஷ்டி செய்துவிட்டார்கள் என்ற பிரமிப்புத்தான் ஏற்படுகிறது.

சீன வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டமான பாக்ஸர் போராட்டத்தை அமெரிக்க நோக்கினின்று பார்த்துப் புனையப்பட்ட அற்புதமான சரித்திரப் படம் இது.

1900ல் சீனு மிகத் துர்த் தசையில் இருந்தது. ஜப்பானிடம் படுதோல்வியுற்றிருந்தது. நாட்டில் வறுமையும் பஞ்சமும் தலைவிரித்தாடின. மேல் நாட்டு அரசாங்கங்கள் வேறு, வர்த்தகத் தொடர்பும் இன்னும் பலவிதத் தொடர்புகளும் கொண்டு நாட்டில் குடியேறியிருந்தன. இந்நிலையில் மேற்கத்திய நாட்டுச் சீனத் தூதரகங்களுக்கும் சீன மக்களுக்கும் இடையில் விரோதமும் பெருத்த கலவரமும் ஏற்பட்டது. சீனர்களின் எதிர்ப்புக்களை அந்த 500 பேர் கொண்ட வெளி நாட்டினர் பீக்கிங்கில் 55 நாட்கள் சமாளித்ததே இப் படத்தின் முக்கிய அம்சம்.

இந்தக் கலவரத்தில் ஓர் அமெரிக்க மேஜர் தனது சிறு படையுடன் கலந்துகொண்டு பிரிட்டிஷ் தூதருக்கு உதவி, போரின் திசையையே மாற்றிவிடுகிறான். இதற்கு ஆதாரம் சரித்திரத்தில் மிக மெல்லியதாக இருக்கிறது. அதனால் என்ன? வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்ற முறையில் அந்தச் சிறிய ஆதாரத்தைக் கொண்டு அமெரிக்கத் தளபதியின் வீரம், பொறுமை, அநீதியைக் கண்டு பொங்கும் மனப்பான்மை, காதல் ஆகிய எல்லா நற்பண்புகளுமே வெளிப்படும்படி திரை ஓவியத்தை அமைத்திருக்கிறார்கள்.

அமெரிக்கப் படையின் தளபதியாக நடிக்கும் சார்ல்டன் ஹெஸ்டன், முந்தைய ஒரு படத்தில் பெரிய கத்திச் சண்டை வீரராக நடித்துப் பெயரெடுத்தவர். இப் படத்திலும் அவர் கத்திச் சண்டை போட வாய்ப்பை டைரக்டர் உண்டாக்கி, ரஸிகர்கள் கத்திச் சண்டை போடப் போகிறார் என்று எதிர்பார்க்கும் தருவாயில் அதை உதறி விட்டுச் சாதாரணமாக நடந்து செல்லுமாறு காட்சியை அமைத்திருப்பது வரவேற்கத் தக்க திருப்பமாக இருக்கிறது!

பிரிட்டிஷ் தூதுவரின் சின்னஞ்சிறு மைந்தன் சீனத் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி மடியும்போது அவனுடைய தாய் பிரலாபிக்கும் காட்சி நெஞ்சைத் தொடுவதாகவும் சிந்தனையைக் கிளறுவதாகவும் இருக்கிறது. பெரியவர்கள் தவறு செய்து சண்டை போட்டுக் கொண்டு ஒரு பாபமும் அறியாத குழந்தையைக் கொல்வானேன் என்று அந்தத் தாய் கேட்கும்போது யாருடைய மனம்தான் நெகிழாது?

மாபெரும் கோட்டை, கொத்தளங்கள், போர்க் காட்சிகள், அரச சபைக் காட்சிகள், பிரம்மாண்டமாகத் தீமூண்டு எரியும் காட்சிகள் — இப்படிப் பற்பல பிரமிப்பூட்டும் காட்சிகளுக்கு இடை இடையே நெஞ்சத்தை நெகிழவைக்கும் மனப் பண்புகளை எடுத்துக் காட்டும் காட்சிகளுக்கும் குறைவில்லை.

சாதாரண ஆங்கிலப் படங்களில் காண முடியாத மற்றோர் அதிசயமும் இப்படம் அளிக்கிறது — கிட்டத் தட்ட மூன்று மணி நேரம் படம் ஓடுகிறது!



ஆவாகார்டினரும் ஹெஸ்டனும்



திரைத் துணுக்குகள்

காதலின் உருவகம்

குறிப்பிட்ட ஒரு தலைப்பைக் கொடுத்து அதற்கேற்ப இன்றைய சூழ்நிலையைச் சித்திரிக்குமாறு ஓவியர்களைக் கேட்டுக் கொள்ளும் பழக்கம் பாரிஸில் சென்ற பதின்மூன்று வருஷங்களாக இருந்து வருகிறது. இந்த வருஷம் காதல் என்ற தலைப்பு தரப்பட்டது. ஓவியர்கள் பலர் இன்றையச் சமூகச் சூழ்நிலையில் காதலைச் சித்திரித்தார்கள். அவர்கள் தீட்டிய படங்கள் வழக்கம் போல் ஒரு கண்காட்சியில் இடம் பெற்றன. கெட்டிக்காரரான ஓவியர் ஜகெனா பிரபல திரைப்பட நட்சத்திரம் ப்ரிக்கிட்டி பார்டாட்டின் மதி முகத்தையே காதலாக உருவகப்படுத்தி ஓவியம் தீட்டியிருந்தார். புகழ்மாலைகள் அவருக்கு வந்து குவியக் கேட்கவா வேணும்!



எத்தனை பாடல்கள்?

பழங்காலத்திய படங்களில் பாட்டுக்குத்தான் பிரதானமான இடம். அந்நாட்களில் ஒவ்வொரு படத்திலும் எத்தனை பாடல்கள் இருந்தன என்று பார்த்தால் வியப்பாக இருக்கும்.

இதோ சில உதாரணங்கள்: கன்னியின் காதலி-15, சாவித்திரி-16, ஆதித்தன் கனவு-17, ராஜ முக்தி-18, ஹரிதாஸ்-19, ஸ்ரீவள்ளி-20, ஜகதலப்பிரதாபன்-25, திருநீலகண்டர்-26, பவளக்கொடி-28, சிவகவி-29.

சினிமா ராணி

பதினோராவது வயதிலேயே நாடக மேடையில் காலடி வைத்த டி. பி. ராஜலட்சுமி பல நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றார். பிறகு, தமிழ்ப் படங்களில் தோன்றிப் புகழ் ஏணியின் சிகரத்தை அடைந்து 'சினிமா ராணி' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். திரு ஏ. நாராயணன் 1928ம் ஆண்டு நிறுவிய ஜெனரல் பிக்சர்ஸ் கார்ப்பரேஷனில் சேர்ந்து மௌனப் படங்களில் நடித்தார் ராஜலட்சுமி. முதன் முதலில் தமிழ்பேசும் படத்தில் நடித்தவர் அவர்தான். பிரபல நட்சத்திரமான பிறகு ராஜலட்சுமி ''மிஸ் கமலா'' என்ற படத்தில் கதாநாயகியாக நடித்ததோடு அந்தப் படத்தைத் தாமே டைரக்டும் செய்தார். முதல் தமிழ் பேசும்பட நட்சத்திரமான அவர் முதல் பெண் டைரக்டர் என்ற ஸ்தானத்தை அடைந்தது அந்தப் படத்தில்தான். அது மட்டுமா? ''மிஸ் கமலா''வின் மூலக் கதை, திரைக் கதை, வசனம் எல்லாவற்றையும் தாமே எழுதி அந்தத் துறைகளிலும் ஒரு பெண் என்ற முறையில் முதல் இடம் பெற்றார். பெண் விடுதலை, பெண்ணுரிமை என்றெல்லாம் பேசப்பட்டு வந்த காலத்தில் டி. பி. ராஜலட்சுமியின் புகழ் அவைகளையெல்லாம் வருங்காலத்தில் செயலாக்க முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்தது. சில காலம் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் சென்ற மாதம் சென்னையிலுள்ள தம் இல்லத்தில் இறந்து போன செய்தி சினிமா ரசிகர்களைத் துயரத்தில் ஆழ்த்தி விட்டது.

ஹட்


டெக்ஸாஸ் பண்ணையொன்றில் மாடுகளுக்கெல்லாம் பயங்கரமான ஒரு வியாதி வந்து விட்டதை அறிந்து, மிருக வைத்தியர் அதனை மேலும் பரவ விடாமல் தடுக்க அத்தனை மாடுகளையும் சுட்டுக் கொன்றுவிட வேண்டுமென்கிறார். இதனை எதிர்த்துப் போராடத் தீர்மானிக்கிறான் ஹட். ஹட்டின் தகப்பனார் டாக்டரின் கட்டளைக்குப் பணிந்து போவது நலம் என்று கருதுகிறார். இது ஹட்டுக்குக் கோபமூட்டுகிறது. தன் தகப்பனருக்கு மூளைக் கோளாறு என்று சொல்லிப் பண்ணையின் நிர்வாகத்தைத் தானே கைப்பற்ற எண்ணுகிறான். மூன்று அகாதமி பரிசுகளைப் பெற்ற படம் ஹட். (Hud) சென்னை மினர்வா தியேட்டரில் திரையிடப்பட்டுள்ள இப்படம் சிறந்த காமிரா கலை நுணுக்கம், சிறந்த நடிகை, சிறந்த துணை நடிகர் ஆகிய மூன்று துறைகளுக்கான அகாதமி பரிசுகளைத் தட்டிக் கொண்டு போயிருக்கிறது.

அதோடு மட்டுமின்றி கதாநாயகன் 'ஹட்'டாகச் சிறப்பான முறையில் நடித்திருக்கிறார் பால் நியூமன் இந்தப் படத்தில்.



'ஹட்' திரைப்படத்தில் ▶
ஒரு காட்சி.


ASP/GM-33 TM
தொல்லை
பல் முளைக்கும்போதா?
காற்று பிரியும்போதா?
வயிற்றுவலியாலா?
மானேர்ஸ்
கிரைப் மிக்ஸ்சர்
கொடுத்து மீண்டும் புன்னகை தோன்றக் காணுங்கள்
இக்காலத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் தருகின்றனர். அது இனிய சுவையுள்ளது; சுகாதார முறைப்படி 'பேக்' செய்யப்பட்டுள்ளது.
அதிர்ஷ்டக் குழந்தைகளுக்கு மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் கிடைக்கிறது
இப்பொழுது
அழகான, புதிய சிவப்பு நீல நிறங்களில் 'பேக்' செய்யப்பட்டு கிடைக்கிறது
GEOFFREY MANNERS & COMPANY LIMITED



அப்பாவின் ஆஸ்தி

உமாசந்திரன்

[ஆபீசிலிருந்து வீடு திரும்பிய ராமு ஆயாசத்துடன் நாற்காலியில் உட்காருகிறன். மறு கணமே அவன் முதுகில் சுரீரென்று குத்துகிறது.]

ராமு (துள்ளியெழுந்து): ஆ! என்னது ? யார் செய்த வேலே இது? முனியா! முனியா!

முனியன்: என்னங்க? (இவ்வாறு கேட்டுக் கொண்டே பரபரப்புடன் அங்கு வருகிறன்.)

ராமு: என்னவா? நீ செய்த வேலேதாளு இது ?

முனி: அடேடே! அந்த ஆணி உங்க முதுகிலே குத்திடுச்சா, ஏங்க?

ராமு: துக்கமா விசாரிக்கறே, ஏண்டா ! வீட்டிலே இருக்கிற ஆணிகளே யெல்லாம் பாழாக்கறதுன்னு கிளம்பியிருக்கயா ?

முனி: அம்மா ரொம்ப நாளா சொல்லிக் கிட்டிருந்தாங்கய்யா. அது இன்னிக்குத்தான் நெனேப்பு வந்திச்சு.

ராமு: ஓகோ! அம்மாவோட சூழ்ச்சி தாளு இது?

முனி: நான் என்னமோ பிரமாத ரிப்பேர் இருக்கும்னு நினேச்சேன். அப்படி ஒண்ணும் இல்லீங்க. ரெண்டு ஆணி கழண்டு போனதிலுலேதான் அப்படி ஆடிக்கிட்டிருந்திச்சு ! இப்ப பாருங்க...ஆணி அடிச்சப் புறம் முதுகு உறுதியாயிட்டுது.

ராமு: ஆமாம். தன்னுடை முதுகை உறுதியாக்கிட்டு உக்காற வங்க முதுகைப் பதம் பார்க்கிறது.

முனி: ஆணியை மடக்கி அடிச் சிட்டாச் சரியாப் போயிடுமுங்க.

ராமு: சரியாப் போறதெல் லாம் இருக்கட்டும். இப்போ, முன்னே இதைத் தூக்கிக்கிட்டுப் போயி லம்பர் ரூமிலே போடு, தெரிஞ்சுதா?

[இதைக் கேட்டுக் கொண்டு ராமுவின் மனேவி ஜானகி உள்ளிருந்து வருகிறள்.]

ஜானகி: எதை லம்பர் ரூமிலே கொண்டு போடச் சொல்லறீங்க?

முனி: கேட்டிங்களாம்மா? இந்த நாற்காலியைத் தூக்கிக் கொண்டு போய் லம்பர் ரூமிலே போடணுமாம் !

ஜானகி: என்ன? லம்பர் ரூமிலேயா? இந்த நாற்காலியையா... ?

ராமு: தப்பு! லம்பர் ரூம் இல்லே. வெந்நீர் ரூமிலே கொண்டு போடு. நல்ல ஜாதி மரம். நின்னு எரியும்.

ஜானகி: அதென்ன உங்களுக்கு. எங்கப்பா கொடுத்தது எதுன்னுலும் இப்படிக் கண்ணேக் கரிக்குது!

ராமு: உங்கப்பா கொடுத்ததா? ஆமாம்! மறந்தே போயிட்டேனே! அப்படிச் சொல்லு. இல்லாட்டா கேவலம் ஒரு நாற்காலியாலே மனுஷனுக்கு இவ்வளவு உபத்திரவம் இருக்குமா என்ன?

ஜானகி: என்ன சொன்னீங்க?

ராமு: உங்கப்பாவுக்கு நல்ல மனசுதான் ஜானகி, இல்லேங்கலே. ஆளு அவர் வாங்கற சாமான்களுக்கு அவரோட நல்ல மனசு எங்கே தெரியுது பாவம்!

ஜானகி: தேடித் தேடி அவர் ஒண்ணென்னுலும் வாங்கிப் போடறதென்ன! அதுக்கு இந்த வீட்டிலே கிடைக்கிற மரியாதை என்ன?

ராமு: எனக்குத்தான் மரியாதை செய்யத் தெரியலே. ஏன், கண் காணுத இடமா எங்கேயானும் போட்டுத் தினம் பூஜை செய்யேன், யாரு வேண்டாங்கறுங்க !

ஜானகி: நாற்காலின்னு ஒரு இடத்திலே போட்டிங்க, உக்காந்திங்கன்னு கெடையாது. தள்ளு வண்டி மாதிரி மூலேக்கு மூலே இழுத்தா! இடம் மாத்தி இடம் போட்டுக் கணும்னு தூக்கிப் போட்டா என்னவாம் ?

ராமு: என்னது? இந்த நாற்காலியைத் தூக்கிப் போடறதா? ஓகோ! மாப்பிள்ளே சாதாரண ராமுவா யிருக்கக் கூடாது, வஸ்தாது ராமுன்னு பேர் வாங்கணும், அப்படின்னு நெனேச்சுத்தான் உங்கப்பா இவ்வளவு கனமா ஒரு நாற்காலி வாங்கினுரோ?

ஜானகி: உசந்த கருங்காலி நாற்காலி கனமா யிருக்காமே, காத்தாயிருக்குமா ?

ராமு: வீண் பேச்சு எதுக்கு ஜானகி? நேத்தி வரைக்கும் இதிலே உக்காந்தா ஒரு பக்கமா இது சாயற சாயல்லே பாதாளத்துக்கே அழுந்திப் போயிடற மாதிரி ஓர் உணர்ச்சி ஏற்பட்டுக்கிட்டிருந்தது. இப்ப என்னடான்னு....

ஜானகி: அதுதான் மத்தியான மும் முனியன் ஏதோ ஆணி அடிச்சு ரிப்பேர் செய்துக்கிட் டிருந்தானே!

ராமு: அந்த ஆணியிலே சாயறதுக்குப் புதிசா ஏதாவது நடடயோகம் கத்துக்க வேண்டியதுதான்.

முனி: அந்த ஆணி அடிச்சதுக் குத்தான் அய்யாவுக்கு அத்தினி கோவமுங்க.

ஜானகி: என்ன இருந்தாலும் சரி. இந்த நாற்காலியை இந்த ரூமை விட்டு எடுக்கிறதுங்கற பேச்சை மட்டும் விட்டுடுங்க.

ராமு: அது சரி. ஒரு க்ரேனுக்கு ஏற்பாடு பண்ணினப்புறமில்லே அந்தப் பேச்சு?



[அப்போது ராமுவின் நண்பன் பாலு உள்ளே வருகிறான். அவனைக் கண்டதும் ஜானகி உள்ளே போகிறாள்.]

பாலு (வரும்போதே): இருக்கயா ராமு?

ராமு: இருக்கேன் மகாராஜா, இருக்கேன். பாதாளத்திலே அழுந்திடலே இன்னும்.

பாலு: ஆபீசிலே யிருந்து வந்தாச்சா இல்லையான்னு பார்த்தேன். நல்ல வேளை, இப்பத்தான் வந்தே போலிருக்கு.



[என்று கூறியவாறே கருங்காலி நாற்காலியில் உட்காரப் போகிறான்.]

ராமு: அதிலே வேண்டாம்! இதிலேயே உக்காரு. அந்த நாற்காலி எனக்கு ரிசர்வ்ட்!

முனி: கொஞ்சம் பொறுங்க, இந்தத் திண்டைப் போட்டுடறேன்.

[என்று கூறி ஒரு திண்டை நாற்காலியில் போடுகிறான். இப்போ நல்லா சாஞ்சாப்பலே உக்காந்துக்குங்க.]

ராமு: அப்பாடா! (உட்காருகிறான்.)


பாலு: என்ன இருந்தாலும் ராமு, நீ நல்ல அதிர்ஷ்டம் பண்ணினவன் அப்பா. இவ்வளவு உண்மையான வேலைக்காரன் எங்கே கெடைக்கிறான் சொல்லு! எஜமானர் சாயறதுக்குச் சௌகரியமா திண்டு கொண்டு வந்து போடறானே!

ராமு: அது போகுது. வந்த விஷயத்தைச் சொல்லு.

பாலு: நீ உக்காந்திருக்கியே நாற்காலி, ரொம்பப் பழைய காலத்து நாற்காலிபோலே இருக்கு.

ராமு: ஆமாமாம். ரொம்பப் பழைய காலம்தான்!

பாலு: பழங் காலத்து நாற்காலிகளே நல்ல வேலைப்பாடுதான். இந்த மாதிரி நல்ல கனமான கருங்காலியிலே செய்த நாற்காலிகள் ரொம்ப அபூர்வமாயிடுத்து இப்போ.



ராமு: இந்த நாற்காலி அபூர்வமான நாற்காலி தான்.

[வலி பொறுக்க முடியாமல் கத்துகிறான்]

பாலு: ஏன்? உடம்பு சரியில்லையா? ஏதோ மாதிரி உக்காந்திருக்கயே, சாய்ஞ்சாப்பலே?

ராமு: சாய்ஞ்சாப்பலே உக்காந்திருக்கேனு? எல்லாம் நேரேதான் உக்காந்திருக்கேன்!

பாலு: என்ன பாக்கறே நாற்காலியிலே! மூட்டைப் பூச்சி இருக்கிறதா ஒருவேளை?

ராமு: மூட்டைப் பூச்சியுமில்லே, ஒண்ணுமில்லேப்பா. மனுஷன் படற வேதனை தெரியாமே தொண தொணன்னு கேள்வி போட்டுக் கிட்டு!

பாலு: ஆனா இதுதான் கருங்காலி நாற்காலி ஆச்சே! இதிலே மூட்டைப் பூச்சி அடையறதுக்கு வழி ஏது!

ராமு: சரிதான்! நீ புகழ் மாரி பாடறதைப் பார்த்தா இந்த நாற்காலியையே வீட்டுக்குத் தூக்கிக்கிட்டுப் போயிடுவே போலேயிருக்கே!

பாலு: ராமு! நான் இந்த நாற்காலிக்காகத்தான் வந்திருக்கேன்னு எப்படியோ தெரிஞ்சுக்கிட்டியே!

ராமு: என்ன சொல்றே?

பாலு: உண்மைதாம்பா. இந்தக் கருங்காலி நாற்காலி எனக்கு அவசியம் தேவையாயிருக்கு. எங்க வீட்டிலே எங்க மாமா குடும்பத்தோட வந்திருக்கார் தெரியுமில்லே?

ராமு: அதுக்கு?

பாலு: நாளைக்கு ஊருக்குப் புறப்பட்டுப் போகிறார். அவர் வந்ததுக்கு ஞாபகார்த்தமா ஒரு க்ரூப் போட்டோ எடுக்கலாம்னு இருக்கேன்.

ராமு: ஓகோ! க்ரூப் போட்டோவுக்குப் போடறதுக்கு நாற்காலி பத்தலையாக்கும்!

பாலு: மாமா கொஞ்சம் பெரிய சரீரம். எங்க வீட்டிலே இருக்கிற ப்ளைவுட் நாற்காலியெல்லாம் அவருக்குக் கட்டி வராது.

ராமு: இந்தக் கருங்காலி நாற்காலி க்ரூப் போட்டோவுக்கு எடுப்பாகக்கூட இருக்கும்.

பாலு: அப்போ, முனியன்கிட்டே சொல்லி இதை என் வீட்டுக்குக் கொண்டு வரச் சொல்லிடறயா? இப்ப கொண்டு போட்டு விட்டு நாளைக் காலையிலே எடுத்துக்கிட்டு வந்திடலாம்.



முனி: கொண்டு போடறது வேறே, திருப்பி எடுத்திட்டு வரது வேறேயா? சரியாய்ப் போச்சு!

ராமு: பாலு! இவன் தயவை எதுக்கு எதிர் பார்க்கிறே? பேசாமல் ஒரு கைவண்டி கொண்டு வந்திடேன்!

முனி: என்னங்க நீங்க! கைவண்டியிலே போட்டா நாற்காலி என்னத்துக்கு ஆகும்?

பாலு: அதுதான் நானும் பாக்கறேன்.

முனி: சரிங்க, என்ன பண்றது? நீங்க ஒரு கை பிடிச்சிடுங்க, கம்மாடு கட்டிக்கிட்டுத் தலையில் வைச்சுத் தூக்கிக்கிட்டு வந்திடறேன்.

ராமு: கம்மாடுளதுக்கு முனியா? நீ போட்ட திண்டு இருக்கவே இருக்கு!

முனி: சரிங்க. ஒரு கை புடிச்சி தலே மேலே தூக்கி வச்சிருங்க. மெதுவா! மேலே விளக்கிலே இடிச்சுடப் போகுது!

[பாலுவும் ராமுவும் சேர்ந்து நாற்காலியைத் தூக்கி முனியனின் தலைமீது வைக்கின்றனர்.]



பாலு: நான் வரேன் ராமு. ரொம்ப நன்றி.

ராமு: ரொம்ப நன்றி! (தனிவாக) உனக்கு!

[ஜானகி உள்ளிருந்து வருகிறள்.]

ஜானகி: நாற்காலியை எங்கே எடுத்துக்கிட்டுப் போறன் முனியன்?

ராமு: வேறே எங்கேயுமில்லே. பாலு ஒரு க்ரூப் போட்டோ எடுக்கிறனும்.

ஜானகி: அதுக்கு நம்ம நாற்காலிதான் பிடிச்சுதா?

ராமு: நம்ம நாற்காலி போட்டோவிலே விழப் போறதேன்னு பெருமைப்படறதுக்கில்லாம......

ஜானகி: கொண்டு போன சாமர்த்தியம் போல் திருப்பிக் கொண்டு போட அக்கறை இருக்குமா இவங்களுக்கெல்லாம்?

ராமு: இல்லாட்டா நிம்மதியாச்சு.

ஜானகி: என்ன சொல்றீங்க?

ராமு: அவன் அதைக் கொண்டு போறதைப் பத்தித்தான் எனக்குக் கவலையே ஒழிய, திருப்பிக் கொண்டு வந்து போடறதைப் பத்தி யில்லேயே.

ஜானகி: அதெப்படி இருக்கும் உங்களுக்கு? தங்கமான நாற்காலி, அதை ஒரு ரிப்பேர் பண்ணி வச்சுக்கிடறதுக்கு வழியைக்காணும்.

ராமு: அதை ரிப்பேர் பண்றதுக்கு ஆகிற பணத்தை வைச்சு நாலு புது நாற்காலிகள் வாங்கிடலாமே!

ஜானகி: எவ்வளவு செலவு செய்தாலும் தகுமே அந்த நாற்காலிக்கு!

ராமு: அதுக்குத் தகாதுன்னு யாரு சொன்னது? ஆனு அவ்வளவு தகுதி நமக்கு இருக்கணும் பாரு.

[அப்போது ஜானகியின் தமையன் ஜம்பு அங்கு வருகிறன்.]

ஜம்பு: சௌக்கியமா மாப்பிள்ளே? சௌக்கியமா ஜானகி!

ஜானகி: என்ன அண்ணு? நீ வரப் போகிறேன்னு ஒரு லெட்டர்கூடப் போடலேயே!

ஜம்பு: அவசரமாப் புறப்பட்டு வரும்படி ஆயிடுத்து. ஒரு பர்னிச்சர் கம்பெனியிலே அஸிஸ்டெண்ட் மானேஜரா சேர்றதுக்கு அப்ளை பண்ணியிருந்தேன்.....

ராமு: அதுக்கு முதல்படியா உங்கப்பா கொடுத்த நாற்காலி மேலே உன் கைவரிசையைக் காட்டலாம்னு நெனேச்சயா!

ஜம்பு: மாப்பிள்ளே என்ன சொல்லறுங்க? ஒண்ணும் புரியலேயே ஜானகி?

ஜானகி: நம்ம வீட்டிலே ரொம்ப நாளா இருந்த ஒரு கருங்காலி நாற்காலியை அப்பா இவங்களுக்காகக் கொடுத்திருந்தாங்களே, உனக்கு ஞாபகமில்லே?

ஜம்பு: ஆமாம்! பிரமாதமான நாற்காலியாச்சே அது?

ஜானகி: அதுக்கு மரியாதையாகத்தான் அதை லம்பர் ரூமிலே போடுவமா, வெந்நீர் அடுப்பிலே போடுவமான்னு யோசிக்கிறர்!

ஜம்பு: ஏன் மாப்பிள்ளே? என்ன கோபம் அந்த நாற்காலி மேலே?

ராமு: கோவமா? சே! சே! தற்காப்பு உணர்ச்சி, வேறே ஒண்ணுமில்லே.

ஜம்பு: ஆமாம்..... இப்போ எங்கே அந்த நாற்காலி?

ஜானகி: யாரோ சிநேகிதர் வீட்டிலே க்ரூப் போட்டோவாம். அதுக்குத் தாராளமாகத் தூக்கிக் கொடுத்தனுப்பி யிருக்காங்க.

ஜம்பு: பரவாயில்லே. திரும்பி வந்திடுமில்லே?

ஜானகி: அதைப்பத்தி இவங்களுக்கென்ன கவலே? எப்படியாவது தள்ளி விடணும்னு நெனேச்சா?

[முனியன் கழுத்தைப் பிடித்து விட்டுக் கொண்டே வருகிறன்.]

முனி: அப்பா! கழுத்துப் பிடியெல்லாம் விட்டுப் போயிருச்சுங்க!

ராமு: கொண்டு போட்டுட்டேல்லே? போட்டோ எடுக்கிறதையும் வேடிக்கை பார்த்துக்கிட்டு அங்கேயே நின்னுடாமே, திரும்பி வந்தயே, சந்தோஷம்தான்!

முனி: நம்ம நாற்காலியிலே உக்கார்ற அய்யாவைப் பார்த்தேனுங்க. அப்புறம் அங்கே நின்னு ஆபத்துன்னு வந்துட்டேன்!

ராமு: ஏன்?

முனி: நீங்க உக்காந்தாலே ஒரு பக்கமா சாயற நாற்காலி அம்மாம் பெரிய ஆளு உக்காந்தா எப்படிங்க தாங்கும்?

ராமு: அந்தக் கவலே அதை வாங்கிட்டுப் போனவனுக்கில்லே இருக்கணும்! நான் அதிலே உக்காந்திருக்கிறதைப் பார்த்தப்புறமும் அதை இரவல் கேட்டானில்லே?

ஜம்பு: மாப்பிள்ளே! உங்களாலே எனக்கு ஓர் உதவி ஆகவேண்டியிருக்கு.

ராமு: சொல்லு.

ஜம்பு: உங்க தெருவிலேயே அஞ்சாறு வீடு தள்ளி பாலகிருஷ்ணன்னு யாரோ இருக்காராமே, அவரைத் தெரியுமா உங்களுக்கு?

ராமு: யாரு? பாலகிருஷ்ணனு? நம்ம பாலு இல்லே? அவனேப் பத்தித்தானே இத்தனே நேரமும் பேசிக்கிட்டிருக்கோம்!

ஜம்பு: சரியாய்ப் போச்சு! அந்தப் பாலுவோட மாமாவைப் பார்க்கத்தான் நான் இவ்வளவு அவசரமாகப் புறப்பட்டு வந்தேன்.



கவர்ச்சியுடன் காணுங்கள்

பின்னியின் ஸோனாடா

ஷாட் ஸில்க் புடவை

வழவழப்பானது, பளபளப்பானது, ஸோனாடா! பின்னியின் புதுத் தயாரிப்பு. ஷாட் ஸில்க்கில் தனியான ஒரு ரகம். இரட்டைவண்ண வகைகளில் கிடைக்கிறது. எந்த வகையான ருசியுள்ளோரும் விரும்பும் வகையில் எங்கள் கலை நிபுணர்கள் விசேஷமாகத் தயாரித்தது. நீங்கள் நிச்சயம் விரும்பும் தரமான புடவை!

பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
அக்ரஹாரம் ரோடு, பெங்களூர் 23
பின்னி & கம்பெனி லிமிடெட், மதராஸ், ஸ்தாபனத்தின் ஒரு கிளை

ராமு: யாரை? பாலுவோட மாமாவையா?

ஜம்பு: ஆமாம். அவர்தான் நான் சேரப் போகிற பர்னிச்சர் கம்பெனிக்கு முதலாளி. எனக்கு வேலை தரப் போகிறவர். நாளைக்குக் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போகிறாராம். அதுக்குள்ளே வந்து பார்க்கும்படி எழுதினார்.

ராமு: அட பாவி! இதை முன்னாலேயே சொல்றதுக்கென்ன?

ஜம்பு: ஏன்?

ராமு: க்ரூப் போட்டோவிலே அந்த ஆசாமி உக்காரணும்னுதானே நம்ம நாற்காலியை வாங்கிப் போயிருக்கான், பாலு!

ஜம்பு: ஐயையோ! நான் இவ்வளவு தூரம் பட்ட பிரயாசை யெல்லாத்தையும் அந்த நாற்காலியா கெடுக்கப் போறது?

ராமு: இவ்வளவு தூரத்துக்கு ஏதாவது வரும்னுதான் அந்தச் சனியனை லம்பர் ரூமிலே போடச் சொன்னேன். கேட்டாத்தானே? [பாலு கோபத்துடன் வருகிறான்.]

பாலு: ராமு! நீ இப்படி எனக்குத் துரோகம் செய்வேன்னு ஒருநாளும் நினைக்கலே!

ராமு: என் மேலே கோவப்பட்டு என்ன பயன்? நீ கேட்டே, நான் குடுத்தேன்.

பாலு: அட! அது உள்ளாற ஒடிஞ்சிருக்குன்னு ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா நீ?

ராமு: இப்ப என்ன நடந்தது?

பாலு: என்ன நடந்துதா? சொந்த மாமாவே ஜன்ம சத்துருவாயிட்டார். வேறே என்ன? உன் நாற்காலி அவரைக் கீழே தள்ளினதுக்கு நான் பழி! இப்பவே புறப்பட்டுப் போறேன்னு கூச்சல் போடறாரு!

ஜம்பு: ரொம்பக் கோவமாயிருக்காரா! அவரை நான் உடனே பார்த்தாகணுமே!

பாலு: நீங்க....

ராமு: ஜானகியோட அண்ணா ஜம்பு. உங்க மாமாவோட கம்பெனியிலே வேலை விஷயமா பார்க்க வந்திருக்கார்.

பாலு: உங்க நாற்காலிதான் அவரைக் கீழே தள்ளினதுன்னு தெரிஞ்சா வேலையைக் குடுத்திட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்! ஐயையோ! அதோ மாமாவே வராரே!

மாமா: மிஸ்டர் ராமு! மிஸ்டர் ராமு!

ராமு, பாலு: ஓடி ஒளிய வழியில்லையே!

[அதற்குள் பூதாகாரமாக மாமாவே அருகில் வந்து விடுகிறார்.]

மாமா: ராமு! உங்க நாற்காலிதானா அது?

ராமு (நடுக்கத்துடன்): ஸார்... எம் மேலே ஒரு தப்பும் கிடையாது. உங்க பாலு...

மாமா: நான்சென்ஸ்! அந்த மாதிரி நாற்காலியிலே உக்காரக் குடுத்து வச்சிருக்கணுமே?

ராமு: என்ன சார், சொல்றீங்க?

மாமா: சாதாரணமா கிடைக்கக் கூடிய நாற்காலியா அது?

ராமு: நீங்க கீழே விழுந்ததிலே...

மாமா: மூணு நாளா இடுப்பு பிடிச்சுக்கிட்டிருந்தது இன்னிக்கு விட்டுப் போயிடுத்து.

ராமு: அப்படியா?

மாமா: எங்க கம்பெனி நாற்காலிகளே அப்படித்தான்! ஆளைக் கீழே தள்ளினாலும் ஒரு 'பர்பஸோட'தான் தள்ளும்!

ராமு: என்ன சொல்றீங்க? அது உங்க கம்பெனி நாற்காலியா?

மாமா: பாலு இங்கே வந்தப்புறம்தான் நாற்காலியைக் கவனிச்சுப் பார்த்தேன். உடனே உங்களைப் பார்க்க ஓடி வந்தேன். கம்பெனி ஆரம்பிச்சபோது செய்த நாற்காலி!

ராமு: கேட்டியா ஜானகி?

மாமா: அதை நீங்க வச்சிருக்கிங்கங்கறது எங்க கம்பெனிக்கே பெருமை!

ஜானகி: கேட்டீங்களா?

ஜம்பு (பரிவுடன்): கீழே விழுந்ததிலே அடி ஒண்ணும் படலையே சார்!

மாமா: அடியா! மூணு நாளா பிடிச்சுக்கிட்டிருந்த பிடிப்பு விட்டுப் போயிடுத்துங்கறேன்! ஆமாம், நீங்க யாரு தெரியலியே!

ஜம்பு (தயக்கத்துடன்): நான்....! வந்து..

ராமு: இவர் நம்ம பிரதர் இன்—லா. ஜம்புநாதன்னு பேரு.

மாமா: ஜம்புநாதனா? இன்னிக்கு என்னைக் கூட ஜம்புநாதன்னு ஒருத்தர் பார்க்க வர்றார்.

ராமு: அவரேதான் இவர்!

மாமா: அஸிஸ்டெண்ட் மானேஜர் வேலைக்காக....?

ஜம்பு: ஆமாம் ஸார்! அந்த நாற்காலிகூட எங்கப்பா வாங்கினதுதான்!

மாமா: மிஸ்டர் ஜம்புநாதன்! வேறே ஒரு யோக்யதாம்சமும் பார்க்கத் தேவையில்லை. இவ்வளவு காலமா நம்ம கம்பெனியோட தொடர்பு கொண்டிருக்கிற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்ங்கிறதே போதும். நீர் எப்போ நம்ம ஆபீசுக்கு வந்தாலும் வேலை உமக்காகக் காத்திருக்கும்.

ஜம்பு: ரொம்ப சந்தோஷம். உங்களுக்கு எப்படி நன்றி செலுத்தறதுன்னே தெரியலே.

மாமா: அதுக்கெல்லாம் அவசியமில்லை. நீங்க நன்றி செலுத்த வேண்டியது அந்த அற்புதமான நாற்காலிக்கு. அதுதான் உங்க அப்பா உங்களுக்குத் தேடி வச்ச ஆஸ்தி.

ஜானகி: ஏங்க, அந்த நாற்காலியைக் கரிச்சுக் கொட்டினீங்களே, இப்பவாவது அதன் பெருமையைத் தெரிஞ்சுக்குங்க.

மாமா: மிஸ்டர் ராமு! நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணும்.

ராமு: காத்திருக்கேன்.

மாமா: அடுத்த வாரம் எங்க கம்பெனிக்கு ஐம்பது வருஷம் பூர்த்தியாகுது. பொன் விழா கொண்டாடறதா யிருக்கோம். அது சம்பந்தமா ஆரம்பத்திலிருந்தே எங்க கம்பெனியிலே தயாரான பர்னிச்சர் அயிட்டங்களையெல்லாம் சேர்த்து ஓர் எக்ஸிபிஷன் வைக்கிறதா யிருக்கோம்.

ராமு: அற்புதமான ஐடியா!

மாமா: அதிலே வைக்கிறதுக்கு மத்ததெல்லாம் கிடைச்சுப் போச்சு. உங்ககிட்டே இருக்கிற மாதிரி பழைய மாடல் நாற்காலி மட்டும் கிடைக்கலே. உங்க நாற்காலியை எங்க எக்ஸிபிஷனுக்கே கொடுத்திடணும். நஷ்டஈடு எவ்வளவு வேணுமானாலும் கொடுக்கத் தயார்.

ராமு: நஷ்ட ஈடா? அந்த நாற்காலி கட்டாயம் உங்க எக்ஸிபிஷனிலே இருக்க வேண்டியதாச்சே!

ஜானகி: என்னங்க நீங்க?

ராமு: நீ பேசாம இரு. உங்கப்பாவோட ஆஸ்தி அதுக்கு உரிய இடத்துக்குத்தான் போய்ச் சேரப் போகுது!

குழந்தையின் சிறந்த நண்பன்

I.T.L கிரைப் ஸிரப்



உங்கள் குழந்தை அழுகிறதே என்ற கவலை
வேண்டாம். அதன் சின்னஞ்சிறு வயிற்றில்
வலி காரணமாக அது அழலாம். I.T.L. கிரைப்
ஸிரப் வலியை ஒரு விநாடியில் நிறுத்துகிறது.
விவரம் தெரிந்த தாய்மார்கள் எப்பொழுதும்
ஒரு பாட்டில் I.T.L. கிரைப் ஸிரப்
வைத்திருக்கிறார்கள். குழந்தைகளின்
அஜீர்ணக் கோளாறுகளை அகற்றச்
சிறந்தது இது.

தயாரிப்பாளர்கள் :

தி மைசூர் இண்டஸ்ட்ரியல் &
டெஸ்டிங் லாபாரடரி லிமிடெட், பெங்களூர்-3

மதராஸ் ஸேல்ஸ் டிபோ : 35/37, தம்பு செட்டி தெரு, மதராஸ்-1

EP/ITL 2

பெங்களூர் சேல்ஸ் டிப்போ : 71/4, ஆற்காடு ஸ்ரீநிவாசாச்சார் தெரு * விற்பனை ஏஜண்டுகள், ஆந்திரபிரதேசம் : மெஸர்ஸ் வெண்டிலாக்ஸ், செகந்திராபாத் * ஹூப்ளி & கர்நாடகா : மெஸர்ஸ் கர்நாடக் & டெக்கான் ஏஜென்ஸீஸ், ஹூப்ளி

கால்கேட் டூத் பிரஷ்

மேலும் துப்புரவாக உங்கள் பற்களை சுத்தம் செய்யும்படி அமைக்கப்பட்டிருக்கிறது!



4 சைஸ்கள்: * அடல்ட் * ஜூனியர் * சைல்ட் * பேபி
* ஹார்ட் * மீடியம் * ஸாப்ட்

சுகாதார பிளாஸ்டிக் குழாயில்
டீலக்ஸும் கிடைக்கும் !

ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட நைலான் பிரிஸில்கள் உறுதியாக பொருத்தப்பட்டபடியால் அதிக நாள் வரும்.



TB/G/13 TAM.

பொன் விழாவைப் பார்த்திருக்கும் வெள்ளித் திரை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறதா, தேய்ந்து வருகிறதா என்றே புரியவில்லை. இப்படிச் சில காலமாகத் தடுமாற்றம் ஏற்பட்டிருக்கிறது விமரிசகர்களுக்கு.

வெள்ளித் திரையின் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தால் ஹிந்திப் படங்கள் மிகவும் நல்ல முறையில் வெளிவந்தன என்பதைக் காண்போம். எத்தனை எத்தனையோ நல்ல படங்கள் ஹிந்தியிலேயே வெளிவந்து, இதுபோன்ற நல்ல படங்கள் தமிழிலும் வெளிவரக் கூடாதா என்று ஏங்கச் செய்த காலமும் இருந்தது.



அது அந்தக் காலம். இந்தக் காலத்திலோ?

வேண்டாம். நம் தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் இது போன்ற நிலையை அடைய வேண்டாம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு ஹிந்திப் படங்கள் வளர்ந்து(?) வருகின்றன.

இப்படி வளர்ந்து தேய்ந்த படங்களில் ஒன்றுதான் ஆயி மிலன் கி பேலா. 'வந்தது, சந்திக்கும் வேளை' என்று பொருள் தரும் இந்தப் படத்தைப் பற்றியும், 'சங்கம்' படம் போல் இல்லாவிட்டாலும் பிரசாரம் மட்டும் வலுவாக இருந்தது. அப்படிப்பட்ட இந்தப் படத்தைச் சந்திக்கும் வேளை வந்து விட்டது என்று எண்ணி மகிழ்ச்சியுடன் போன எனக்கு இந்தப் படத்தைச் சந்திக்கும் வேளை ஏன்தான் வந்ததோ என்று தோன்றுமளவுக்கு இந்தப் படத்தின் முன்னேற்றம் இருந்தது.

ஒரு பெண். இரு ஆண். பழைய ஊசிப் போன அதே முக்கோணக் காதல். ஆண்கள் இருவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள். அந்தத் தாய் எசமானிக்காகத் தனது குழந்தையைத் தியாகம் செய்கிறாள். எனவே, ஒன்று பணக்காரச் சூழ்நிலையிலும் மற்றது ஏழைமை நிலையிலும் வளருகிறது, உறவுமுறை தெரியாமல். பெரியவர்களாகி ஒரே பெண்ணைக் காதலித்து ஒருவர் உயிருக்கு மற்றவர் சத்துருவாகிக் கடைசிக் கட்டத்தில் உறவு முறை தெரிந்து விட்டபடியால், இருவரும் சாகாமல் பிழைக்கின்றனர். ராஜேந்திர குமாரும் ஸாஹிரா பானுவும் இப்படத்தில் நடிக்கின்றனர்.

இந்தப் படத்திலும் கன வேகமாக ஓடும் காரைத் துரத்திக் கொண்டு ஒரு குதிரை. அவர்களைப் பின்பற்றி ஓடிவரும் ஒரு கூட்டம். அந்தக் கூட்டம் வரும்வரை சண்டை. அப்புறம் காதலர்கள் சந்திப்பு. தாயின் சந்திப்பு; சகோதரர்களின் சந்திப்பு. கதை ஒரு விதத்தில் சுபமாக முடிந்து விட்டது.

சில மாதங்களுக்குள் நான் பார்த்த படங்களின் கதைகள் ஏறக்குறைய ஒரே மாதிரி.

அந்தக் காலத்தில் சாப்பிட்ட ஒரு ஹோட்டலின் நினைவு வருகிறது. 'இன்றென்ன ஸ்பெஷல்?' என்று கேட்டால் கீரை மசியல்.

வந்தது, சந்திக்கும் வேளை

கீரைத்தண்டு பொரிச்ச குழம்பு, கீரைத் தண்டு சாம்பார் என்பார்கள். ஆக, வாரம் ஏழு நாட்களும் இந்தக் கீரையே உருமாறி வருமே ஒழியப் புதிதாக ஒன்றுமிராது.

இன்று நம் திரைப் படங்களுக்குக் கிடைக்கும் கதைகளும் சற்றேறக்குறைய இப்படியே தான் இருக்கின்றன. அதுவும் ஹிந்திப் படங்களுக்குக் கிடைக்கும் கதைகளில் சிறிதும் மாற்றமே இருப்பதில்லை.

ஆனால் ஒன்று. வர்ணம் கிடைத்தது என்று மெழுகித் தள்ளுகிறார்கள் ஹிந்திப் படக்காரர்கள். சந்திக்கும் தருணம் வந்தது என்னும் இப்படமும் ஒரு வர்ணக் கலவைதான்.

'சங்கம்' படத்தைப் போன்ற ஒளிப்பதிவை இப்படத்தில் காண முடியாவிட்டாலும் கண்ணுக்குக் குளிர்ச்சியான காஷ்மீரக் காட்சிகள் இருக்கின்றன.

கூட்டுறவுச் சாகுபடி என்று பெரிதாக ஆரம்பித்து, அதன் இலாப நஷ்டங்களைப் பற்றி எதுவும் கூறாமலே, காட்டாமலே, காதல் சாகுபடி செய்கிறார்கள் இந்தப் படத்தில்.

'கதையாவது, கத்தரிக்காயாவது? ஏதோ பொழுது போக வேண்டும்' என்று எண்ணுபவர்கள் ஆதரிக்கும் வரை இத்தகைய படங்கள் ஓடத்தான் செய்யும். — ரா. வீ.

7. பணிந்துவிட்ட பகையரசன்

வெற்றி வாகை சூடிய படைகள் மகிழ்ச்சி வெள்ளத்திலே மிதந்து கொண்டிருந்தன. பட்டபாட்டுக்குப் பலன் கிடைத்த ஆனந்தத்திலே ஆடலும் பாடலும் அந்தப் படையணியிலே திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தன. படுகாயமுற்றுப் படுத்த படுக்கையாகக் கிடந்த போர் வீரன்கூட நிமிர்ந்து உட்கார்ந்து நிம்மதிப் பெருமூச்சுடன் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தான். இப்போரில் காலிழந்த வீரன் தங்கள் படை கண்ட வெற்றிக்குப் பின்



பாமினிப்

கௌசிகன்

தனக்கேற்பட்ட ஊனத்தைக் கூடப் பெரிதாக மதிக்கவில்லை. கையிழந்த வீரனே இனி கட்டாரி பிடித்துக் களத்திலே சாகஸங்கள் புரிய முடியாதே என்று வருந்தினலும் அன்றையக் கோலாகலத்திலே தனக்குற்ற குறையை மறந்து விட்டான்.

பகைவர்களைப் புறங் கொண்ட படைகள் வெள்ளமெனப் பரந்து கிடந்தன அந்தப் பகுதியிலே. வரிசைவரிசையான கூடாரங்களும், பலதிறப்பட்ட போர் வீரர்களும், எண்ணி மாளாத குதிரைகளும், யானைகளும் கோவேறு கழுதைகளுமாகப் புதிதாக நிர்மாணிக்கப்பட்டதொரு நகரம் போலவே காட்சியளித்தது அந்தப் பிரதேசம். படை வீரர்களின் தேவைகளை அறிந்து அதற்கேற்ற பல பொருள்களைக் கொண்ட அங்காடிகளும் இந்தப் படையணிகளினிடையிடையே காட்சியளித்தன.


அகம்பாவத்தினல் அழிவைத் தேடிக் கொண்ட அரசன் தன் தோல்வியை ஒப்புக் கொண்டு, முற்றுகையிலே முறியடிக்கப்பட்டு வீழ்ந்த கோட்டையை வெற்றிகொண்ட மன்னரின் காணிக்கையாக்குவதன் அடையாளமாக, அக்கோட்டை வாயிலின் சாவிகளைக் கொண்டு வந்து அவரது காலடியிலே சமர்ப்பித்து விட்டு அவரது நட்பை விரும்பிப் பெறும் அடையாளமாக அவரிடமிருந்து தாம்பூலம் பெற்றுச் செல்வதற்காக வரவிருந்தான். அப்படி வரப்போகும் அரசனை வரவேற்பதற்கான ஏற்பாடுகளில் படையணியின் ஒரு பகுதி ஈடுபட்டிருந்தது. தோல்வியிலே துவண்ட உள்ளத்தவனுக வரும் சுல்தானை, உரிய மரியாதைகளுடன் வரவேற்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார் வெற்றி கண்டவர்.

இந்தப் போருக்குக் காரணமான, பணிந்து விட்ட பகையரசனை வரவேற்பதற்கென்றே பாசறையின் நடுவிலே பாங்கானதொரு மேடை அமைத்திருந்தார்கள். மண்டபத்தைப் போலக்

கால்கள் அமைத்துக் கூடாரத்தைப் போலத் திரைச் சீலைகளை விரித்து அலங்கரித்திருந்த அந்தப் பெரிய விதானத்தினுள்ளே வீரர்களும் விருந்தாளிகளுமாக ஓராயிரம் பேர்கள் தங்கலாம். அத்தனை விஸ்தாரமான அமைப்பு அது. அதன் நடுவே பிரதானமானதோர் இடத்திலேதான் கோட்டையைக் காணிக்கையாகக் கொடுக்கும் அந்த நிகழ்ச்சி நடக்கவிருந்தது. கூடாரத்துக்கு வெளியே பணிய வரும் அரசனுக்கு வழியெல்லாம் வரிசையாக அணிவகுத்து நின்று, பாராக் கொடுக்க வேண்டுமென்பதும் ஏற்பாடு.

இத்தனை ஆரவாரங்களுக்கும் காரணமான வெற்றி பெற்றவர் யார்? தோல்வியுற்றவர் யார்?

தமது தூதுவர்களை உதாசீனப்படுத்தி ஓட்டிய அகமதுநகர் சுல்தானைப் பழிவாங்கவேண்டும் என்று படையெடுத்தார் பீஜப்பூர் சுல்தான் அலி ஆதில்ஷா. ஒரு காலத்தில் தங்கள் உடைமையாக இருந்த கலியாண், ஷோலாப்பூர் ஆகிய கோட்டைகளை அகமது நகரிடமிருந்து திரும்பக் கேட்டுச் சண்டையைத் தொடங்கினார் அவர்.



அகமதுநகர் அத்தனை சுலபத்தில் தான் அனுபவித்து வரும் பகுதிகளைக் கொடுத்துவிட்டுப் பணிந்துவிடுமா? 'மாபெரும் ஹிந்து சாம்ராஜ்யமான விஜயநகரின் அன்பையும் நட்பையும் பெற்றுவிட்டார் ஆதில்ஷா; மகனுக்கு நேர்ந்த அவமானத்தைத் துடைக்கத் தமது படைகளுடன் உதவிக்கு வருகிறார் சாகஸக்காரர் ராமராயர்' என்ற விஷயங்களை யெல்லாம் தமது ஒற்றர்கள் மூலம் அறிந்தும் கூட அகமதுநகர் நிஜாம் அசைந்து கொடுக்கவில்லை. தம்முடைய அண்டை நாட்டுடன் பலப் பரீட்சை செய்து பார்த்து விடவே விரும்பினார் அவர்.

விஜயநகரம், பீஜப்பூர், அகமதுநகர், கோல்கொண்டா ஆகிய நான்கு ராஜ்யங்களும் ஒன்றை யொன்று தாக்காமல் நட்போடு இருக்க வேண்டுமென்றும், அத்து மீறித் தாக்குதல் நடக்குமானால் ஒன்றுக்கொன்று உதவி செய்ய வேண்டுமென்றும் ஒரு சமயம் ராமராயர் பாமினி சுல்தான்களோடு கூட்டு நேசப் பொறுப்பு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார். அதன்படி அகமதுநகரின் மீது தாக்குதல் நடத்த இப்போது கோல்கொண்டா ஒத்துழைக்கவேண்டுமென்று தாக்கீது அனுப்பினார் ராமராயர். கோல்கொண்டாவின் சுல்தானான இப்ராஹிம் குதப்ஷாவுக்கு பீஜப்பூருடன்சேர்ந்துகொண்டு அகமதுநகரைத் தாக்குவதில் விருப்பமே இல்லை. இருந்தாலும் ராமராயர் கூட்டுநேசப் பொறுப்பு ஒப்பந்தத்தைச் சுட்டிக்காட்டி வற்புறுத்தவே அரை மனத்தோடு தாக்குதலில் கலந்து கொண்டார்.

குதப்ஷாவின் இந்த மனப்போக்குக்குக் காரணங்களில்லாமலில்லை. விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாகிய சர்வ வல்லமை வாய்ந்த ராமராயரின் நட்பும், அன்பும் ஆதரவும் தனக்கே உரியதென்ற எண்ணத்தில் இருந்தவர் இப்ராஹிம். கோல்கொண்டாவின் அரசியல் வாழ்விலே ராமராயரின் ஆதிநாளைய வாழ்க்கை பிணைக்கப்பட்டிருந்ததோடு, தன் அண்ணா ஜம்ஷிட்டின் ஆட்சியிலே தான் உயிருக்குப் பயந்து நாட்டை விட்டு ஓடிவந்த சமயம் ராமராயர் விஜயநகரத்திலே தனக்கு அடைக்கலம் அளித்து ஆதரவு தந்ததையும் மறந்துவிடவில்லை. ராமராயரின் அன்பைஅலி ஆதில்ஷா பறித்துக் கொண்டதாக அவரிடம் ஒரு பொறாமையே ஏற்பட்டிருந்தது குதப்ஷாவுக்கு. ராமராயர் ஆதில்ஷாவைத் தம் அன்பு மகனாக வரித்துக் கொண்ட பிறகு ராமராயரிடம் எதையும் விரும்பிப் பெறும் உரிமை தனக்கே உரியது என்று தான் தப்புக் கணக்குப் போட்டு விட்டதாக ஓர் எண்ணம் தோன்றியது இப்ராஹிமுக்கு. இதை வளர்ப்பதே போல் முற்றுகையின்போது நடந்த

சில நிகழ்ச்சிகளும் இருந்தன. பிளவுபட்ட மனப்பான்மை கொண்ட குதப்ஷா எதையும் பிரித்துக் காணலானார். ராமராயரின் ஒவ்வொரு செய்கைக்கும் ஏதோ காரணமிருப்பதாகக் கற்பனை செய்யலாயிற்று அவரது உள்ளம். மாற்றுந் தாயின் அன்பிலே மாசு காணும் குழந்தையின் மன நிலையிலே குழம்பினார் குதப்ஷா. ஆகவே அகமதுநகர் முற்றுகையிலே அவரால் முழு மனத்தோடு ஈடுபட முடியவில்லை. பீஜப்பூர் சுல்தானுடன் விஜயநகரத்து ராயர் அளவளாவும்போதெல்லாம் ஆத்திரம் கொண்டார் கோல்கொண்டாவின் குதப்ஷா. அகமதுநகரை அடக்கி ஒடுக்குவதற்குத் தன்னை அவர்கள் கருவியாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற எண்ணம் வளர்ந்து விட்ட பிறகு முற்றுகை சம்பந்தமாக ராமராயரோ ஆதில்ஷாவோ எது கூறினாலும் தமக்கு அவர்கள் கட்டளை இடுவதாக எண்ணிக் குமையலானார்.

இவ்வளவுக்கும் மேலாக, அகமதுநகர் நிஜாம்ஷாவின் அருமை மகள் கோல்கொண்டா சுல்தானின் உள்ளத்திலே இடம் பெற்றிருந்தாள். தனது வருங்கால மாமனாரைப் பகைத்துக் கொள்ள எந்த மாப்பிள்ளைக்குத்தான் மனம் வரும்? ஆகவேதான் களம் புகுந்தும் ஒப்பந்தப்படி ஒத்துழைக்கவில்லை. அதுமட்டுமல்ல. அகமதுநகர்ப் படைத் தலைவர்களுக்கு உளவுகள் கூறி உதவலானார் குதப்ஷா. இதனால் முற்றுகை நீடிக்கலாயிற்று. கூட்டணிப்படைகளின் முன்னால் தோற்றோட வேண்டியவர்கள் கோட்டையைக் கட்டிக் காத்து நின்றார்கள். எத்தனையோ போர்களை நடத்திய ராமராயருக்கு இது வியப்பை அளித்தது.

வெற்றி அல்லது வீரமரணம் என்ற வீம்புடன் போராடும்போது உதவிக்கு வந்த ஒருவர் ஒதுங்கி நிற்பதென்றால் அது போரிடும் வீரர்களுக்கு வெறுப்பாகத்தானே இருக்கும்? தன் படைகளைப் போராட்டத்தில் ஈடுபடுத்தாது ஏதேதோ சாக்குப் போக்குகளைக் கூறிக் கொண்டிருந்தார் குதப்ஷா. அவரது இந்த விபரீதப் போக்குக்கான காரணம் கேட்டுக் கண்டிப்பான தாக்கீது அனுப்பினார் ராமராயர்.

ஆனால் அதற்கு மறுநாள் காலை...?

பாசறையிலே ராயரும் பீஜப்பூர் சுல்தானும் வீற்றிருக்கும்போது சீற்றமுடன் புகுந்தான் சித்திஹாஸன். ''எதிர்பார்த்தது நடந்து விட்டது. இப்ராஹிம் குதப்ஷா தன் துரோகச் செயலைக் காட்டிவிட்டான்'' என்று படபடத்தான்.

''அகமதுநகருடன் சேர்ந்துவிட்டானோ?'' என்று கேட்டார் ஆதில்ஷா.

''அதைத்தான் இங்கிருந்தபடியே செய்து கொண்டிருந்தானே? கோட்டையை நாம் முற்றுகையிட்டுக் கொண்டிருக்கும்போது உள்ளிருப்போருக்குத் தன் படை வீரர்களைக் கொண்டு உணவுப் பொருள்களை அனுப்பினான். உளவுகளையும் உடனுக்குடன் சொல்லிக் கொடுத்து வந்தான்.''

''இப்போது ஒரேயடியாகத் தன் படைகளைக் கிளப்பிக் கொண்டு இரவோடிரவாகத் தன் ஊருக்கே போய்ச் சேர்ந்து விட்டான்—துரோகி!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான் வேங்கடாத்திரி—விஜயநகரப் படைகளின் சேனாபதி.

ஆதில்ஷாவும் ராமராயரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கோல்கொண்டா சுல்தானின் செயல் அவர்களைத் திகைக்க வைத்திருந்தது என்பதை அவர்களின் பார்வையே சொல்லிற்று. தளபதிகளோ குதப்ஷாவின் செயலினால் கொதிப்படைந்திருந்தார்கள்.

''மாரிக்காலம் வந்து விட்டது. முற்றுகையை விட்டு விடுவதே சிறந்தது என்று இவன் அடிக்கடி என்னிடம் கூறிவந்ததன் ரகசியம் இப்போதுதான் புரிகிறது'' என்றான் வேங்கடாத்திரி.

''நான் ஆரம்பத்திலிருந்தே எச்சரித்துக் கொண்டுதானிருந்தேன்; இப்ராஹிம் சந்தர்ப்பவாதி; காட்டிக் கொடுத்து நம் கழுத்தை அறுக்கும் கயவன் அவன் என்று.'' ஆத்திரப்பட்டான் ஆதில்ஷாவின் சேனாபதி சித்திஹாஸன்.

அனுபவத் தழும்பேறிய ராமராயர் சிந்தனையிலாழ்ந்திருந்தார். குதப்ஷா முற்றுகையைக் கைவிட்டுச் சென்றதற்காகக் கவலைப்படவில்லை அவர். இந்த நன்றிகெட்ட செயலுக்காக அவனை எப்படித் தண்டிக்கலாம் என்பதைப் பற்றியே எண்ணமிட்டுக்கொண்டிருந்தவர், ''கோல்கொண்டாவின் படைபலத்தை நம்பியா நாம் முற்றுகையைக் கைக்கொண்டோம்? இல்லையே. அகமதுநகரைப் பணியவைப்பதில் முழு மூச்சுடன் முனைவோம். நாணயமில்லாத கோல்கொண்டாவை நசுக்குவது நமக்கொரு பெரிய காரியமல்ல. அதைப் பிறகு கவனிப்போம். இப்போது முற்றுகைப் பகுதியில் நிலைமை எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார் வேங்கடாத்திரியை நோக்கி.

''கலியாண் கோட்டையைப் போபால்ராவின் பொறுப்பில் விட்டு விட்டு ஹுசைன் நிஜாம்ஷா தலைநகரைக் காப்பதற்காக உள்நாட்டுக்கு ஓடியிருக்கிறார்'' என்றான் வேங்கடாத்திரி.

உடனே ராமராயர் முற்றுகையை வெற்றியாக்கும் வழி வகைகளை வகுக்கலானார். தமது நம்பிக்கைக்குகந்த படைத் தலைவரான இம்மடி சதாசிவ நாயக்கரிடம் கலியாண் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றும் பொறுப்பை ஒப்படைத்தார். வேங்கடாத்திரியையும், சித்திஹாஸனையும் அகமது நகரின் எல்லைக்குள் புகுந்து தாக்கும்படி பணித்தார். விஜயநகரப் பெரும் படையுடன் சதாசிவ நாயக்கர் கலியாணை நோக்கிக் கிளம்பினார். ஆதில்ஷா படைகளின் ஒரு பகுதியும் உடன் சென்றது. வேங்கடாத்திரி, சித்திஹாஸன் இவர்களுடன் சென்ற விஜயநகரின் படை வெள்ளமும் பீஜப்பூரின் பெரும் படையும் அகமதுநகருக்குள் புகுந்து அழிக்கத் தொடங்கின. வேங்கடாத்திரி வாளாகவும் சித்திஹாஸன் நெருப்பாகவும் மாறி விரோதியின் நாட்டை நாசமாக்கினார்கள். கோதாவரி நதியைக் கடந்து தௌலதாபாத் வரை சென்று வெற்றிக் கொடி நாட்டினார்கள். தங்கள் உயிரையும் உடைமைகளையும் காத்துக்கொள்ள அகமது

நகரை விட்டு மக்கள் ஓடி ஒளியலானார்கள். இதுவரை கண்டும் கேட்டுமிராத வகையில் நிஜாம்ஷாவின் ராஜ்யத்தை நாசமாக்கிக் கொண்டிருந்தனர் வேங்கடாத்திரியும் சித்தி ஹாஸனும். இவர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முயன்ற எதிர்ப்புக்களெல்லாம் தவிடுபொடியாயின.

அங்கே கலியாண் கோட்டையை இம்மடி சதாசிவ நாயக்கரிடம் ஒப்படைத்து விட்டுச் சரணாகதி அடைந்து விட்டான் போபால் ராவ். அவரும் தமது படைகளுடன் அகமது நகருக்குள் புகுந்துவிட்டார் என்ற செய்தி கேட்ட ஹுஸைன் நிஜாம்ஷா நம்பிக்கை இழந்து போனார். நாட்டு மக்களின் ஓலம் வேறு அவர் உள்ளத்தை உடைத்திருந்தது. பகமை கொழித்த நாட்டிலே வறுமை தலைவிரித்தாடலாயிற்று. செழுமை நிறைந்த அழகான பிரதேசங்கள் போர்த் தழும்பேறி விகாரமாகக் காட்சியளித்தன. படுதோல்வியுற்று வேதனையடைந்த ஹுஸைன் நிஜாம் ஷா வெள்ளைக் கொடி தூக்கினார். சமாதானத்தை விரும்பும் செய்தி கேட்ட ராமராயர் அகமதுநகர் சுல்தானுக்குச் சில நிபந்தனைகளை விதித்தார். கலியாண் கோட்டையைப் பீஜப்பூர் அலி ஆதில்ஷாவுக்கு உரிமையாக்க வேண்டியது. இதற்காக அகமதுநகர் நிஜாம்ஷாவே ராமராயரின் கூடாரத்துக்கு நேரில் வந்து கோட்டையின் சாவிகளை ஒப்புவிப்பதோடு நட்பின் அடையாளமாக ராயரிடமிருந்து தாம்பூலமும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அந்த நிபந்தனைகள்.

நாட்டைக் கொள்ளையிட்டுச் சூறையாடும் பகைவர்களின் கொடுமையிலிருந்து மக்களைக் காக்க எவ்வித நிபந்தனைக்கும் கட்டுப்பட்டாக வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருந்தார் நிஜாம்ஷா. ராமராயரின் விருப்பப்படியே நடப்பதாகவும் நாட்டைப் பாழ்படுத்தும் வேங்கடாத்திரியையும் சித்திஹாஸனையும் திரும்ப அழைத்துக் கொள்ளும்படியும் தூது அனுப்பினார். சுல்தானின் விருப்பப்படியே அவ்விருவரையும் தம் படைகளுடன் திரும்பி வரும்படி கட்டளையிட்டார் ராமராயர்.

அகம்பாவம் கொண்டலைந்த அகமதுநகர் ஹுஸைன் நிஜாம்ஷா அவமானமடைந்து சமாதானத்தை நாடி வரும் காட்சியைக் காண வீரர்கள் கூட்டம் வழியெங்கும் சாரி சாரியாகக் குவிந்திருந்தது. இந்தக் கூட்டத்திலிருந்து ஒதுங்கி நின்ற அந்த ஒற்றைக் கூடாரத்திலே ராமராயரும் அலி ஆதில்ஷாவும் கம்பீரமாக வீற்றிருந்தார்கள். அவர்களைச் சூழ்ந்து வெற்றி தேடித் தந்த வீரர் திலகங்களும், படைத் தலைவர்களும் பகட்டான ஆடை யணிந்து தத்தம் மன்னர்களுக்குப் பெருமை தரும் வகையில் இரு மருங்கிலும் அமர்ந்திருந்தார்கள். போரிலே சாகஸங்கள் புரிந்து புகழ் பெற்ற தம் வீரர்களுக்குப் பரிசில்களும் பட்டங்களும் வழங்கிக் கௌரவித்தனர் ராமராயரும் ஆதில்ஷாவும். இத்தனையும் ஆன பிறகு யாருக்காக இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்து கொண்டு உட்கார்ந்திருந்தார்களோ அவரை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.



ஜோதிடர்: உங்களுக்குக் கீழே, நிறைய பேர், வேலை செய்வாங்கோன்னு உங்க ஜாதகம் சொல்லுது!

வந்தவன்: உண்மைதாங்க! எனக்கு மாடிமேல் தான் வேலை! நிறைய பேர் வேலை செய்யறாங்க!

தோல்வியின் அவமானத்தோடு, தன்னை நேரில் வந்து பேட்டி கண்டு செல்லும்படி தாக்கீது அனுப்பியதைச் சிறுமையாக எண்ணிக் குமைந்துபோன அகமதுநகர் நிஜாம்ஷா ராயரைப் பேட்டி காணத் தமது பரிவாரங்களுடன் முதல் நாளே வந்து விட்டார். ராயரின் படையணிகளுக்குச் சற்றுத் தொலைவில் பாடி இறங்கியிருந்த அவர் ராமராயரிடம் தாங்கமுடியாத கோபம் கொண்டிருந்தார். ஆனால் செயலிழந்த அவரது கோபத்துக்குப் பலன் ஏது?

விழாக் கோலம் பூண்ட அகமது நகர் வீதிகளிலே வெற்றி வீரராகப் பவனி வர வேண்டியவர் தம்மை வெற்றி கொண்ட விரோதிகளின் நடுவே, ஏளனச் சிரிப்புடன் அவர்கள் வரவேற்று வழி வகுத்துக் கொடுக்கத் தோல்வியை ஒப்புக் கொண்டு தாம்பூலம் பெறப் போகிறார்! முன்னும் பின்னும் வேலேந்திய வீரர்கள் குதிரைகளில் கம்பீரமாகச் செல்ல இடையிலே தமது அந்தஸ்துக்கு ஏற்பப் பரிவாரங்கள் புடைசூழ்ந்து பவனிவரக் கூடாரத்தை நெருங்கிக்கொண்டிருந்தார் நிஜாம்ஷா. ஆனால் அதில் ஒரு கவர்ச்சி இல்லை. ஒருவர் முகத்திலாவது உற்சாகமிருந்தாலல்லவா? இவர்களின் வரவை வேடிக்கை பார்த்து நின்ற வீரர்களோ கிசுகிசுத்தார்கள். கேலியாக நகைத்தார்கள். நிஜாம்ஷா கம்பீரமான தோற்றம் உடையவர் தான். அவர் ஏறி வந்ததோ அசுவ லக்ஷணங்கள் அனைத்தும் கொண்ட அராபியக் குதிரைதான். ஆனால் அதன் ஒய்யார நடையிலே வழக்கமான துடிப்பில்லை. தன் மீது அமர்ந்திருப்பவரின் உள்ளத்தை அறிந்ததே போல வேண்டாத காரியத்துக்குச் செல்லும் வேதனையோடு அடி எடுத்து வைத்தது.

நிஜாம்ஷாவைக் கண்டதும் வெற்றி கொண்ட செருக்குடன் வீற்றிருக்கவில்லை

ராமராயர். எதிர்கொண்டழைக்கத் தாம் உட்கார்ந்திருந்த இருக்கையிலிருந்து எழுந்து வந்தார். விரோதி தோல்வியுற்றாலும் ஒரு மன்னனுக்குள்ள தகுதியோடு அவனை வர வேற்கவே விரும்பினார் ராமராயர். ஹுஸைன் நிஜாம்ஷாவின் கரங்கள் இரண்டையும் தாமே வலியப் பற்றி எடுத்துக் கொண்டார். வர வேற்க வருபவரின் விரிந்த கரங்களை விருந்தாளி தாவிப் பிடித்துத் தம் நட்பின் இறுக்கத்தை வெளிப்படுத்துவதுதான் வழக்கம். ஆனால் இங்கோ விருந்தாளி வேண்டாவெறுப்புடன் வந்திருந்தார். அவரது நீளாத கரங்களைத் தாமாக எடுத்துக் கொண்ட ராமராயர், விருந்தாளியின் குல வழக்கப்படி அவ்விரு கரங்களையும் தமது நட்பின் அடையாளமாக முத்தமிட்டார்.

சீண்டி விடப்பட்ட பாம்பெனச் சீறினார் ஹுஸைன் நிஜாம்ஷா. சவுக்கடி பட்டவரைப் போல உடலைச் சிலிர்த்துக் கொண்டார். தீண்டத் தகாத எதையோ தீண்டி விட்டவரைப் போல அருவருப்பாக முகத்தை வைத்துக் கொண்டு அருகிலிருந்த தம் அதிகாரி ஒருவரைப் பார்த்து, ''கையைக் கழுவுவதற்குத் தண்ணீரும் ஒரு பாத்திரமும்கொண்டு வாருங்கள்'' என்றார் அகம்பாவத்துடன்.

விஜயநகரத்து வீரர் வரிசையிலே, 'ஆஹா!' என்ற ஆத்திரக் குமுறலோடு, உறையிலிருந்து வாள்கள் உருவப்பட்டன. அண்ணாவுக்கு நேர்ந்து விட்ட அவமானத்தைக் கண்ட வேங்கடாத்திரி, வெறி கொண்ட வேங்கையெனத் துள்ளி எழுந்தான். ஓங்கிய அவன் கையிலே வெற்றி வாள் மின்னியது. ஆனால்...

ரத்தமாகச் சிவந்து விட்ட முகத்தோடு சிலையாகி நின்ற ராமராயர், தம் இமையாத விழிகளால் ஹுஸைன் நிஜாம்ஷாவையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தவர், பழி தீர்க்கப் பாய்ந்து வரும் வேங்கடாத்திரியைத் தமது இரும்புக் கரத்தால் — அவனைப் பாராமலே, ஒரு வார்த்தையும் பேசாமலே தடுத்து நிறுத்தினார்.

ஆதில்ஷாவும் அவரது ஆட்களும்கூட நிஜாம்ஷாவின் இந்த மரியாதைக்குறைவான செய்கையினால் திகைத்துத் திக்பிரமையடைந்து விட்டார்கள். பகைவனும் மதித்துப் போற்றும் பெருந் தன்மையும் பராக்கிரமமும் கொண்ட ராமராயரை நிஜாம்ஷா இப்படி அவமதித்து விட்டாரே, அதன் விளைவு எப்படியோ, என்ன நேரிடுமோ என்று அங்கு கூடி இருந்தோர் விக்கித்துப்போய் உட்கார்ந்திருந்தார்கள். ராயரிடம் காணப்பட்ட அமைதி எல்லோருக்குமே அச்சத்தை அளித்தது.

குமுறி வந்த தம் கோபத்தை, அவமானத்தினால் முறுக்கேறிப் புடைத்து நின்ற நரம்புகளை, கொதிக்கும் ரத்த ஓட்டத்தை, பாடம் புகட்டத் துடிக்கும் தம் கரங்களைக் கட்டுப் படுத்திக் கொண்டு நின்றார் ராமராயர். இத்தனை உணர்வுகளையும் விழுங்கியதன் விளைவாக அவரது கண்கள் மட்டுமே தணலாகச் சிவந்து ஜ்வலித்துக் கொண்டிருந்தன.

அவமானப்படுத்த எண்ணிய நிஜாம்ஷா அவமானப்பட்டுப் போனார். ராமராயரின் இந்த அமைதியும் நிதானமும் அவரைத் திகைக்க வைத்து விட்டன. இதற்குள் பாத்திரமும் தண்ணீரும் கொண்டு வரப்பட்டன. கறைபட்டுப் போனதாக எண்ணிய தன் கைகளை அதில் கழுவிக் கொண்டான் நிஜாம்ஷா. அப்போது அவர் உள்ளத்தின் நடுக்கம் கைகளில் தெரிந்தது. அசட்டுத்தனமான காரியத்தைச் செய்து விட்டோமோ என்ற நினைப்பிலே குறைப்பட்டுக் கொண்டது குற்றமுள்ள நெஞ்சு.

இத்தனை நேரம் அங்கு நிலவிய அமைதியை அதிர வைத்துக் கொண்டு எழுந்தது ராமராயரின் குரல். ''ஹுஸைன் நிஜாம்ஷா! உங்களை என் விருந்தாளியாகவே எதிர்பார்த்தேன். அந்த எண்ணத்துடனேயே வரவேற்கவும் வந்தேன். இந்த நிலையில் — இதற்குப் பிறகும்கூட — அந்த என் எண்ணத்தை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை. மாற்றிக் கொண்டால்.....?''

ஒரு விநாடி மௌனமானார் ராமராயர். அது ஒரு யுகமாக இருந்தது அங்கிருந்தவர்களுக்கு. ''...என் விரோதியாகிவிடும் உங்களை உயிரோடு அனுப்ப மாட்டார்கள் இங்கிருப்பவர்கள். ஆகவே என் விருந்தாளியாகவே இங்கிருந்து வெளியேறி விடுங்கள்'' என்று சொல்லித் தம் இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டவர் தண்ணீர் கொண்டு வரச் செய்து தம் கைகளையும் உதடுகளையும் கழுவிச் சுத்தப் படுத்திக் கொண்டார்.

ராமராயரின் அந்தப் பெருந்தன்மையின் முன்னால் தலை நிமிர்ந்து நிற்க முடியாமல் குன்றிப் போனார் நிஜாம் ஷா. கலியாண் கோட்டையின் சாவிகளை ஒப்பந்தப்படி மௌனமாக ராயரின் முன்னே நீட்டினார். ராயர், ஆதில்ஷாவின் பக்கம் திரும்பி அதை வாங்கிக் கொள்ளும்படி சைகை செய்தார். ஆதில்ஷாவோ தான் எழுந்து போய் அதை வாங்கிக் கொள்ளும் தகுதி நிஜாம்ஷாவுக்கு இல்லை என்று கருதினாற் போலத் தம் மெய் காப்பாளனைப் போய் வாங்கி வரும்படி உத்தரவிட்டார். சாவிகளை அவன் கையிலிருந்து பறித்துக் கொண்டு ஆதில்ஷாவின் பாதங்களில் வைத்தான் காப்பாளன்.

குற்றவாளியாக நிற்கும் தன்னைக் குத்தி எடுக்கும் ஆயிரமாயிரம் விழி அம்புகளிடமிருந்து விடுபடத் துடித்து, வேகமாக அவ்விடத்தை விட்டு வெளியேறினார் நிஜாம்ஷா. தன் மீது தாவி ஏறிய தலைவனின் தவிப்பை அறிந்து தானோ என்னவோ மந்தகதியில் வந்த குதிரை இப்போது வாயு வேகத்தில் பறந்தது.

ஃ ஃ ஃ

மின்னல், கொடியாகப் படர்ந்து பரவியது. கனத்துக் கிடந்த வானத்திலே கருத்த மேகங்கள் கன வேகமாக ஓடிக் கொண்டிருந்தன. காற்று 'ஓ'என்று ஓலமிட்டு உறுமியது பயங்கரமாக. பகற் பொழுதை மாற்றும் பயங்கரமானதோர் இருள் பரவி வந்தது. மலைகளைப் புரட்டி மோத விடுவது போன்ற ஒலி, எங்கோ தொலைவில் தொடங்கி வர வர அருகே வந்து அதிர்ந்தது.

இடி, மின்னல், புயல்.....!

கடல் நீரின் கொந்தளிப்பு இந்த ஒலிகளுக்கேற்ப உயர்ந்தும் தாழ்ந்தும் நடனமாடலாயிற்று. உருண்டு புரண்டு சுருண்டெழுந்த பேரலைகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு கரு நீலப் பரப்பிலே

கண்ணாடி நீர் முத்துக்களை வாரி இறைத்தன. கடலுக்கும் காற்றுக்கும் கடுமையான போராட்டம். கடல் நீரைப் பளார் பளார் என்று அறைந்து ஆரவாரமிட்டது காற்று. அடிபட்ட கடல் தன் அலைக் கரங்களால் காற்றை எட்டிப் பிடிக்க எகிறிக் குதித்து ஏமாற்றமடைந்த ஆத்திரத்திலே, புலம்பிக் கொண்டிருந்தது.

குமுறும் கடலின் உடலிலே குதிபோட்டுக் கொண்டிருந்தது ஒரு கப்பல். . க நிமிஷத்தில் என்ன நேருமோ என்ற நிலை குடிகொண்டிருந்தது அதில் இருந்தவர்களின் உள்ளத்திலே. காற்றிடம் காட்ட முடியாத தங்கள் கைவரிசையை அலைகள் அந்தக் கப்பலிடம் காண்பிக்கலாயின. தன் விரோதியின் விளையாட்டுப் பொருளான அந்தக் கப்பலைக் காற்றும் தன் களமாக்கிக் கொண்டது. கடலுக்கும் காற்றுக்குமிடைப்பட்ட அந்தக் கப்பலோ படாத பாடு பட்டது.

புயல், மின்னல் — அவற்றின் முடிவாகப் பேய் மழை கொட்டலாயிற்று. கப்பலிலிருந்தவர்கள் தவித்தார்கள். இங்குமங்கும் ஓடினார்கள். எப்படியாவது புயலிலிருந்து அந்தக் கலத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் அதில் இருந்த அத்தனை பேரின் கவனமும் கவலையாகப் பரிணமித்திருந்தது—ஒரே ஒருவனைத் தவிர! அந்த ஒருவன், மரணக் கம்பங்களுக்கிடையே கட்டுண்டு கிடந்த யூசப்கான் தான். மழை நீரைக் காற்று வாரி அவன் மீது கொட்டிய போது நினைவிழந்து மயங்கிக் கிடந்தவனின் உடலிலே ஒரு தெம்புபிறந்தது. உடல் ரணத்திலே உப்பு நீரைக் கொட்டிய போது கூட உடலை அசைக்காத யூசப்கான் இயற்கையன்னையின் அமிருத தாரையான மழை நீர் பட்டதும் உடலைச் சிலிர்த்துக் கொண்டான். தலை நிமிர்ந்து வாய் திறந்து மழைத் திவலைகளை ஏந்திக் குடித்துக் காய்ந்த நெஞ்சை ஈரமாக்கிக் கொண்டான். மழை வலுக்க வலுக்க அவன் உடலிலே தெம்பு பிறக்கலாயிற்று. புயலிடைப்பட்ட கப்பலின் ஆட்டத்தையும், போர்ச்சுகீசியர்களின் தவிப்பையும் கண்ட யூசப்கான் கடகட வென்று வாய் விட்டுச் சிரிக்கலானான். அந்தச் சிரிப்பு அதிதமாக, அந்தக் கடல் ஓலத்தையும், புயலின் சீற்றத்தையும் மீறி 'ஹோ' என்று நாலுதிக்குகளிலும் பரவியது. **(தொடரும்)**

குட்டிக் கதை

1865-ம் ஆண்டு ஏப்ரல் 14ம் தேதி. அன்று இரவுதான் வாஷிங்டன் நகரிலுள்ள ஃபோர்டு அரங்கத்தில் ஜான் வில்கி பூத் என்னும் கொடியவன் தன் துப்பாக்கிக் குண்டுகளினால் ஆபிரஹாம் லிங்கனின் ஆவியைப் போக்கினான். நாடே துக்கத்தில் ஆழ்ந்து விட்டது.

ஜான் வில்கி பூத்தின் சகோதரன் எட்வின் பூத் அந்தக் காலத்தில் ஒரு சிறந்த மேடை நடிகன். தன் சகோதரன் செய்த அக்கிரமச் செயலுக்காக எட்வின் மனம் புழுங்கினான். படுபாவி ஜான் பூத்தின் சகோதரனாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதே என்ற அவமான உணர்ச்சிக்கு ஆளானான். சிறிது காலம் உற்ற நண்பர்களைச் சந்திக்கக்கூட வெட்கப்பட்டுக் கொண்டு அஞ்ஞாதவாசம் செய்தான் அந்த நல்ல நடிகன்.

அந்த இருண்ட மனம் வெதும்பிய நாட்களில் அவன் உள்ளத்துக்கு ஆறுதல் அளிக்க முன்வந்த ஒரே பொருள் அவன் சட்டைப் பையிலிருந்த கடிதம்தான். அமெரிக்கத் தரைப் படைத் தலைமைக் காரியாலயத்திலிருந்து சில ஆண்டுகளுக்கு முன்னால் எட்வின் பூத்துக்கு வந்த கடிதம் அது.

ஆப்ரகாம் லிங்கன் கொலையுண்டதற்குச் சில காலத்துக்கு முன்னால் ஒரு நாள் இரவு. நாடகம் முடிந்தவுடன் அந்த நடிகன், பிலெடெல்பியா நகரத்துக்குப் போவதற்காக பென்ஸில்வேனியா ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தான். ரயில் புறப்படும் வேளை! ஒரே ஜன நெரிசல். ரயில் பெட்டிகளில் கூட்டம் பிதுங்கி வழிந்துகொண்டிருந்தது.

எட்வின் எப்படியோ ஒரு பெட்டியில் காலை வைத்ததும் வண்டி நகரத் தொடங்கியது. அந்தக் கணத்தில் வண்டியிலும் ஏற முடியாமல் பின்னாலும் போகமுடியாமல் கூட்டத்தினால் தள்ளப்பட்டு ஓர் இளைஞன் ரயில் தொடருக்கும் பிளாட்பாரத்துக்கும் இடையேயுள்ள பள்ளத்தில் சாய்ந்துவிட்டான். இமை கொட்டும் நேரம் அதிகமாயிருந்தால்கூட அந்த இளைஞன் கீழே விழுந்து ரயில் சக்கரங்கள் அவன் மேல் ஏறியிருக்கும். ஆனால் அவன் அதிர்ஷ்டம் அவன் சாய்ந்ததை எட்வின் பார்த்துவிட்டான். வண்டி விளிம்பை ஒரு கையால் பிடித்துக் கொண்டு சட்டென்று குனிந்து மற்றொரு கையால் அந்த இளைஞனின் கோட் காலரைப் பிடித்து அப்படியே அவனை வண்டிக்குள் இழுத்துக் காப்பாற்றி விட்டான்.

அதிர்ச்சி நீங்கிய அந்த இளைஞன் எட்வின் பூத் யாரென்பதைத் தெரிந்துகொண்டு, ''மிருந்த வந்தனம் மிஸ்டர் பூத்! நான் தப்பியது ஆச்சரியம்தான்'' என்றான். பதற்றத்தில் பூத் அந்த இளைஞனை யாரென்று விசாரிக்கவில்லை. அவர்கள் பிரிந்து போய்விட்டார்கள்.

சில வாரங்கள் கழித்துத் தரைப் படைத் தலைமைக் காரியாலய அதிகாரி எட்வினுக்கு அன்று அவன் பென்ஸில்வேனியா ரயில்வே ஸ்டேஷனில் துணிவுடன் தன் உயிரைப் பொருட்படுத்தாமல் ஓர் இளைஞனைக் காப்பாற்றியதற்கு நன்றி தெரிவித்து அந்த இளைஞன் யாரென்றும் குறிப்பிட்டிருந்தார்.

அந்தக் கடிதம்தான் எட்வினுக்கு ஆறுதல் அளித்த ஆயுதம். ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்ட அந்த இளைஞன் வேறு யாருமில்லை. ஆபிரகாம் லிங்கனின் அருமை மகன் ராபர்ட் டாட் லிங்கன்!

ஒரு சகோதரன் பின்னை லிங்கனுக்கு உயிர் கொடுத்தான். மற்றொரு சகோதரன் தந்தை லிங்கனின் உயிரைப் போக்கினான்!

கானகத்தைக் கடந்த காதலர்கள்



ஒரு நாளைக்கும் மற்றொரு நாளைக்கும் வித்தியாசமில்லாத ஒரே மாதிரியான வாழ்க்கை அவர்களுக்கு அலுத்து விட்டது. ராபர்ட்டும் அவன் மனைவி ஜூனும் மாறுதலை விரும்பினார்கள். மின்சார இன்ஜினீயரிங் சம்பந்தப்பட்ட வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த அவர்களுக்குக் கணக்கு வழக்குகளைப் பார்த்தது போதும் போதுமென்றாகி விட்டது. சூரிய ஒளியால் கழுவப்பட்ட ஆப்பிரிக்காவின் பரந்த வெளிகளுக்காக ஏங்கினார்கள்.

ஒரு நாள் பத்திரிகை ஒன்றைப் பிரித்துப் படித்துக் கொண்டிருந்த ராபர்ட், ''நான் ஒரு வாத்து வாங்கப் போகிறேன்'' என்றான். அவன் இரவுச் சாப்பாட்டைப் பற்றி யோசிக்க ஆரம்பித்து விட்டான் என்று எண்ணிய ஜூன், ''ஏன் வான்கோழி மீது உங்களுக்கு என்ன வெறுப்பு?'' என்று கேட்டாள்.

''இந்த வாத்தின் விலை இருநூற்றி எழுபத்தைந்து பவுன்கள்!'' என்றான் ராபர்ட்.

பிறகுதான் ஜூனுக்குப் புரிந்தது. அவன் வாத்து என்று குறிப்பிட்டது நீரிலும் சரி, நிலத்திலும் சரி விரைந்து செல்லக்கூடிய ஒரு ராணுவ வாகனம். ராணுவத்துக்கு இன்று தேவைப்படாததால் அந்த விலைக்கு அந்த வகைய வாகனங்கள் சிலவற்றை விற்றுவிட இருந்தார்கள் அதிகாரிகள். டி. யு. கே. டபிள்யூ. என்ற பெயர் கொண்ட அதனை 'டக்' என்றுதான் ராணுவத்தினர் செல்லமாக அழைப்பது வழக்கம். காடுகளும் மலைகளும் ஆறுகளும் நிறைந்த ஆப்பிரிக்காவில் நன்றாகச் சுற்றி வந்து எல்லாவற்றையும் காண வேண்டுமென்றால் அதற்கு இதைப் போன்ற ஒரு வாகனம் தான் ஏற்றதாக இருக்கும் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள்.

ஆப்பிரிக்காவுக்கு விமானத்தில் வந்து சேர்ந்த அவர்கள் அங்கு முன்கூட்டியே தங்களுக்காகக் கப்பலில் வந்திறங்கி யிருந்த 'வாத்து வாகன'த்துக்கு ஷாகா ஸூலூ என்று நாமகரணம் செய்தார்கள். ஐந்து பெரிய கார்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிற்கக் கூடிய இடத்தை இவர்களுடைய ஒரே வாகனம் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. அதனுள் பன்னிரண்டு அடி நீளமும் ஏழு அடி அகலமும் உள்ளதாக இருந்த ஓர் அறைதான் அவர்கள் வீடு. இன்னும் பல மாதங்களுக்கு. சமையலறை, காரியாலய அறை, படுக்கை அறை எல்லாமே அதுதான். பள்ளிக்கூடச் சிறுவன் நீண்ட கால விடுமுறையின் ஆரம்பத்தை எத்தனை ஆவலோடு எதிர்பார்ப்பானோ அத்தனை ஆர்வமும் பரபரப்பும் முகத்தில் பிரதிபலிக்க அந்தச் சிறிய அறைக்குள் சுற்றிச் சுற்றி வந்தாள் ஜூன். அவளையும் அவள் கணவனையும் தவிர காமிராவைக் கையாண்ட ஜானும் ஆப்பிரிக்க சுதேசிகளான இரண்டு வேலைக்காரர்களும் அந்த வண்டியில் பிரயாணம் செய்யவிருந்தார்கள். குழந்தைகளையெல்லாம் பள்ளிக்கூட ஹாஸ்டலிலே சேர்த்து விட்டுத்தான் வந்திருந்தார்கள், கடைக்குட்டி ஆலிவரைத் தவிர. குழந்தைகளை வேணுமானால் ஹாஸ்டலில் சேர்க்கலாம்; நாய்களை என்ன செய்வது? அவற்றை விற்பதற்கு மனம் வரவில்லை. ஆகவே இருந்த சிறிய





இடத்தில் நான்கு நாய்கள் வேறு ஒண்டிக் கொண்டன. இத்தனை பேருக்கும் பல மாதங்களுக்குத் தேவையான வகை வகையான சாமான்கள் சேகரித்து ஏற்றப்பட்டன. இப்படி அடைந்து கிடந்தாலும் எல்லாவற்றையும் அழகாக அடுக்கி வைத்திருந்தாள் ஜூன்.

இந்தியாவில் பிறந்தவள் ஜூன். தெற்கு ரொடீஷியாவில் பள்ளிக்குச் சென்றவள். யுத்த சமயத்தில் அவள் தாய்நாட்டுக்கு எவ்விதத்திலேனும் உதவ எண்ணி, புலவயோ நகரில் இருந்த விமானப் படை முகாமைச் சேர்ந்த காண்டீனில் பணி புரிய ஆரம்பித்தாள். அங்கு வருகிற விமானிகளுக்கு டீயும் பலகாரங்களும் வழங்க வேண்டியது அவள் வேலை. அங்கேதான்—டீ நிறைந்த ஒரு கோப்பையை எடுத்து நீட்டும்போதுதான் — அதனைப் பெற்றுக் கொண்ட அந்த வாலிபனை முதன் முதலில் அவள் சந்தித்தாள். அடுத்த சில மாதங்களுக்குள் அவர்களிடையே அழுத்தமான ஒரு பிணைப்பு ஏற்பட்டு விட்டது. ஒருவரிடம் ஒருவர் மிகுந்த அக்கறை காட்ட ஆரம்பித்தனர். 'நீ என்னைக் காதலிக்கிறாயா' என்பதோ 'என்னைத் திருமணம் செய்து கொள்வாயோ' என்பதோ தேவையற்ற, பொருளற்ற அசட்டுத்தனமான கேள்விகள் என்று தோன்றுமளவுக்கு அந்த மனங்கள் ஒன்றுபட்டு விட்டன. கல்யாணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றித்தான் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஃ ஃ ஃ

ஸாம்பஸி நதியும் சோபி ஆறும் ஒன்று கலக்கும் இடத்துக்கு எதிரே அவர்கள் இப்போது முகாம் போட்டிருந்தனர். அவர்களுடன் இருந்த ஆப்பிரிக்க சுதேசிப் பணி



உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.





கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.

இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மென்ட் K-2, சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாதகால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



SP/1/P/7/64

யாட்கள் அவற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வர மறுத்தார்கள். முதலைகள் இருக்கும்; எங்களால் போக முடியாது'' என்று கூறி விட்டார்கள்.

அழுக்குப் போகத் தேய்த்துக் குளிக்காமலே படுக்கச் செல்வதில் ஆலிவருக்கு ரொம்பக் குஷி!

மறு நாள் காலையில் சோபி நதியில் அவர்களுடைய 'வாத்து வாகனம்' மிதந்து முன்னேறியது. வழிகாட்டி அழைத்துப் போகக் கூடிய ஆப்பிரிக்க சுதேசி ஒருவன் அவர்களுடன் இப்போது வந்தான். அரை குறை ஆங்கிலம் பேசிய அவனை ஜானி என்று அழைத்தார்கள். ஒரு சிறிய படகில் செம்படவனொருவன் தன்னந் தனியாகச் சென்று கொண்டிருப்பதைப் பார்த்த ஜானி, ''எங்களுடன் சேர்ந்த மாதிரியாகவே வா; இந்தப் பக்கங்களில் நீர் யானைகள் அதிகமாக இருக்கின்றன'' என்று எச்சரித்தான். ''அவற்றில் பொல்லாததான ஒன்றும் உள்ளது. உனக்குத்தான் தெரியுமே! இரண்டு நாளைக்கு முன் உன் படகை அது கவிழ்த்துவிடவில்லையா?''

அந்தச் செம்படவன் கருமையான தன் முகத்தில் பற்கள் வெளேரென்று பளிச்சிடப் புன்னகை புரிந்தான். ''எனக்கு மீன் பிடிக்க வேண்டும்'' என்று சொல்லி விட்டு விரைந்து போய் விட்டான்.

நதிக் கரையில் தென்பட்ட யானைகளைப் பார்த்துக் கொண்டு ஷாகாலூலூவில் பிரயாணம் செய்தவர்கள் நிதானமாகச் சென்றார்கள். அந்த 'வாத்து வாகன'த்தை ஜான் தான் செலுத்திச் சென்றான். நாலாபுறமும் இலேசான மூடுபனி கவிழ்ந்திருந்ததால் எதையும் மிகத் தெளிவாகக் காண முடியவில்லை. திடீரென்று, ''மெல்லப் போ! மெல்லப் போ!'' என்று ராபர்ட் அலறும் சத்தம் கேட்டது. ஜான் அவனருகில் நெருங்கி வந்து, ''இந்த அதிர்ச்சியை உன்னால் தாங்க முடியுமோ என்னவோ! முதலுதவி அவசரமாகத் தேவைப்படுகிறது. பின்பக்கம் போய் மருந்து பாண்டேஜ் துணி முதலானவற்றைச் சீக்கிரம் எடுத்து வா'' என்றான்.

ஜான் அவற்றை எடுத்து வந்து ராபர்ட்டிடம் கொடுத்தான். அப்போதுதான் அந்த ஆப்பிரிக்கச் சுதேசியை அவன் பார்த்தான். சில மணி நேரங்களுக்கு முன், 'எங்களுடன் சேர்ந்தாற்போலவே வா!' என்ற அவர்களுடைய யோசனையைப் புறக்கணித்து விட்டு மீன் பிடிக்க வேண்டும் என்று துரிதமாகச் சென்ற செம்படவனேதான் அவன்.

அவனுடைய படகின் அடிவாரத்தில் ரத்தமும் தண்ணீருமாக நாலாபுறமும் தெறித்துச் சிதறிக் கிடந்தன. அவன் வேதனையால் துடித்து நெளிந்து கொண்டிருந்தான். உடைந்து தொளதொள வென்று தொங்கிய தன் கையைத் தோள்பட்டைக்கு அருகே அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் மார்புக் கூட்டின் எலும்புகள் நொறுக்கப்பட்டிருந்தன. ஒரு தொடையின் சதை குதறப்பட்டிருந்தது. ராபர்ட் தனக்குத் தெரிந்த அளவுக்கு முதலுதவி செய்து வைத்தான். வலி தெரியாமலிருக்க மயக்க மருந்தும் கொடுத்தான். பக்கத்திலிருந்த ஊருக்கு அவனைப் படகிலேயே அழைத்துப் போனார்கள் வேறு சில சுதேசிகள். குற்றுயிரும் குலையுயிருமாகச் சென்று கொண்டிருந்த அவனுக்குத் தாங்கள் செய்யக் கூடிய கடைசி உபகாரமாக — மலையத்தனை வேதனையை அநுபவித்துக் கொண்டிருந்த அவனுக்குக் கடுகத்தனையேனும் சுகமளிப்பதற்காக—ஒரு தலையணையை எடுத்து அவனுக்குப் பக்கத்திலிருந்த ஒருவனிடம் விசிறிப் போட்டான் ராபர்ட். செம்படவனின் சிரம் தலையணையில் தாழ்வதைப் பார்த்துப் பெருமூச்செறிந்த ஜான், 'நீர் யானைகள் ரொம்பச் சாதுவான பிராணிகள். அவை யாரையும் தொந்தரவு செய்யாது' என்று கூறப்படுவதை நினைத்து அத்தகைய எண்ணம் மக்களிடையே எப்படிப் பரவியது என்று அதிசயித்தான். இதே போல் வேறு பல மிருகங்களைப் பற்றியும் பலவிதமான அபிப்பிராயங்கள், கதைகள் உலவுகின்றன. இவற்றில் யானைகளைப் பற்றியும் ஒரு வதந்தி. யானை ஒன்று செத்துப் போனால் அந்த மந்தையில் உள்ள மற்ற யானைகள் அதைத் தூக்கிப் போகும் என்று சொல்வார்கள். இது வெறும் புரளி அல்ல; உண்மை என்பதை நேரில் கண்டு உணரும் சந்தர்ப்பம் ஜானுக்கும் அவனுடன் சென்ற மற்றவர்களுக்கும் சீக்கிரமே ஏற்பட்டது.

ஒரு நாள் மத்தியானத்துக்குமேல், நீண்ட காலமாகவே வேட்டையாடுவோர் பயன்படுத்தி வரும் ஒரு பாதை வழியாகச் சென்று கொண்டிருந்தார்கள். ஷாகா லூலூவுக்கு முன்னால் ஒரு பெட்போர்ட் லாரி சென்றது. அதை ஓட்டிப் போனவன் ஜாக் சேஸ். அவன் பெக்வானலாண்ட் நாட்டின் காட்டிலாகாவில் பணியாற்றுபவன். அந்தப் பகுதியில் திமிர் பிடித்து அலைந்து சுதேசிகளுக்குத் துன்பம் தரும் மூன்று யானைகளைப் பற்றிக் கேள்விப்பட்டு அது உண்மைதானா என்பதை அறிந்து போக வந்திருந்தான். ஓரிடத்தில் ஜாக் சேஸ் தான் ஓட்டி வந்த லாரியை நிறுத்தி விட்டு, தொலைவில் ஆற்றங்கரையில் தண்ணீர் அருந்திக் கொண்டிருந்த யானை மந்தையைப் பின்னால் வந்த ராபர்ட்டுக்கும் மற்றவர்களுக்கும் சுட்டிக் காட்டினான். ''அவை நீர் அருந்தி விட்டுத் திரும்பி வரும். புகைப்படம் எடுக்க வேண்டுமானால் இந்தப் பக்கமாய்க் கொஞ்ச தூரம் போய் நின்று விடுங்கள். நான் பின்னாலேயே வருகிறேன்'' என்று கூறினான்.

அவ்வாறே ராபர்ட் ஷாகா லூலூவை ஓட்டிப் போனான். ஜான் படமெடுக்க வசதியாக 'வாத்து வாகன'த்தின் கூரையில் ஏறிக் கொண்டான். ஆற்றங்கரையில் தாயும் குட்டிகளுமாகப் பல யானைகள், தும்பிக்கையிலிருக்கும் நீரை வாய்க்குள் பீச்சுவதும் முதுகில் கொட்டிக் கொள்வதுமாக இருந்தன. தாகத்தைத் தணித்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்த யானைகளை நெருங்கியதும் திடீரென்று ஜான் தன் உள்ளுணர்வு தன்னை எச்சரிப்பதை உணர்ந்தான். குட்டிகளுடன் வரும் தாய் யானைகளிடம்

ரஷ்ய ஜனநாயகம்!

ரஷ்யாவில் ஸ்டாலினும், அமெரிக்காவில் ட்ரூமனும் பதவியில் இருந்த சமயம்; அமெரிக்க அயல்நாட்டு மந்திரி பயர்ன்ஸும் ரஷ்ய வெளி விவகார மந்திரி மாலடோவும் 'ஜனநாயகம்' பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது பயர்ன்ஸ், ''ரஷ்யாவில் இப்பொழுது நீங்களெல்லாம் ஜனநாயகம் என்ற சொல்லின் பொருளையே மறந்து விட்டிருப்பீர்கள். ஆனால் நாங்கள் அமெரிக்காவில் எல்லாவித சுதந்திரங்களையும் பெற்றுள்ளோம். இப்பொழுதே ஒரு விமானத்தில் ஏறிக் கொண்டு வாஷிங்டன் செல்வோம். நேராக வெள்ளை மாளிகைக்குச் சென்று ஜனாதிபதியைச் சந்தித்து, 'ட்ரூமன், நீர் ஒரு முட்டாள்' என்று கூறிவிட்டு வந்து விடலாம். எங்களை ஒன்றும் செய்ய மாட்டார்கள்'' என்றார்.

அதைக் கேட்ட மாலடோவ், ''ரஷ்யாவில் எங்களுக்கும் இத்தகைய சுதந்திரம் உண்டு'' என்றார். பயர்ன்ஸுக்கு ஒரே வியப்பு. ''எப்படி? எப்படி?'' என்றார் மற்றவரை. மாலடோவ் சொன்னார்: ''இப்பொழுது நானும் ஒரு விமானத்தில் ஏறிக் கொண்டு மாஸ்கோ செல்லலாம். அங்கிருந்து நேராகக் கிரெம்ளினுக்கும் போகலாம். போய் ஸ்டாலினைச் சந்தித்து அவர் முகத்துக்கு நேரேயே, ''ட்ரூமன் ஒரு முட்டாள்'' என்று கூறி விட்டு வரலாம். அதற்காக ஸ்டாலின் ஒன்றும் செய்து விடமாட்டார்.''



மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வெகு சீக்கிரத்தில் அவற்றுக்குக் கோபம் வந்து விடும் என்பதை அவன் கேள்விப்பட்டிருந்தான்.

அதற்கேற்றாற்போல் இருபது கெஜ தூரத்தில் இருந்த யானை மந்தை இப்போது நின்றது. ஆண் யானையும் பெண் யானைகளும் குட்டிகளும் நெருக்கமாக ஒன்று கூடின. சேர்ந்தாற் போல் அவர்களை நோக்கி முன்னேறின. திடுமென்று அவற்றில் ஒரு பெண் யானை பிளிறியது. மீண்டும் பயங்கரமாக ஒரு முறை பிளிறியது. முழங்கால்களை மடக்காத யானைகளுக்கே உரித்தான கம்பீரமான ஓட்டத்துடன் அவர்களை நோக்கி அந்தப் பெண் யானை திமுதிமுவென்று வேகமாக வந்தது.

ஒரு சில வினாடிகளுக்கு என்ன செய்வது, என்ன நினைப்பது என்றே ஜானுக்குப் புரியவில்லை. பிறகு ராபர்ட்டுடைய துப்பாக்கி, பெட்டியில் இருப்பது நினைவு வரவே அவசரம் அவசரமாக அதனை வெளியே எடுத்தான். அதற்குள் காட்டிலாகா அதிகாரி ஜாக் தன் துப்பாக்கியுடன் பெட்போர்ட் லாரியிலிருந்து கீழே இறங்கி அந்த யானையை நோக்கிச் சுட்டான். இம்மி அளவும் குறி பிசகாத குண்டு யானையின் இரு கண்களுக்கிடையில் பாய்ந்தது. ஜாக்குக்கு இருபது அடிகளுக்கு முன்னால் முழங்காலை மடக்கிச் சரிந்தது யானை. பின்னர் வலது புறமாகப் புரண்டு விழுந்தது. கடைசியாக அதன் தும்பிக்கை தரையைத் தட்டியது.

இதற்கிடையில் ஜான் வாகனத்தைச் சீக்கிரமாகக் கிளப்பி ஓட்டிப் போகுமாறு ராபர்ட்டைத் துரிதப்படுத்தினான். ஷாகா லூஜா அவ்விடத்தை விட்டு அகன்று விரைந்தது.


திரும்பிப் பார்த்த ஜான் யானை மந்தை இறந்து விழுந்த யானையைச் சுற்றி நின்று தலையைக் குனிந்து தும்பிக்கைகளாலும் பாதங்களாலும் தந்தங்களாலும் அந்தப் பெண் யானைச் சவத்தைத் தூக்க முயலுவதைக் கண்டு மேனி சிலிர்த்தான். மறுபடியும் அந்தப் பக்கம் போக மறுநாள்தான் அவர்களுக்குத் துணிவு பிறந்தது. பாதையில் கிடக்கும் சடலத்தை ஒதுக்கித் தள்ளவேண்டும்; இல்லையானால் போக்குவரத்து தடைப்படும் என்பதற்காக யானையைச் சுட்ட இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. ஏனெனில் யானையின் சடலத்தைக் காணவில்லை. அக்கம் பக்கத்தில் நீண்ட நேரம் தேடினார்கள். யானை சுருண்டு விழுந்த இடத்திலிருந்து கிட்டத்தட்ட நூறு கஜ தூரத்துக்கு அப்பால் அதன் சடலம் இருந்தது. எப்படியாவது ஆற்றங்கரைக்கு அதனைக் கொண்டு போய் விட்டால் குளிர்ந்த நீர் அதற்கு இதமளிக்கும்; உயிர் பிழைத்தாலும் பிழைத்துவிடும் என்று மற்ற யானைகள் எண்ணியிருக்க வேண்டும். அவற்றின் வீரத்தையும் அபிமானத்தையும் விசுவாசத்தையும் நினைத்து நினைத்து வியந்து போனார்கள். மந்தையில் அந்த ஒரு பெண் யானைக்கு மட்டும் அத்தனை கோபம் வந்து அவர்களைத் தாக்க முற்படுவானேன்? அதற்கான காரணமும் புரிந்தது. சட்டவிரோதமாக யானைத் தந்தங்களைக் கவர்ந்து போய் விற்க நினைத்தவர்கள் யாரோ அதனைச் சுட்டிருக்கிறார்கள். அந்தக் குண்டு குறி பிசகி யானையின் காலில் பட்டிருக்கிறது. யானை வேதனைப்பட்டதே ஒழிய இறக்கவில்லை. அதனால்தான் மனித வாடை வீசிய மாத்திரத்தில் அதற்கு அத்தனை கோபம். காலின் மேற்புறத்தில் இன்னமும் குண்டுத் தழும்பைக் காண அவர்களால் முடிந்தது.

அன்றிரவு படுக்கப் போகும்போது அம்மா எனக்கு ஒரு கதை சொல்லு என்று ஆலிவர் கேட்டான்! ஜானுக்கு என்ன பதிலளிப்பதென்றே புரியவில்லை. கடந்த பல தினங்களில் அவர்கள் ஒன்றல்ல இரண்டல்ல; கதைகளில் வரக்கூடியதை விட அதிசயமானதும் பயங்கரமானதும் வீரம் செறிந்ததுமான

நிகழ்ச்சிகள் பலவற்றில் பங்கு பற்றி யிருக்கிறார்கள். இருந்தாலும் குழந்தை மனத்துக்கு ஒரே ஒரு ஊரிலே... என்று ஆரம்பித்துக் கதை கூறினால்தான் திருப்தி!

அமெரிக்காவில் ஷா

பெர்னார்ட் ஷா ஒரு முறை அமெரிக்கா சென்றார். அதிக நாட்கள் தங்காமல் விரைவில் திரும்புவதற்கு ஏற்பாடுகள் செய்தார். இதையறிந்த நிருபர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். சலிக்காமல் பதில் கொடுத்தார் பெர்னார்ட் ஷா. நிருபர் ஒருவர் ''அமெரிக்காவில் நீங்கள் எதை மிகவும் விரும்புகிறீர்கள்?'' என்று கேட்டார். ஷா பெருமிதமாக, ''அதைவிட்டு வெளியேறுவதை!'' என்றார் பளிச்சென்று.



சுவாய் நதியில் முதலை வேட்டையாடுகிற அனுபவமும் ராபர்ட்டுக்கும் ஜானுக்கும் ஏற்பட்டது. பாபி என்பவன் பல வருஷங்களாகவே ஆப்பிரிக்கக் கானகங்களில் முதலை வேட்டையாடி வந்தவன். முதலைகளின் தோல்களுக்கு நல்ல கிராக்கி உண்டு. ஒரு நாள் இருட்டத் தொடங்கிய நேரத்தில் படகுகள் ஓசைப் படாமல் கரையிலிருந்து விடுபட்டுக் கிளம்பி நிதானமான நீரோட்டத்துடன் நகரத் தொடங்கின. முதல் படகில் பாபியும் அவன் பணியாட்களான ஆப்பிரிக்கச் சுதேசிகள் சிலரும் இருந்தார்கள். அதற்குப் பின்னால் அடுத்த படகில் ராபர்ட்டும் ஜானும் அமர்ந்து ஆற்றின் நீர்மட்டத்தைக் கவனித்தார்கள். சுவாய் நதி குறுகலானது. கருமையான கண்ணாடியாகப் பளபளக்கும் பாம்பு இருள் என்ற மலைக் குகைக்குள் ஊடுருவிச் செல்வது போல் ஆறு நெளிந்து ஊர்ந்தது. அமாவாசை இருளைக் கிழித்துக் கொண்டு படகின் முன்புறமிருந்த விளக்கு ஒளிக் கற்றை பாய்ந்தது. முதலைகளின் பார்வை இழந்த கண்கள் செக்கச் செவேலென்று விநோதமாக ஒளிர்ந்தன.

இருபுறங்களிலும் அடர்ந்திருந்த கானகங்களிலிருந்து சிங்கத்தின் கர்ஜனையும் யானையின் பிளிறலும் கேட்டன. இடையிடையே பாபியின் துப்பாக்கி இயங்கும் வெடியோசையும் அடிபட்ட முதலைகள் படபடவென்று வாலாலும் உடலாலும் நீரினை அடித்து நெளிந்து அலையும் சத்தமும், இறந்த முதலைகளைப் பணியாட்கள் படகினுள்ளே இழுத்துப் போடும் சலசலப்பு ஒலியும் எழுந்தன.

ஆனால் இத்தனை ஒலிகளும் கானகத்தில் நிலவும் நிசப்தத்தின் குரலாகவே ஜானுக்குத் தோன்றியது. நாணல் புதர்களை விலக்கிக் கொண்டு சென்ற படகுகள் சிலந்திக் கூடுகளையும் கலைத்துக் கொண்டு சென்றன. தாத்தாவின் கைத்தடியைத் தொங்கவிடக் கூடிய அளவுக்குக் கனமான சிலந்திக் கூடு அவை. பயங்கரமான தோற்றம் கொண்ட பெரிய பெரிய சிலந்திகள்.

இரவு ஒரு மணிக்குக் கூடாரத்துக்குத் திரும்பி வந்தார்கள். அன்று இரவு மற்ற அனைவருமே யானைகளின் பிளிறல்களாலும் சிங்கங்களின் கர்ஜனைகளாலும் தூங்க முடியாமல் அவதிப்பட்டு விழிப்புடன் இருக்கையில் அசதி தாளாமல் அயர்ந்து தூங்கிய ஜான் மட்டும் மரக் கட்டைபோல் கிடந்தான்.

* * *

ஜானுக்கும் ராபர்ட்டுக்கும் ஒரு சிங்கக் குட்டி பரிசாகக் கிடைத்தது. அதனை அவர்களுக்குக் கொடுத்தவன் காட்டிலாகா அதிகாரி ஜாக் சேஸ்.

ஒரு நாள் இருட்டிக் கொண்டு வந்த சமயத்தில் ஓரிடத்தில் முகாம் போட்டார்கள். தூரத்தில் ஒரு மான் கூட்டம் தென்பட்டது. ராபர்ட் அவற்றில் ஒன்றை இரவுச் சாப்பாட்டுக்காக வேட்டையாடி வருவதாகக் கூறிச் சென்றான். சற்று நேரத்துக்குப் பிறகு துப்பாக்கி வெடியோசைகள் கேட்டன.

முகாமில் ஜான் காத்திருந்தான். ராபர்ட் திரும்பி வந்தான். இரண்டு தோட்டாக்கள் குறி தவறி விட்டனவென்றும் ஒன்று மானை வீழ்த்தி விட்டதென்றும் கூறினான். ஆனால் மான் சாகவில்லை. அதன் வேதனையை நீக்கச் சீக்கிரமே அதற்கு மரணத்தைத் தருவிக்க வேண்டும். ராபர்ட்டுக்கு மேலும் துப்பாக்கித் தோட்டாக்கள் தேவைப்பட்டன. இவற்றை எடுத்துக் கொண்டு வந்த வழியே திரும்பினான் அவன்.


நிமிஷங்களை எண்ணிக் கொண்டிருந்தான் ஜான். ராபர்ட்டுடன் போன சுதேசிப் பணியாட்களுள் ஒருவன் திரும்பி வந்தான். ''உங்களை எஜமானர் அழைத்து வரச் சொன்னார். அவர் சுட்டு வீழ்த்திய மானைச் சில சிங்கங்கள் சுவைத்துக் கொண்டிருக்கின்றன. அதைப் பார்க்க உங்களைக் கூப்பிடுகிறார். பாட்டரி விளக்குகளையும் எடுத்து வரச் சொன்னார்.''

குழந்தையை மற்றொரு பணியாளிடம் ஒப்படைத்து விட்டு ஜான் அவசரம் அவசரமாக நடந்தான். அவன் பயந்தபடியே ராபர்ட் சிங்கங்களுடன் அவற்றின் பாஷையில் 'பேசிக்' கொண்டிருந்தான்.

தான் வளர்த்த சிங்கக் குட்டியுடன் எப்படி உறுமல் ஒலி எழுப்பிக் கொஞ்சிப் பேசி விளையாடுவானோ, அதே யுக்தியைச் சற்றுத் தொலைவிலிருந்த சிங்கக் குடும்பத்தினிடம் கையாண்டு பார்த்துக் கொண்டிருந்தான் ராபர்ட். சக்தி வாய்ந்த பெரிய மின்சார பாட்டரி விளக்குகள் வீசிய ஒளிக் கற்றையில் அந்தக் குடும்பத்தை நன்கு பார்க்க முடிந்தது. எப்போதாவது ஒரு முறைதான் இவர்[illegible]ர் இருந்த பக்கமாக அவை திரும்பும். மற்[illegible]ப அவை விருந்துண்பதிலேயே கண்ணாயிருந்தன.

ஜான் யோசிக்க ஆரம்பித்தான். கொஞ்ச நாட்களாகவே அந்தப் பக்கம் துப்பாக்கி

சகிதம் வேட்டையாட வருவோரின் எண்ணிக்கை அதிகமாக இருந்து வந்தது. அவர்களில் பலர் மான்போன்ற மிருகங்களை நோக்கிச் சுட்டிருக்கலாம். குறி பிசகி அந்தத் தோட்டாக்கள் அவற்றைக் கொல்லாமல் காயப்படுத்தி மட்டும் இருக்கலாம். ஓடிவிட்ட அவற்றைப் பின்தொடராமல் வேடர்கள் திரும்பி யிருக்கக் கூடும். அத்தகைய அடிபட்ட மிருகங்களைப் பின் தூரத்திப் போய்ப் பாய்ந்து அடித்து வீழ்த்தித் தங்களுக்கு இரையாக்கிக் கொள்வது மிகவும் சுலபமாக இருப்பதைச் சிங்கங்கள் கண்டுணர்ந்திருக்கவேண்டும். மிகவும் புத்திசாதுர்ய முள்ளவை அல்லவா சிங்கங்கள்? அதனால்தான் இப்போது ராபர்ட்டின் துப்பாக்கி வெடியோசை கேட்டதுமே சிரமமில்லாமல் உண்டு களிக்கக் கூடிய விருந்து தயாராக இருக்கிறது என்று புரிந்து கொண்டு அவை வந்திருக்க வேண்டும்.



"காப்பியை ஆற்றுவதற்குள் நேரமாகிவிட்ட தென்று விளம்பிவிட்டீர்களே! இப்போ ஆற்றி ஆற்றிக் குடிக்கவேண்டாம். ஒரே தடவையில் திட்டமாக இருக்கும். சாப்பிடுங்கள்!"

எந்த இடத்தில் முடிகிறது. அசட்டுத்தனமான துணிவு எங்கே ஆரம்பமாகிறது என்று அவன் புரிந்து கொள்ள வேண்டாமா? இம்மாதிரி அவன் தன்னை அபாயத்துக்கு உட்படுத்திக் கொள்வதா?

இப்படியாக இந்தப் பிரயாணத்தில் ராபர்ட்டும் ஜூனும் பார்க்காத மிருகங்கள் இல்லை. விஷப் பாம்புகள், ஒட்டைச் சிவிங்கிகள், வரிக்குதிரைகள் போன்ற பலப் பல மிருகங்களைக் கண்டார்கள். இவையெல்லாமே மறக்க முடியாத காட்சிகள்தான், கானகத்தைக் கடந்த அந்தக் காதலர்களுக்கு. மெய் சிலிர்க்க வைக்கும் அந்தப் 'பயங்கர இனிமை'களை அவர்கள் மட்டுமா அனுபவித்தார்கள்? அவர்களுடன் சேர்ந்து அந்த 'வாத்து வாகனமும்' அல்லவா அனுபவித் திருக்கிறது? அதுமட்டுமா? அவர்கள் வாழ்க்கையோடு ஒன்றி, அவர்களது சுகதுக்கத்தில் பங்கு பற்றி, அவர்களிட மிருந்து பிரிக்க முடியாததாகிவிட்ட அந்த வாத்து வாகனத்தின் வரலாறு நினைக்க நினைக்கச் சுவை தருவது. அமெரிக்காவில் உருவாகி, நார்மண்டி யுத்தத்தில் பங்கு பற்றி, இங்கிலாந்துக்குக் கொணரப்பட்டு, பிறகு கடல் மார்க்கமாகவும் நில மார்க்கமாகவும் ஆப்பிரிக்காவை அடைந்து, அவர்கள் வீடாக விளங்கி, அவர்கள் நினைத்த இடங்களுக்கெல்லாம் நீரிலும் நிலத்திலும் அவர்களை இட்டுச் சென்று விசுவாசத்துடன் உழைத்த அது அவர்களுடைய பரிபூரண அன்பைப் பெற்று உயிருக்குயிரான ஒன்றாகி விட்டதே! அன்புடன் அதனைத் தடவிக் கொடுத்து அதன் சுவரில் தன் கன்னத்தைப் பதித்துக் கொள்வாள் ஜூன். அப்போது அவள் ஆனந்த பரவச முற்றதன் காரணமாக அவள் கண்களில் நீர் ததும்பி நிற்கும்!

ராபர்ட் பொறுமை இழந்தவனாக, "நான் சுட்டு வீழ்த்திய மானை இவை எப்படி உண்ணலாம்? அதை நான் திரும்பப் பெறாமல் விட மாட்டேன்" என்றான்.

"வேண்டாம், வேண்டாம்!" என்று பீதியுடன் கூறினாள் ஜூன். "என்ன நடந்தது? விவரமாகச் சொல்லுங்கள்!"

"இருட்டில் சிங்கங்கள் வந்திருப்பது தெரியாமல் நான் மான் விழுந்திருந்த இடத்தைச் சமீபித்து விட்டேன். அங்கு எழுந்த ஓசையை மானின் வேதனைக் குரல் என்று எண்ணினேன். கிட்டத்தில் போன பிறகுதான் விஷயம் தெரிந்தது. பிறகு அவற்றுடன் சிங்க மொழியில் 'பேசி'க் கொண்டிருந்து நான் நிலைமையைச் சமாளித்தேன். அப்புறம் நீ வருகிற காலடி ஓசை எழுந்தது. மெல்ல மெல்ல அவற்றுடன் 'பேசி'க் கொண்டே பின்வாங்கினேன். உனக்குப் பயமாக இருக்கும் என்று நினைத்துத்தான் பின்வாங்கினேன். ஆட்சேபணை இல்லையென்றால் சொல்லு. இன்னும் கிட்டத்தில் போவோம்!"

ஜூனுக்கு ராபர்ட்டிடம் உள்ள காதலை வார்த்தைகளால் அளவிட்டுச் சொல்ல முடியாதுதான். என்றாலும் அவன் கழுத்தை நெரித்துக் கொன்று விடலாமா என்று அவள் எண்ணக் கூடிய அளவுக்கு அவன் சில சமயங்களில் நடந்து கொள்வான். வீரம் என்பது

[ஆப்பிரிக்கக் கானகத்தில் பிரயாணம் செய்தபோது தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் ஏற்பட்ட அனுபவங்களை June Kay, Okavango என்ற தமது நூலில் அற்புதமான முறையில் விவரித்துள்ளார். அதன் சில பகுதிகளை ஆதாரமாகக் கொண்டே இந்தக் கட்டுரை உருவாகியிருக்கிறது. புத்தகத்தை முழுமையாகப் படிக்கும் வாய்ப்பு பெற்றவர்கள் அதிர்ஷ்டசாலிகள்தான்! பிரசுரம்: Hutchinson & Co., Ltd., லண்டன்.]



மேலே: சென்னை கௌடிய மடத்தில் நடைபெற்ற அகில இந்திய வைஷ்ணவ மகாநாட்டில் கலந்துகொண்ட ராஜாஜியும் மடத்தின் தலைவர் ஸ்ரீ பக்திவிலாஸ தீர்த்தகோஸ்வாமி மஹராஜும், ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகளும்.


பகவத் பிரேமை, நட்பு, சேவை என்ற மூன்று தத்துவங்களை ஆதாரமாகக்கொண்டு ஸ்ரீமத் பாகவதம் என்ற அஸ்திவாரத்தின் மீது ஸ்ரீ கிருஷ்ணசைதன்யர் நிறுவிய பக்தி மதத்தின் பெருமையை கோஸ்வாமி விளக்கினார்.

'துவைத, விசிஷ்டாத்வைத மதங்களின் பக்தியும் அத்வைதத்தின் பிரதான சாதனமான ஞானமும் முரணானவை அல்ல. நாம் ஒருவரிடம் அன்புகொள்வது பக்தி. நம் அன்புக்குகந்த அவரைப்பற்றி விசாரிப்பதும், அவருக்கும் நமக்குமுள்ள தொடர்பை ஆராய்வதும் ஞானமார்க்கம். இவை முரண்பட்டவையல்ல' என ராஜாஜி அழகாக எடுத்துக் கூறினார்.

கீழே: (இடது) இரண்டாண்டுகளுக்கு முன் இளையாற்றங்குடியில் ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசாரிய ஸ்வாமிகளின் ஆணையில் நடைபெற்ற சதஸ் நிகழ்ச்சிகளை ஜே. எஸ். ரேடியோவினர் ஆங்கில விளக்கவுரையுடன் திரைப் படமாக எடுத்துள்ளனர். இப் படத்தை ஆகஸ்ட் 30-ந் தேதியன்று மத்திய துணை மந்திரி ஸ்ரீ வி. ஆர். பட்டாபிராமன் அவர்கள் மயிலையில் வெளியிட்டார்.

(வலது) மேல மாம்பலம் சங்கரமடத்தில் நடைபெற்ற வேதபாராயண சபை ஆண்டு விழாவின் நிறைவு நாளன்று செங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீட்சிதர் அவர்களின் உபந்நியாசம் நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்டு பேசிய ராஜாஜி, ''ஹிந்து சமயத்தில் சடங்கு நிறைந்த வேதம், தத்துவம் நிறைந்த உபநிஷதம், கதைகள் நிறைந்த புராண இதிகாஸங்கள், நீதிநெறிகள் அடங்கிய தர்ம சாஸ்திரங்கள் எல்லாம் இணைந்திருப்பதைப் பார்த்து 'இதென்ன குழப்பமான மதம்?' என வெளிநாட்டார் திகைக்கிறார்கள். ஆனால் நாம் அப்படிக் குழம்ப வேண்டாம். பரமேசுவரனின் ஜடா மகுடம்போல் பற்பல அம்சங்கள் பின்னிப் பிணைந்ததே நம் மதம். வெளியிலிருந்து நோக்கிய கங்காதேவிக்குத்தான் இது சிக்கலாகத் தோன்றியது. ஜடையிலேயே அங்கமான கேசச் சுருள்களுக்குக் குழப்பமில்லை; அவை இயல்பாகவே முடியில் ஒன்றி உள்ளன. ஹிந்து மதம் என்ற ஜடையைச் சேர்ந்த சுருள்கள் நாம். எனவே நாம் மேல்நாட்டார்போல் நமது சமயத்தைக் கண்டு குழம்ப வேண்டாம்'' எனப் பாங்குறக் கூறி வேத தர்மம் தழைக்க வேண்டிய அவசியத்தை விளக்கினார்.







களிப்பில் மலரும் புன்னகை...அது கோலினுஸ் தரும் புன்னகை



காலஞ்சென்ற புகழ்பெற்ற பாரிஸ்டர் எதிராஜ் அவர்கள் தமது பெயரால் ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பித்து வைத்தார். இப்போது கல்லூரிக்குப் பக்கத்திலுள்ள அவரதுபெரிய மாளிகை 'கல்யாணங்களுக்காக நியாயமான வாடகைக்கு விடப்படும்' என்று ஒரு விளம்பரம் வெளியாகியிருக்கிறது.

ஜனன விகிதம் ஏறிக் கொண்டு போவதைப் பார்த்தால் இன்னும் இருபது வருஷங்களில் ஒவ்வொரு பெட்ரோல் பங்கின் பக்கத்திலும் ஒரு கல்யாண மண்டபம் ஏற்பட்டாலும் போதுமானதாயிராதென்று சொல்லலாம்.



ஒரு பெண்கள் கல்லூரிக்குப் பக்கத்தில் முதன் முதல் ஏற்பட்டிருக்கும் கல்யாண மண்டபம் இதுதான். பெண்கள் மும்முரமாகப் படித்துக் கொண்டிருக்கும்போது மாங்கல்யதாரண சமயத்தில் வாசிக்கப்படும் இன்னிசை காதில் விழுந்து கொண்டே இருக்கும்.

கல்யாணத்துக்கு இடம் கொடுக்கும் விஷயத்தில் இந்தப் புதிய கல்யாண மண்டப நிர்வாகிகள் எதிராஜ் கல்லூரி மாணவிகளுக்கு முதல் சலுகை காட்ட வேண்டுமென்று அவர்கள் சார்பில் வக்காலத்து இல்லாமலே கேட்டுக் கொள்கிறேன்.

ஃ ஃ ஃ

பெர்னார்ட்ஷாவின் 'டாக்டர்ஸ் டைலம்மா' என்ற நாடகத்தில் வரும் ரிட்ஜியான் என்ற ஒரு பெரிய வைத்திய நிபுணருக்கு ஒரு தர்மசங்கடமான பிரச்னை எழுகிறது. அவர் காச நோயைக் குணப்படுத்தும் நல்ல மருந்து ஒன்று கண்டுபிடித்திருக்கிறார். ஒரு சாதாரண வைத்தியர், ஓர் ஓவியர் இருவருக்கும் காச நோய் முற்றிப் போயிருக்கிறது. அவர்கள் உயிர் பிழைக்க வேண்டுமானால் உடனே சிகிச்சை செய்தாக வேண்டும். ரிட்ஜியானின் மருத்துவ விடுதியில் ஒரே ஒரு நோயாளிக்குத்தான் இடமிருக்கிறது. புதிய மருந்தை ரிட்ஜியான்தான் பிரயோகப்படுத்தியாக வேண்டும். ஆகவே, நோயாளிகளுள் ஒருவருக்குத்தான் அவர் சிகிச்சை செய்ய முடியும். மற்றவர் மரணமடையத்தான் வேண்டும்.

அவர் யாரைக் காப்பாற்றுவது? இதுதான் பெரிய பிரச்னை. கடைசியில் ஓவியன் உயிர் வாழ்ந்திருக்க அருகதையற்றவன் என்று தீர்மானித்து அவனை மரணமடைய விட்டு விடுகிறார்.

தினசரிப் பத்திரிகையில் வெளிவந்த ஒரு மோட்டார் விபத்துச் செய்தியைப் படித்தபோது இந்தத் தர்மசங்கடப் பிரச்னை விஷய நாடக சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. அந்தச் செய்தியாவது: ''அம்மாபேட்டையிலிருந்து தஞ்சைக்கு வந்துகொண்டிருந்த ஒரு பஸ் ஒரு புளியமரத்தின் மீது மோதியதில் டிரைவர் உட்பட ஐந்து பேர்கள் இறந்தனர். ஒன்பது பேருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது.

''குறுக்கே சென்ற ஒரு பாதசாரியின் மீது வண்டி ஏறி விடாதிருப்பதற்காகவே வண்டி ஓட்டுபவர் வண்டியை ஒரு பக்கமாகத் திருப்பியதில் இந்த விபத்து ஏற்பட்டது.''

அனேகமாகப் பல பஸ், மோட்டார் வண்டி விபத்துக்கள் பாதசாரியின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதைத் தவிர்க்க முயலும்போதுதான் ஏற்படுகின்றன. 'பாதசாரி ஒரு கழுதை. எந்தச் சமயத்திலும் குறுக்கே வந்து விழுவான்' என்ற மோட்டார் வண்டி சாரத்திய சாஸ்திர சித்தாந்தத்தை மறக்காமல், மிக மிக ஜாக்கிரதையாக ஓட்டுபவர்கள் கூட விபத்துக்குள்ளாகிறார்கள்.

ஒரு பஸ் எழுபது பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருக்கிறது. திடீரென்று ஒரு பாதசாரி குறுக்கே ஓடி வருகிறான். வண்டியைச் சாலையின் எந்தப் பக்கம் திருப்பினாலும் அது அங்குள்ள நடைபாதையின் மீதேறி வீடுகளைத் தாக்கும்; அல்லது மரங்களிருந்தால் அவற்றின் மீது மோதிக்கொள்ளும்; அல்லது பள்ளங்கள் இருந்தால் அவற்றில் விழும்.

ஒரு பாதசாரிமீது ஏற்றி அவன் உயிரை இழக்கச் செய்வதா? ஒரே ஒரு உயிரை?

அல்லது,

அவனைத் தவிர்க்க முயன்று வண்டியை எதன்மீதாவது மோதிக்கொள்ளச் செய்து எழுபது பிரயாணிகளின் உயிரை இழக்கச் செய்வதா? எழுபது உயிர்கள்!

வண்டி ஓட்டுபவர் இதைப் பற்றி யோசனை செய்து பார்க்கிறாரா? அவர் மனத்தில் இந்தப் பிரச்னை எழுமா? இரண்டும் நடைபெறாது என்று நினைக்கிறேன். குறுக்கே வருவது மனிதனாக இருந்தாலும் சரி மிருகமாயிருந்தாலும் சரி, அதைக் காப்பாற்றிவிடவேண்டுமென்ற எண்ணம்தான் தன்னையறியாமல் தலைதூக்கி நிற்கும். பாதசாரி மீது ஏற்றினால் பாதகமில்லை, எழுபது பிரயாணிகள் காப்பாற்றப்படுவார்கள் என்று எண்ணவே தோன்றாதென்று நினைக்கிறேன்.

ஆனால், வண்டி ஓட்டுபவர் அப்படி நினைத்துப் பாதசாரியைச் சாக அடித்தால் அவர் மீது போலீஸ்காரர்கள் வழக்குத் தொடுப்பார்கள்! அவர் அவனைக் காப்பாற்றுவதற்குப் பிரயாணிகளைப் பலி கொடுத்தாலோ அவரை ஒன்றும் செய்வதற்கில்லை.

ஃ ஃ ஃ

''நாம் நம்முடைய கண்களை மூடித்திறப்பதுபோல், காதுகளையும் மூடித் திறந்து கொள்ள முடியுமானால் எத்தகைய நன்மை ஏற்படும்?''

— விச்டென் பர்க்

ஒரொரு சமயம் புத்தகங்களைப் படிப்பதில் நான் அதி தீவிர மாறுதலை விரும்பும் போது தமிழாக்கப்பட்ட விஞ்ஞானப் புத்தகம் எதையாவது எடுத்து வைத்துக் கொண்டு புரட்டுவது வழக்கம். ஏனென்றால், அதை எழுதிய ஆசிரியர், அதைப் படிக்கும் மாணவன், நான், எங்கள் மூவரையும் படைத்த ஆண்டவன் யாருக்குமே ஒன்றும் எளிதில் விளங்காதல்லவா? இப்படி விளங்காதிருப்பது படிப்பு வெறியைத் தணித்து, மறைமுகமாக மனத்துக்கு ஓய்வையும் அளிக்கும். இந்த உக்தியைப் பின்பற்றி 'அக்கு பங்க்சர்' **(Acu puncture)** என்ற ஓர் ஆங்கிலப் புத்தகத்தை எடுத்துப் படித்தேன். அது ஒரு வைத்தியப் புத்தகம். அதிலும் சீன தேச வைத்தியத்தைப் பற்றியது; அதிலும் புராதன கால சிகிச்சை முறை ஒன்றைப் பற்றியது.



சில வைத்திய நிபுணர்கள், தலைமயிர் வளராதிருந்தால் கால் நகங்களைச் சோதனை செய்து பார்ப்பார்களென்றும், இடது கால் கட்டை விரல் வலித்தால் வலது பக்க மூக்கைப் பரீட்சை பார்ப்பார்கள் என்றும் வேடிக்கையாகச் சொல்வதுண்டு. ஆனால் 'அக்கு பங்க்சர்' முறையில் இத்தகைய வைத்திய சோதனைகள் சர்வ சாதாரணம்.

வைத்தியத்துக்குத் தேவையானதெல்லாம் ஊசிதான். இஞ்செக்ஷன் செய்யும் ஊசியல்ல. சாதாரணத் துணி தைக்கும் ஊசி போன்றதுதான். இதில் மருந்து எதுவும் நிரப்புவதில்லை; இதை மருந்து எதிலும் தோய்ப்பதுமில்லை. ஊசியைத் தோலின் மத்திய பாகம் வரையில் செல்லும்படி வலி படாமலேயே குத்திவிடுவதுதான் சிகிச்சை முறை.

முழங்கால் பூட்டுக்குக் கீழே ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஊசியைக் குத்தினால் ஈரல் வியாதி தீரும். அதுமட்டுமல்ல, காதுக்குள் இரைச்சலாயிருப்பது நின்று விடும்.

சுண்டுவிரலின் அடிப் பாகத்துக்குச் சற்று மேலே குத்தினால் நீண்ட நாளைய தோள் பட்டை வலி நீங்கும்; தலைவலியும் பறந்து போகும்.

குதிகாலில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குத்தினால் முடக்கு வாதம் மாயமாய் மறைந்து விடும்.

இதேபோன்று ஊசியை ஒரு குறிப்பிட்ட இடத்தில் குத்தி எந்த வியாதியையும் போகச் செய்துவிடலாம். இந்தப் பழமையான, ஆனால் நவீனமாகவும் வேடிக்கையாகவும் தோன்றும் சீன வைத்தியத்தின் அடிப்படை இதுதான்.

பழைய சீன வைத்திய சாஸ்திரப்படியும் உடற்கூற்று சாஸ்திரப்படியும் உடலில் ஒரு ஜீவ சக்தி சுவாசப் பையிலிருந்து ஆரம்பித்து, பல அவயவங்களுக்கும் சென்றுவிட்டு, சுவாசப் பைக்குத் திரும்பி விடுகிறது. இரத்த ஓட்டம் இந்தச் சக்தியின் ஓட்டத்தைப் பின் பற்றிச் செல்கிறது. சக்தி ஓட்டம் ஏதாவது ஓரிடத்தில் தடைப்படும்போது, அங்கு இரத்த ஓட்டமும் தடைப்படுகிறது. அதன் பயனாய் அந்த இடத்தைச் சுற்றிப் பிராண வாயு பரவுதல் குறைந்து போகவே, வியாதி ஏற்படுகிறதாம். ஆகவே சக்தி ஓட்டம் தடைப்பட்டிருப்பதை அகற்ற ஊசியைக் குத்துகிறார்கள்.

இதற்காக உடலைப் பல பாகங்களாகக் கணக்கிட்டு, இன்னின்ன இடத்தில் ஊசியைக் குத்தினால் இன்னின்ன வியாதி நிவாரணமாகுமென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். சரியான இடத்தில் ஊசியைக் குத்தத் தெரிந்து கொள்வதுதான் முக்கியம்.

இந்த முறையைச் சீனர்கள் கண்டுபிடிப்பதற்குப் பழைய காலத்திய யுத்தங்கள் உதவி புரிந்தன. ஒரு குறிப்பிட்ட போர்வீரன் யுத்தத்தில் காயமுற்றான். அவன் குணமடைந்தபோது அவனுக்கு இருந்த இரத்த அழுத்தத் தொந்தரவும் நீங்கிவிட்டது. காயமுற்ற இன்னொரு போர்வீரனுக்கு அவனுக்கிருந்த தீராத வயிற்றுவலி நீங்கிவிட்டது. இதைக் கவனித்த வைத்தியர்கள் காயங்களுக்கும் வியாதிகளுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறதென்று நினைத்தனர். இன்ன இடத்தில் காயம் பட்டால் இன்ன வியாதி நிவாரணமாகிறதென்று ஒரு ஜாபிதா தயாரிக்கத் தொடங்கினர். நாளடைவில் ஆயிரக் கணக்கான வருஷங்கள் அனுபவத்தின் பயனாய் ஊசி குத்துவது ஒரு வைத்திய சாஸ்திர சிகிச்சையின் அந்தஸ்தை அடைந்து விட்டது.

மேல்நாடுகளில் வைத்தியர்கள் இந்த முறையைப் பின்பற்றத் தொடங்கியிருக்கிறார்கள். பிரான்ஸில் ஐந்நூறு வைத்தியர்கள் இந்த முறைப்படி சிகிச்சை செய்து வருகிறார்கள். பத்து பெரிய வைத்தியசாலைகளில் ஊசி குத்தித்தான் சிகிச்சை செய்கிறார்களாம்.

இந்தப் புத்தகம் படித்ததில் ஏமாற்றம் தான். விஷயம் ஓரளவு புரிந்துபோய், நான் கூட 'இந்தப் பாமான' எழுத்துத் தொழிலை விட்டு ஊசி வைத்தியத் தொழிலில் இறங்கலாமென்று பார்க்கிறேன்! எனக்கு இதில் பால்யத்தில் அனுபவமுண்டு. பொல்லாத உபாத்தியாயர் ஒருவர் உட்காரும் நாற்காலியில் குண்டூசி வைத்திருக்கிறேன்! — **என். ஆர்.**

இந்தியக் கதாசிரியர்: நான் முதன் முதலாக அனுப்பி வைத்தகதை அந்த அமெரிக்கப் பத்திரிகை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு விட்டது!

ஒருவர்: அப்படியா? அப்போ நீங்கள் பெரிய கதாசிரியர்தாம்!

ஆசிரியரின் நண்பர்: அவர் அனுப்பியது என்ன தெரியுமா? சந்தாத் தொகை. மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள எந்தப் பத்திரிகைக்குத்தான் கசக்கும், சொல்லேன்!

வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.


உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஸெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான ஸெண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்... இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக் கொண்டு, சூழ்ந்துவிடும் அதன் இனிய வசீகர நறுமணத்தினால் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.




புதிய, நவீன காஸ்மெடிக் டின்!





மற்றும் கிடைக்கும் பாமாலிவ் டால்க் டின்கள்—
மயக்கும் 17 ஸெண்டுகளின் அற்புதமான கலவை

PT.G.7 TAM.


சாமா
எத்தனை தடவை வருவது! எங்கே அந்த 'லாக்கர்'? லாக்கரைப் பரிசோதிக்கணும்! 'லாக்கர்' சாவி எங்கே?
அவங்க கிட்ட தானே இருக்கு!
அவங்க எங்கே ஒளிஞ்சு இருக்காங்க? சொல்லு
லாக்கருக்குள்ளே!
நட்சத்திரம்:- என் வீட்டில் கருப்புப் பணம் இரண்டு லட்சம் தான் இருந்ததுன்னு பேப்பரில போடாதீங்க மானம் போயிடும்! இருபது லட்சம்னு கௌரவமாப் போடுங்க!
ஆ! அகப்பட்டீர்களா! கருப்புப் பணம் எங்கே? உங்கள் வீட்டைப் பரிசோதிக்கணும்!
நம்புங்க! நான் பரம ஆண்டி.. தாராளமா வீட்டைப் பரிசோதிங்க!
அடடா! இன்னுமே இல்லையே! வேஷமா போடுகிறீர்?
ஆமாங்க! பின்னே சினிமா ஷூட்டிங் போது என்ன போடுவாங்க?
நட்சத்திரம்:- அட அசடுகளா! நேற்றே வந்திருக்கக் கூடாதா? உங்களுக்கு முந்தியே அதிகாரிங்க வந்து விட்டுப் போயிட்டாங்க!
கருப்புப் பணத்தை ஒரு நொடியில் வெள்ளைப் பணமாக்க என்னால் முடியும்!
வருமானவரி
இலாக்கா
சாமியார்

குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

மாயவனை திருமாலையே ஆண்டாள் தனக்குகந்த மணமகனாக வரித்துக் கொண்டு திருமணம் செய்துகொள்ளும் கனவுகளை அப்பாடல்கள் அழகுற விவரிப்பவை! அவற்றை உமாவின் வாய் இதழ்களும் கைவிரல்களும் இருதயத்தைப் பிழிந்து இசைத்தன.

வாரணம் ஆயிரம் சூழ
வலம் செய்து,
நாரணன்நம்பி நடக்கின்றான்
என்றெதிர்,
பூரண பொற்குடம் வைத்துப்
புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன்
தோழி நான்.
நாளை வதுவை மணமென்று
நாளிட்டுப்
பாளைகமுகு பரிசுடைப்
பந்தற் கீழ்,
கோளரி மாதவன் கோவிந்தன்
என்பான், ஓர்
காளைபுகுதக் கனாக்கண்டேன்
தோழி நான்.

திருமணத்துக்காகக் கோடியுடுத்தல், மணமாலை சூட்டல், காப்பு நாண் கட்டல், கதிரொளி தீபக் கலசங்களுடன் சதிரிள மங்கையர் வந்து எதிர்கொள்ளுதல், மத்தளம் கொட்ட வரி சங்கம் நின்று ஊத முத்துப் பந்தலின் கீழ் மைத்துனன் நம்பி மதுசூதனன் கைத்தலம் பற்றுதல், களிறன்னன் தன் கைப்பற்றித் தீ வலம் செய்தல், திருக் கையால் தாள் பற்றி அம்மி மிதித்தல், கைமேல் கை வைத்துப் பொரிமுகந் தட்டல், குங்குமம் அப்பிக் குளிர் சாந்து மட்டித்து மங்கல வீதி வலம் வருதல், மஞ்சன மாட்டல் முதலான திருமணச் சடங்குகளின் காட்சிகளெல்லாம் பாடல்களினூடே உமாவின் மனக்கண் முன் விரிந்து விரிந்து நின்று அதிசயமான ஓர் ஆத்ம மலர்ச்சியை உண்டாக்கின. அதன் ஆனந்த லயிப்பிலே ஆழ்ந்ததோர் அமைதியும் உமாவுக்கு உருவாயிற்று. சூடிக் கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாள் எவ்வளவு பாக்கியவதி? அலைப்புறும் உலக பந்தங்களில் இச்சை வைக்காமலே இறைவன் மீதே ஆழ்ந்த காதலை வளர்த்துத் தனக்குள்ளேயே இறைவனைப் பந்தப்படுத்திக் கொண்டு அதில் ஐக்கியமாகி விட்டாள்! அது போல் மற்றப் பெண்களாலும் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டு தனித்து வாழ முடியாதா என்ன?

உமாவைப் பொறுத்தவரையில் அவளுக்கு ஏற்கனவே ஒரு கல்யாணம் நிச்சயமாகி அது நடைபெறாமல் நின்று போய் விட்டது. இனி அவளுடைய வாழ்க்கையில் மானுஷ்யக் காதலுக்கே இடமில்லை! ஆண்டாள் பாடியது போலவே 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே!' என்று தன் மனத்தை உமா திடப்படுத்திக் கொண்டாள்.

பிறகு உமா ஒரு புது சக்தி பெற்றவளாய்ச் சிரித்தாள்.

வாரணமாயிரம் பாடல் முடிந்ததும் ஆண்டாளின் அடுத்த பாடலை உமா பாடத் தொடங்கினாள். மாலவன் தன் வாய் இதழ்களில் வெண்சங்கை வைத்து ஊதும் போது, அந்தச் சங்கு அநுபவித்த வாய் அமுதத்தின் 'சுவை எத்தகையது என்று ஆண்டாள் எழுப்பும் கேள்விதான் அந்தப் பாடல்.

கருப்பூரம் நாறுமோ ?
கமலப் பூ நாறுமோ ?
திருப்பவளச் செவ்வாய் தான்
தித்தித்திருக்குமோ ?
மருப்பொசித்த மாதவன் தன்
வாய்ச் சுவையும் வாசமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்,
சொல், ஆழிவெண் சங்கே

இதைப் பாடும்போது உமாவின் இளம் உதடுகளும் அதன் தித்திப்பு ரசத்திலே இழைந்து நாணம் அவளை ஆட்கொண்டது.

அதற்குமேலும் அவள் பாடுவதைப் பொறுக்க முடியாததுபோல் தெருக் கதவு மெல்லத் தட்டப்படும் ஓசை கேட்டது!



அத்தியாயம் 57

ஜுரவேகம்

உமா வீணை வாசிப்பதை நிறுத்தி விட்டு மெல்ல எழுந்தாள்.

பொழுது அப்போதுதான் இலேசாக விடியத் தொடங்கி யிருந்தது. அயர்ந்து உறங்கும் பூமி தேவியின் இரவு ஆடை மெல்ல மெல்ல நழுவி, அவளைப் பொற் கைகளால் அள்ளித் தழுவிக் கொண்டு அவளுடைய நிலா முகத்தை யெல்லாம் குங்குமமாகச் சிவக்க வைக்க ஆதவன் அதிசீக்கிரம் கிளம்பி வரப் போகிறான் என்பதற்கு அறிகுறியாக

அவனுடைய முதற் புன்னகை போல் மெல்லிய ஒளி முற்றத்தில் படர முயன்று கொண்டிருந்தது. முன்னிரவில் மழை நன்ருகப் பெய்து இயற்கை அன்னை மிகவும் குளிர்ந்து போயிருந்ததால் பச்சைக் குழந்தையின் பொக்கை வாய்ச் சிரிப்புப் போன்ற மெல்லிய வெப்பம் கூட இதமளித்தது.

வீட்டின் தெருக் கதவு மீண்டும் தட்டப்படும் ஓசை கேட்டது.

உமா யோசித்தாள். இந்த நேரத்தில் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டுவது யாராக இருக்கக் கூடும்? பால்காரனு? பால்காரனுக இருந்தால் மாடு கன்றுகளின் மங்களமான ஒலிகள் கேட்டிருக்கும். பத்திரிகை போடும் பையனுக இருந்தால் சைக்கிளின் மணி முன்னதாக அலறியிருக்கும்! ஒருவேளை பாட்டி தான் யாத்திரையிலிருந்து திடீரெனத் திரும்பி வந்து விட்டாளோ? பாட்டியாயிருந்தால் தெரு வாசற்படியில் ஏறும் போதே ''உமா, அடீ உமா!'' என்று ராகம் இழுத்திருப்பாளே?

உமா அமைதியாகவே சென்று வாசற் கதவின் தாளை அகற்றி அதைத் திறந்து வெளியே பார்த்தாள்.

வெளியே பிச்சமணிதான் தெருக் கதவைத் தட்டிவிட்டுத் தலைவிரி கோலமாய் நின்று கொண்டிருந்தான். மழையில் நன்ருக அடிபட்டு நனைந்து தண்ணீரிலேயே ஊறிக் கிடந்திருக்கிருன் என்பதற்கு அடையாளமாக அவனுடைய உடுப்பெல்லாம் ஈரம் கவர்ந்து அதன் கறைகளோடு உலர்ந்திருந்தன. அவனுடைய முகமும் இருளடைந்திருந்தது. விலையுயர்ந்த சலவை உடுப்புக்களுடன் அழகாகத் தலை வாரிக் கொண்டு முகத்துக்குப் பவுடர் பூசிக் கொண்டு ஜீவ களையோடும், ஒருவிதப் பெண்மையின் சாயலோடும் எப்போதும் மினுமினுக்கும் பிச்சமணியா இப்போது இந்தக் கோலத்துடன் தள்ளாடியபடி நிற்கிருன் என்பதை நம்பவே முடியவில்லை. தெருவில் விட்டெறியப்பட்ட அநாதை போலவும் உலகத்தையே கடந்து நிற்கும் பைத்தியக்காரனைப் போலவுமே அவன் காட்சியளித்தான். அவனுடைய கண்ணிமைகள் சோர்ந்து இறங்கிப்போய்க் கண்கள் இரண்டும் இரத்த நிற மீன்கள் போல் சிவந்திருந்தன. ஆனுல் உமாவின் முகத்தைக் கண்டதும் அவனுடைய உள்ளமெல்லாம், உணர்வெல்லாம் புத்துணர்ச்சியால் மலர்ந்தது போல் அந்தக் கண்களில் அலாதியான ஓர் ஒளி மட்டும் வீசியது.

அதைக் கண்டதும் உமாவுக்குச் சட்டென்று பழைய பயம் நெஞ்சை ஊடுருவித் தைத்தது. அவள் அப்படியே சுழன்று பின்வாங்கி ஓரடி தள்ளி அசைவற்று நின்ருள்.

பிச்சமணி மெல்லச் சிரித்தான். அந்தச் சிரிப்பும் ஊசி முனை போல் உமாவின் நெஞ்சில் உறுத்தியது.

உமா தன் நெஞ்சை அமுக்கி அடக்கித் தன்னையே சமாளித்துக் கொள்ள முயல்வது போல், தன் கைவிரல்களை மடக்கித் தன் பயம் அனைத்தையும் ஒன்று குவித்து அதனடியில் தன் உள்ளுணர்வுகளை யெல்லாம் அமுக்கிப் புதைத்துக் கொண்டாள். பிறகு தனக்கே இயல்பான அமைதியையும் மனேதிடத்தையும் வரவழைத்துக்கொண்டு சட்டென்று ஒரு தீர்மானத்துடன் பிச்சமணியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

பிறகு அவள், ''பிச்சமணி! நீயா?'' என்றுமட்டும் கேட்டாள்.

உமாவின் அந்தக் குரலில் வியப்பும், கண்டிப்பும், கடுமையும், அதே சமயம் ஒருவித ஆவலும் விசித்திரமாகக் கலந்தொலித்தன.

ஆனுல் பிச்சமணி அதைப் பொருட்படுத்தும் நிலையில் இல்லை. அவனது சிவந்த கண்களில் கண்ணீர் துளித்தது. உமாவைக் கண்டதும் ஏற்பட்ட ஆனந்த பரவசத்தின் கொதிப்புத்தான் அந்தக் கண்ணீரில் அதிகமாக மின்னியது. வெள்ளத்தில் மூழ்கிப் பிராணுவஸ்தையுடன் தத்தளிப்பவன் தன் கையருகேயுள்ள பூமரக் கொம்பைப் பிடித்துக் கொள்ளத் தவிப்பது போல் உமாவின் கையைப் பிடித்துக் கொள்ளவும் அவளுடைய மென்மையான தோளில் தன் முகத்தைச் சாய்த்துக் கொள்ளவும் அவளுடைய அன்புக் கரங்களுக்குள் விம்மி விம்மி அழவும் உள்ளூறத் தவித்தவனுய்த் தெருக் கதவை மட்டும் பிடித்துக் கொண்டு நின்ருன். அவனுடைய விழிகளோ கருவண்டுகள் போல் தாவித் தாவி உமாவின் மலர் முகத்திலே வட்டமிட்டு அமரவும், அம்முகத்தின் அழகோடு அன்பின் தேனையெல்லாம் அள்ளி அள்ளிப் பருகவும் துடித்தன.

''உமா! உமா!.. கடைசியில்...உங்களைப் பார்த்துவிட்டேன்!'' என்று பிச்சமணி ஒரு பெருமூச்சை இறக்கினுன். அப்போதும் அவனுடைய உணர்ச்சிப் பெருக்கின் பளு இறங்கவில்லை. தத்தளித்தான்!

"பிச்சுமணி! இந்த நேரத்தில் நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று உமா மெல்லக் கேட்டாள்.

கண்ணீருக்கிடையிலும் பிச்சுமணியின் கண்கள் சிரித்தன. அவன் தழுதழுக்கும் குரலில், "நான் இப்போது வரவில்லை! நேற்றே வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டேன். மேலும் என் காரில் வரவில்லை, சாந்தோமிலிருந்து நடந்தே வந்தேன்!" என்றான்.

"மழையில் நனைந்தாயா?"

"ஆமாம். இரவெல்லாம் மழையில் தான் நனைந்தேன்!"

"இடியும் மின்னலும் கூட அதிகமாக இருந்தனவே."

"அதையெல்லாம் நான் கவனிக்கவில்லை."

"உன் தாத்தாவோடு ஏதாவது சண்டையா?" என்று உமா சாதாரணமாகக் கேட்டாள்.

"ஆமாம்" என்று ஒரு விம்மலுடன் தலையாட்டிய பிச்சுமணி வறட்சியாகச் சிரித்தான். உமாவுக்காகவே தன் தாத்தாவோடு சண்டை பிடித்துச் சகலத்தையும் துறந்து விட்டு அனாதையாக வந்திருக்கும் நிலையும், ஏதோ கண்ணுக்குப் புலப்படாத தெய்வீக முக்திக்காக உலகத்தையே கடந்து நிற்கும் தத்துவ ஞானியின் சூன்ய உணர்ச்சியுமே அந்த வறட்சியான சிரிப்பில் காந்தின. இனி தனக்கு உமாவே எல்லாம் என்று நம்பி வந்திருக்கும் இந்த நிலையில் தன்னை அவள் புறக்கணித்துவிடுவாளோ என்ற ஒரு பயமும் அந்தச் சிரிப்பில் ஊடாடியது.

உமாவோ தன் போக்கிலே, "நீ நேற்று ராத்திரி எதுவும் சாப்பிடவில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லை!" என்று பிச்சுமணி விம்மினான். தன் வாழ்க்கையையே சூறையாடவோ, அல்லது சொர்க்கமாக்கவோ காத்திருக்கும் அந்த நேரத்திலே தன் உணர்ச்சிகளுக்குக் கிடைக்கும் சாதாரண எதிரொலிகளை அவனால் தாங்க முடியவில்லை. அவன் தள்ளாடியவாறு கீழே விழுந்து விடாதபடி தெருக் கதவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சரிந்து நின்றான்.

உமா யோசித்தாள். பிச்சுமணிக்குப் பசி மயக்கத்தோடு இரவெல்லாம் மழையில் நனைந்ததால் கடுமையான ஜுரம் பிடித்திருக்குமோ என்று நினைத்தாள்.

"உனக்கு ஜுரம் ஏதாவது...?"

பிச்சுமணி மெல்லச் சிரித்தான். அந்தச் சிரிப்பு அவனுடைய இதயத்தைக் கீறிவிடும் ஒரு முனகல்தான்! ஆனால் உமாவுக்கோ கடுமையான ஜுரத்தைச் சமாளிக்க முயலும் இளம் முறுவலாகவே தோன்றியது. அதன் பிறகு அவளுடைய கோபம், கண்டிப்பு, சிந்தனை யாவும் எங்கோ மறைந்து போய் அவளது அன்புள்ளம் ஒன்று மட்டுமே தலைதூக்கிப் பிச்சுமணிக்காக இரங்கியது.

ஜுரம் இருக்கிறதா என்று தொட்டுப் பார்ப்பதற்காக உமா பரிவுடன் தன் கையைத் தூக்கிப் பிச்சுமணியின் நெற்றியில் வைத்துப் பார்த்தாள். அந்த மிருதுவான கையைப் பிச்சுமணி அப்படியே தன் நெற்றியோடு தன் இரு கைகளாலும் அழுத்திச் சேர்த்துப் பிடித்துக் கொண்டான். அது அவனுக்கு இதமாக இருந்தது. உமாவுக்கோ பிச்சுமணியின் ஜுர வேகமெல்லாம் கைகளின் வழியாகவே தன் உள்ளத்தில் தகிப்பது போல் இருந்தது.

"மருந்து மாத்திரை சாப்பிடுகிறாயா? என்னிடம் ஒன்று இருக்கிறது. அது கசக்காது!" என்றாள் உமா கனிவான ஒரு புன்முறுவலுடன்.

பிச்சுமணி மறுபடியும் வேதனையோடு சிரித்தான். உமா தன் கையால் விஷத்தைக் கொடுத்தாலும் அதையும் அமிர்தமாகச் சாப்பிடக் கூடிய நிலையில்தான் அப்போது அவன் இருந்தான்!



மனைவி: என்ன இது! ஆபீசுக்குக் கடிகாரத்தைத் தூக்கிக்கொண்டு போகிறீர்கள்?

கணவன்: லஞ்ச டயத்திலும் சாயங்காலம் ஐந்து மணிக்கும் கூட எழுந்திருக்க முடிவதில்லை. அந்த இரு நேரத்தில் மட்டும் எழுப்பத்தான் இதைக் கொண்டுபோகிறேன்!

''ஒரு மாத்திரை சாப்பிட்டால் போதும். அப்புறம் பால்காரன் வந்ததும் காப்பி போட்டுத் தருகிறேன். அதையும் நீ சாப்பிட்டுவிட்டுப் போகலாம்!'' என்று உமா சொல்லிவிட்டுத் தன் கையைப் பிச்சுமணியின் நெற்றியிலிருந்து, அதாவது அவனுடைய இறுகிய கைப்பிடிக்குள்ளிருந்து பிருதுவாக விடுவித்துக் கொண்டு அமைதியாகவே தன் வீட்டினுள் சென்றாள்.

அவளைப் பிச்சுமணி பின்தொடர்ந்து முன் கூடத்தை அடைந்தான். அவன் கண்களில் துள்ளிய கண்ணீரும், முகத்தில் மின்னிய வேதனைச் சிரிப்பும் மறைந்து போய்விட்டன. இப்போது அவன் முகம் வெளுத்துக் கடுமையாக மாறியிருந்தது. உமாவைப் போலவே தானும் மனோ திடத்துடன் கடுமையைக் கையாள வேண்டும் என்று ஒரு தீர்மானமும் அவன் பண்ணிக் கொண்டான்.

ஜுர மாத்திரையை உமா ஒரு டப்பியிலிருந்து தேடி யெடுத்து வந்து பிச்சுமணியிடம் கொடுத்தாள். அதை ஒரு விம்மலுடன் வாங்கிய பிச்சுமணி ஒரு கணம் அதையே வெறித்து நோக்கிவிட்டு மெல்லநிமிர்ந்து உமாவைப் பார்த்தான்.

அவன் எதிரில் இளமையின் பூரணப் பொலிவோடும், பூரிப்போடும் உமா ஒரு ஜவான் போலவே நின்று கொண்டிருந்தாள்.

பிச்சுமணி அவளுடைய முகத்தையே பரக்கப் பரக்கப் பார்த்துக் கொண்டு ஜுர மாத்திரையைத் தன் உதடுகளில் பூவிதழ் போல் பொருத்தி அதை ருசித்து ருசித்துச் சாப்பிட்டான்.

உமா எதையோ நினைத்துக் கொண்டு கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தாள்.

''உமா! ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று பிச்சுமணி வியப்புடன் கேட்டான்.

''அந்தக் கசப்பான மாத்திரையைச் சாப்பிடுவதற்குக் கொஞ்சம் சர்க்கரையும் கேட்பாயோ என்று நினைத்தேன்!''

பிச்சுமணி குமுறினான். தன்னை இன்னும் குழந்தை என்று உமா நினைத்துக் கொண்டிருக்கிறாளா? அவள் கண்களில் நானும் ஒரு வாலிபனாகப் படவில்லையா?' என்று நினைத்துத்தான் அவன் மனம் குமுறினான். உமாவைத் தவிர வேறொரு பெண்ணாக இருந்தால் தன் ஆண்மையைக் கிண்டல் செய்கிறாள் என்று மகா ஆத்திரமடைந்து அவளுடைய கன்னத்தில் 'பளார் பளார்' என்று அறைந்திருப்பான். ஆனால் உமாவின் சுபாவம் அவனுக்கு நன்றாகத் தெரியுமாதலால் தன் நிலையைப் புரிந்து கொள்ள அவள் மறுக்கிறாளே என்றுதான் பிச்சுமணி வேதனைப்பட்டான். இருந்தாலும் தானும் ஓர் ஆண்மகன்தான் என்பதை எப்படியும் இன்று நிலைநாட்டிவிட வேண்டும் என்று பிச்சுமணி தீர்மானித்துக் கொண்டு சட்டென்று உமாவை நோக்கித் தாவி அவளுடைய கையைப் பிடித்துத் தன் பக்கமாகத் திருப்பினான். (தொடரும்)

அட்டைப்பட விளக்கம்

''சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம்''

செப்டம்பர் 11ந் தேதி அமரகவி பாரதியின் நினைவு நாள். பாரதியையும், அவரது பாக்களையும் நாம் என்றுமே நினைத்துத்தான் வருகிறோம். ஆனால் அந்த நினைப்பை இன்னும் செழிப்பாக்கிக் கொள்ள வேண்டும். தேச பக்தி, தெய்வ பக்தி இரண்டும் நிரம்பியவராகக் கவிஞரை நன்கு நினைவில் இருத்திக் கொண்டுள்ள நாம் அவரது காவிய நயத்தையும், வைதிக மனப்பான்மையையும் உணர்ந்தால்தான் முழு பாரதியையும் அறிந்தவராவோம். மறைகள், முனிவர்கள், வேள்வி இவற்றில் அவருக்கிருந்த பற்றுதல் மகத்தானது. வேதம் தமிழ் செய்த திவ்விய கவிகள் வரிசையில் வந்துள்ள பாரதியார் மந்திரங்களின் அரசான காயத்ரியைத் தமது 'பாஞ்சாலி சபத'த்தில் தமிழாக்கித் தந்திருக்கிறார்.

செங்கதிர்த் தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம்—அவன்
எங்களறிவினைத் தூண்டி நடத்துக

என்ற இம்மந்திரம் பிறந்த காட்சியைத்தான் இவ்விதழ் அட்டையில் 'விஜயா' வரைந்துள்ள ஓவியத்தில் மகாகவிக்குப் பின்னணியாகக் காண்கிறோம்.

சூதாடுவதற்குத் திருதராஷ்டிரன் அழைப்பைப் பெற்றுப் பஞ்சபாண்டவரும், பாஞ்சாலியும், பரிவாரமும் அஸ்தினபுரம் செல்லும் வழியில் அர்ச்சுனன் தன் அருமை நாயகிக்கு அஸ்தமிக்கும் பரிதியைக் காட்டிக் கடல் மடையாகக் கவி பாடுகிறான். கவித்துவம் வேத உபாசனா மந்திரத்தில் நிறைகிறது. பாரதி நினைவு நாளிலிருந்து இதனை நினைவில் வைத்து 'வேதம் நிறைந்த தமிழ் நாடு' என்ற கவிவாக்கை மெய்ப்பிப்போமாக!

கவிஞன் ஆணை

காலப் பெருவெளிக் கோலம் அனைத்தையும்
　காட்டி வியந்திடுவான்; - அங்கு
மூலப் பரத்திடை வாழ்க் கனலையும்
　மொய்த்தே உயர்ந்திடு வான் !

எக்களி யும்கெடக் கெக்களி கொட்டி
　எதிர்ப்பையும் தூற்றிடு வான்; - மற்றும்
தக்கத் தரிகிடத் தக்கத் தரிகிடத்
　தாம்' என்றும் போற்றிடு வான் !

அண்டங்கள் கோடியும் சென்று புடைத்திட
　ஆட்சியும் பற்றிடு வான்; - கவி
மண்டல ஞான மணிரதம் ஏறி, விண்
　மையமும் சுற்றிடு வான் !

சந்திரி கைதரும் இந்தி ரநிலவுச்
　சாறும் பருகிடுவான்; - அதன்
சுந்தர போதையில் சொக்கும் கவிதைச்
　சுவைக்கும் உருகிடு வான் !

கத்தும் குயிலொடு தத்துவம் பேசி, முக்
　காலமும் தேறி டுவான்; - வந்து
நித்தம் குருவி நெடுமரக் காக்கை, புள்
　நேயமும் கோரி டுவான் !


ஆண்டவ னாயினும் வேண்டிடும் போதே
　அடிமையும் ஆக்கி டுவான்; - நெஞ்சில்
மூண்டெழுங் காதலால் மோகனக் கண்ணன்
　மோகமும் தேக்கிடு வான் !　　　　— மேல்

மண்ணும் இமயமும் அன்னை தனமென
　மாருதும் சொல்லி டுவான்; - 'அதற்(கு)
என்னநேர்ந் தாலும் இடம் கொடா தீர்!' என
　எம்மையும் புல்லிடு வான் !

துஞ்சிடும் மக்களின் பஞ்சைத் தனத்தையும்
　'தூ!' வென் றிகழ்ந்தி டுவான்; - 'திறல்
விஞ்சிய சிங்கங்காள், வெற்றி இதோ! வென
　வேண்டவும் வந்திடு வான் !

பாவை திரௌபதி நாவின் சபதமும்
　பாரதி ஆணையன் றோ; - எனில்
ஆவி குலையினும் அன்னையைக் காவாமோ ?
　யாவரும் சேனையன் றோ !

தமிழழகன்





ஆபீஸிலிருந்து சுமந்து வந்திருந்த 'பைல்' கட்டுகளுடன் நான் போராடிக் கொண்டிருந்தேன். கையிலே ஒரு பட்டுப் புடவையுடன் என் எதிரில் வந்து நின்றாள் கீதா.

''இந்தப் புடவை ஏது என்பது தெரிகிறதா?'' என்று என்னைக் கேட்டாள்.

''நாற்பத்தைந்து வயதாகும்போதுதான் கண் பார்வை மங்கும் என்று சொல்வார்கள். அந்தப் பாக்கியம் வர இன்னும் பதினைந்து வருஷங்கள் இருக்கின்றனவே...!'' என்று ஞாபகப்படுத்தினேன்.

''இது என் கூறைப் புடவை!...'' என்று அவள் எனக்குத் தெளிவாக நினைவூட்டினாள்.

''தெரியும்!'' என்றேன் நான் சுருக்கமாக.

''என்ன தெரியும் உங்களுக்கு? கூறைப் புடவை நாங்களே வாங்கிக் கொள்கிறோம் என்று என் அப்பாவிடம் ரொக்கமாக முந்நூறு பெற்றுக் கொண்டார் உங்கள் அப்பா!''

''அதுவும் எனக்குத் தெரியும்! இப்போது நீ இதைச் சொல்வது மூவாயிரத்து முப்பத்தி மூன்றாவது முறை. அந்தப் புடவை இருநூறு ரூபாய்கூடப் பெறாது என்று உன் ஒன்றுவிட்ட அத்தையின் நாத்தனார் சொன்னாள்... பாக்கி நூறு ரூபாயில் என் அப்பா அடையாற்றில் 'ஏ' டைப் வீடுகள் ஏழு வாங்கிப் போட்டிருக்கிறார்... திருப்திதானே?''

''உண்மையைச் சொன்னால் ஏன்தான் இப்படி உடம்பு எரிகிறதோ? கல்யாணமாகி நாலு வருஷங்கள் கூட ஆகவில்லை...இப்படிப் புடவை தனி, கரைக்கட்டு தனி என்று கிழிந்திருக்கிறது பாருங்கள்!''

''நல்லதாகப் போயிற்று...கரைக்கட்டைக் கிழித்து ஜரிகைக்காரனிடம் போடு... புடவையை எவர்ஸில்வர் பாத்திரக்காரனிடம் தள்ளு! நீ இந்த இடத்தை விட்டு நகர்ந்து விடு. வேலை தலைக்கு மேல் கிடக்கிறது...'' என்று அவளை அனுப்பப் பார்த்தேன்.

''நமக்கெதற்கு இப்போது எவர்ஸில்வரும் தங்கமும்?...'' என்று என் பத்தினி என்னையே வினவியதும் நான் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டேன். என்னையேகூட ஒரு முறை கிள்ளிப் பார்த்துக் கொண்டேன்.

''ஏன் அப்படி விழிக்கிறீர்கள்? அடுப்பு ஒன்று தான் எவர்ஸில்வரில் சீராகக் கேட்கவில்லை உங்கள் அம்மா... பாக்கி அத்தனையும்!''

''அம்மா கீதா! பழையபடி பழையபடி நீ என் அம்மா அப்பாவை உன் பேச்சில் 'டச்' பண்ணுவதானால் உடனே சபை கலையலாம்!''

''உங்கள் முன் சதிராடுவதைத் தவிர வேறு எனக்கு வேலை இல்லையா? இந்தப் புடவையை நம்ம மீனுவுக்குக் கொடுத்தால் என்ன என்றுதான் கேட்க வந்தேன்!''

''உன் தங்கை மீனுவுக்கா?... பலே, பலே! அவள் கல்யாணத்தை இந்தக் கூறைப் புடவையை வைத்துக் கொண்டு சமாளித்தாலும் சமாளிப்பார் உன் அப்பா... அது தெரிந்துதான் என் அப்பா முன் யோசனையாகத் தானே வாங்குவதாகச் சொல்லி...''

''புத்தி போகிறதைப் பார்க்கவில்லை...என் தங்கை இதையெல்லாம் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டாள். நம் வீட்டு வேலைக்காரி மீனுவுக்குக் கொடுக்கலாமா, சொல்லுங்கள்!''

''மீனுவுக்குப் பட்டுப் புடவையா?'' என்று கேட்டேன் வியப்புடன்.

''ஏன்? கொடுக்கக் கூடாதா?... இல்லை, அவள் கட்டிக் கொள்ளக் கூடாதா?...அவளும் மனுஷிதானே?'' என்று கீதா நீட்டி முழக்கிக் கொண்டு கேட்டாள்.

''இதோ பார்! 'சோஷலிஸம்'னு என்னவென்று எனக்கும் புரியும். ஆனால் உன் கூறைப் புடவையை எடுத்து அவளுக்குத் தானம் செய்யும் அளவுக்கு நம் வீட்டுக்குள் அது வளர்ந்து விட்டதா என்பதுதான் கேள்வி!''

''கேள்வியோ பதிலோ எனக்குத் தெரியாது... கொடுக்கட்டுமா, வேண்டாமா?... சொல்லுங்கள்!''

''இப்போதெல்லாம் 'லோக சபை'யில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து 'நிறைவேற்றட்டுமா?' என்று ஒப்புக்குக் கேட்கிறாற் போல் இது என்ன கேள்வி? உன் தீர்மானமாவது, நடக்காமல் போவதாவது?...''

''எனக்கு உபமானம் உபமேயம் எல்லாம் சொல்லத் தெரியாது... கொடுக்கட்டுமா, வேண்டாமா?... ஒரு வார்த்தையில் பதில் சொல்லுங்கள்!''

''கொடு!''

''நடுவெல்லாம் கிழிந்து போயிருக்கிறது... நீங்களே பாருங்கள்!...''

''உம்...''

''சாயம்கூட மங்கியிருப்பது தெரியவில்லை?...''

''சரி, சரி!...''

''நான்தான் கரைக் கட்டோடு கொடுக்கப் போவதில்லையே, அதைக் கிழித்து எடுத்து விடப் போகிறேனே!''

''ஆகட்டும்!...''

''அம்மா ஊரிலிருந்து வந்தால் ஏதேனும் சொல்வார்களா?''

''அம்மா சொல்வானேன்?... நானே கேட்கிறேன்... நம் கல்யாணத்துக்கு முதன் முத

வில் வாங்கிய புடவை கிழிந்தால் என்ன? இந்த வீட்டில் அதற்கு இடமா இல்லை? என் தாத்தா கல்யாணத்துக்கு வாங்கிய அல்பாக்கா கோட்டு இன்னும் பெட்டிக்கு அடியில் இருக்கிறது...''

''ஆமாம்... இந்தப் புடவை பாச்சை அடித்துப் புள்ளி புள்ளியாகப் பொட்டு விழுந்து வீணாகப் போக வேண்டும்... ஒருவருக்கு உபயோகப்படும்படி கொடுக்க உங்களுக்கெல்லாம் மனம் வராது...''

''கர்ணனுக்குக் கலிகாலத்தில் பிறந்த தங்கையே! உன் இஷ்டம்!.. இப்போது என்னை வேலை செய்ய விடு!'' எனக் கரம் குவித்து அனுப்பினேன்.

மறுநாள் காலை.

ஆள் உயரமிருந்த இரும்புப் பீப்பாய்க்கு மீனா தண்ணீர் அடித்துக் கொண்டிருந்தாள். நாங்கள் இருவருமே வீட்டில் இருந்ததால் அந்தப் பீப்பாய் உபயோகத்தில் இல்லை.

''எதற்குக் கீதா?.. இவ்வளவு தண்ணீர்?.. வேண்டியது நானே பிடித்து வைத்திருந்தேனே!...''

என்னைத் தனியே அழைத்துக் கொண்டு போய் அவள் தன் தலையில் 'மட் மட்' என்று போட்டுக் கொண்டாள்.

''கொஞ்சமாவது தெரிகிறதா உங்களுக்கு?... சும்மாவா செய்கிறாள்? நாம் தான் அவளுக்குப் பட்டுப் புடவை கொடுக்கப் போகிறோமே !.....''

''அதற்காக அநாவசியமாகத் தண்ணீர் அடித்து.......''

''எல்லாம் அவசியம்தான். தோட்டத்தில் கொட்டிக் கிளறி வைத்தால், அவரை, புடல் என்று இப்படி ஏதாவது போடலாம்!''

''உம், செய், செய்.....!'' என்றேன்.

சேந்தியிலிருந்து சில பெரிய பாத்திரங்கள் எடுத்துக் கீழே போட்டு மீனாவைத் தேய்க்கத் தரும்படி ஏவினாள் கீதா மறுநாள்.

''ஏதேனும் விசேஷமா? இல்லை, யாராவது இரவல் கேட்டிருக்கிறார்களா?'' என்று நான் கேட்டேன் ஒன்றும் அறியாதவன்போல்.

''தேய்க்காமல் அப்படியே கறுத்துப் போய்க் கிடந்தன. ஒரு தரம் விளக்கி வைத்தாலென்ன என்றுபோட்டிருக்கிறேன்.''

''போகிறது!..... நல்ல யோசனைதான். அவள் தேய்த்து விட்டுப் போகும் போது ஒரு நாலணா கொடுத்து அனுப்பு! பாவம்!''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்! இப்படி யெல்லாம் கொடுத்துப் பழக்கப்படுத்தினால் அவ்வளவுதான்! அப்புறம் எடுத்ததற்கெல்லாம் காசு, தொட்டதற்கெல்லாம் பணம்தான்.....''

''அதிகப்படி வேலை செய்தால் நாங்கள் ஆபீஸில் 'ஓவர் டைம்' வாங்கி வருகிறோம்!''

''அவள் காதில் விழும்படி பேசாதீர்கள்! கேட்டுக் கொண்டு சண்டைக்கு வரப் போகிறாள்!....'' என்று என்னை மடக்கினாள்.

''புடவை கொடுத்தாயிற்றா?'' என்று வினவினேன் நான்.

''என்ன அவசரப்படுகிறீர்கள் நீங்கள்?.... அதை எப்போது கொடுக்க வேண்டுமென்று எனக்குத் தெரியும்!....'' என்று அவள் சொன்னவுடன் இனி அந்தப் புடவை பற்றிய பேச்சே எடுப்பதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்தேன்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை. ஆபீஸ் போக வேண்டிய அவசியம் இல்லாததால், கால்களை நீட்டியபடியே நாற்காலியில் சாய்ந்து கொண்டேன்.

''இன்று எங்கேயும் வெளியில் போகப் போவது இல்லையா?....'' என்று கேட்டாள் கீதா. எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ''ஒரு ஞாயிற்றுக்கிழமைகூட வீட்டில் தங்காமல் அப்படி என்ன அலைச்சலோ?'' என்று வழக்கமாகக் கடிந்து கொள்பவள் இப்படிக் கேட்பானேன்?

''எதற்காகக் கேட்கிறாய்?'' என்றேன் நான்.

''வீடு முழுதும் ஒட்டடை. மீனாவை அடிக்கச் சொல்லி யிருக்கிறேன். நீங்கள் வெளியே போயிருக்கும் சமயத்தில் செய்தால் உங்களுக்குத் தொந்தரவு இருக்காதே என்று பார்த்தேன்.....''

''சரி...... நான் இங்கு இருப்பதால் உனக்குச் சங்கடம் என்று தெரிகிறது. வெளியே விரட்டுகிறாய், போகிறேன்!....'' என்று கூறி எழுந்தேன்.

''நீங்கள் பேஷாக வீட்டில் இருங்கள் ! அப்புறம் 'தோளில் அது விழுந்தது....தலையில் அது கவிழ்ந்தது' என்று மட்டும் குற்றம் சொல்லாதீர்கள்.....'' என்று அவள் நிபந்தனை ஒன்றை விதித்தாள்.

புறப்படும்போது கீதாவிடம், ''பரிசளிப்பு விழா என்றைக்கு வைத்திருக்கிறாய்? பிரதம மந்திரியை அழைக்கட்டுமா? இல்லை, உள்ளூர் கலெக்டரே போதுமா?.....'' என்று கிண்டலாகக் கேட்டேன்.

''என்ன சொல்கிறீர்கள்?....'' என்று விழித்தாள் அவள்.

''அதுதான் மீனாவுக்கு அந்தப் புடவை...''

''கொடுக்கத்தான் போகிறேன்!.....!'' என்று இழுத்தாள் அவள்.

''கொடுப்பது என்று ஒரு முறை நிச்சயித்து விட்டால் அப்படியே செய்து விடு!... திருப்பித் திருப்பி யோசிக்காதே!.....'' என்று அவளுக்குப் புத்திமதி சொன்னேன்.

''எல்லாம் எனக்குத் தெரியும்! நீங்கள் புறப்படுங்கள்!.....'' என்று என்னை விரட்டினாள் என் சகதர்மிணி.

நாட்கள் கழிந்தன. மீனாவுக்குப் புதிது புதிதாக வேலைகள் சேர்ந்தன. தானே தோய்த்துக் கொண்டிருந்த புடவையை மீனாவுக்குப் போட்டாள். வாசலில் வாங்கிக் கொண்டிருந்த தயிரை நிறுத்தி விட்டு, மீனாவைத் தினமும் 'டெப்போ'விலிருந்து வாங்கி வரச் சொன்னாள். வீட்டில் உள்ள சில்லறை வேலைகளை அவள் மேல் திணித்தாள்.

நான் மீண்டும் அந்த விஷயத்தைப் பற்றிப் பேசவில்லை. அப்பப்பா! இந்தப் பெண்களை

ஈறு உபாதை மற்றும் பற்சிதைவு

இவைகளுக்கான சிகிச்சையில்

போர்ஹான்ஸ்

டூத்பேஸ்ட்
உபயோகித்துப் பெற்ற

வியக்கதக்க பலன்கள்

ஒரு பல் டாக்டரால்
உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

*இந்த தந்தசாட்சிக்கடிதங்களை ஜாப்ரே மானேர்ஸ் & கோ. லிட., கம்பெனியாரின் எந்த ஆபீஸிலும் காணலாம்.



என்னுடைய ஈறுகள் பருக்கபோல ஆகி இருந்ததால் 1948ல் அவைகளிலிருந்து இரத்தம் கசியத்தொடங்கியது. என் பற்களைப்பற்றிப் பெருமைப்படும் என் கணவர் என்னை போர்ஹான்ஸ் டூத் பேஸ்ட் உபயோகிக்கச் சொன்னார். அதன்பிறகு நான் போர்ஹான்ஸைத் தவருமல் உபயோகித்து அதன்மூலம் விசேஷமான பலன்களையும் அடைந் துள்ளேன்.

ஹெச். கே. பிலாய்நகர்



மூன்று வருடங்களுக்கு முன்பு நான் பல் வலியினால் வேதனைப்பட்டேன். என் நண்பன் ஒருவன் போர்ஹான்ஸ் உபயோகிக்குமபடி ஆலோசனை கூறினான். அதை நான் உபயோகிக்கத் தொடங்கினேன். ஒரு மாதம் கழிந்தவுடன் என் பல்வலி குணமானதுடன் என் பற்கள் ஒளிவீசும் வெண்மையுடனிருப்பதைக் கண்டு வியந்தேன். நான் இப்போது போர்ஹான்ஸ் டூத்பேஸ்டை உபயோகித்து வருகிறேன்.

பி. பி. பம்பாய்



நான் இளமைப் பிராயத்திலிருந்தே போர்ஹான்ஸ் டூத்பேஸ்டை உபயோகித்து வருகிறேன். என் குடும்பத்தில் எல்லோரும் இந்த டூத்பேஸ்டை உபயோகிக்கிறர்கள். ஏனெனில் இது பற்களை ஒளிவீசும் வெண்மையுடனும் ஈறுகளை ஆரோக்கியத்துடனும் இருக்க உதவுகிறதென்பதைக் காண்கிறோம் என்பதை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

(ஸ்ரீமதி) கே. வி. பங்களூர்



இலவசம் — பற்கள் பராமரிப்பு பற்றி படங்கள் கொண்ட புத்தகம்

ஈறு உபாதைகள் மற்றும் பற்சிதைவிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வது பற்றி மேலும் அறிய நீங்கள் விரும்பினல், இன்றே கீழ்க்கண்ட விலாசத்திற்கு "CARE OF THE TEETH & GUMS" என்ற புத்தகத்தின் (ஆங்கிலத்தில்) பிரதியைப்பெற தபால் செலவுக்கென 15 ந. பை ஸ்டாம்புகளை அனுப்பவும்: டிபார்ட்மெண்ட்: கே-6, மானேர்ஸ் டென்டல் அட்வைஸரி ப்யூரோ, தபால் பை நெ. 10031, பம்பாய்-1

...இதற்கு உகந்த, சிறந்த சேர்க்கைக்கு.

போர்ஹான்ஸ்

டபிள் ஆக்ஷன்

டூத் பிரஷ்
உபயோகியுங்கள்



இந்த டூத்பிரஷ் மட்டுமே

★ உங்கள் பற்களைச் சுத்தம் செய்வதோடு,

★ ஈறுகளையும் இதமாகத் தடவிக் கொடுக்கிறது.

8.27-TAM

என்னவென்பது? புடவை ஆசையைக் காட்டி வேலைக்காரியை இப்படி முதுகொடிய வேலை வாங்குகிறானே சீதா? இது நியாயமா? இல்லை தான். ஆனால் வேலைக்காரி மீனுவும் தான் ஏதோ ஒரு பொருள் தனக்குக் கிடைக்கப் போகிறது என்ற ஆசையில் எப்படி மாடாக உழைக்கிறாள்! பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஆனால் சொல்லத்தான் நாவெழ வில்லை. ஒன்று சொன்னால் சீதாவிடம் ஒன்பது தல்லவா வாங்கிக் கட்டிக் கொள்ளவேண்டி யிருக்கிறது என்று வாளாவிருந்து விட்டேன்.

இரண்டு மாதங்களுக்குப் பின் ஒரு நாள். கமலப்பன் கொண்டு கொடுத்திருந்த சலவை யைப் பீரோவில் அடுக்கிக் கொண்டிருந்தேன். சீதாவின் கூறைப் புடவை அழகாக மடிக்கப் பட்டு மத்தியில் இருந்தது.

''ஏய், சீதா!.....'' என்று கூவினேன். அவள் ஓடி வந்தாள்.

''இந்தப் புடவையை மீனுவுக்குக் கொடுக்க இன்னும் உனக்கு மனம் வரவில் லையா? இல்லை, வேண்டாம் என்று தீர்மா னித்து விட்டாயா?'' என்று கேட்டேன்.

அவள் மென்று விழுங்கினாள்.

''எனக்கு அப்பொழுதே தெரியும்..... தாராள புத்தி எங்களுக்கு இருப்பது போல் உங்களுக்குக் கிடையாது. புடவையை மனத் தில் வைத்துக் கொண்டு அவளை ஆயிரம் வேலை வாங்கினாய். ஆசை காட்டிக் காட்டி அவள் உடலை வருத்தினாய். கடைசியில் அது நிஸ்திரி செய்யப்பட்டு உனக்கே உடுத்திக் கொள்ள வைத்திருக்கிறது... இல்லையா?'' என்று பொரிந்து தள்ளினேன்.

''உங்களுக்கு ஒன்றும் தெரியாது'' என்று அவள் வழக்கம் போல் தொடங்கியபோது எனக்கு ஆத்திரம் மேலும் மூண்டது.

''ஆமாம், தெரியாதுதான்!.. தெரிந்திருந் தால் அப்போதே அவளைக் கூப்பிட்டு அந் தப் புடவையைத் தூக்கிக் கொடுத்திருக்க மாட்டேனா?''

''கொடுத்தாலும் அவள் வாங்கிக்கொண் டிருக்க மாட்டாள்'' என்று சீதா ஒரு புதிர் போட்டாள்.

''ஏன்?... பட்டுப் புடவையாயிற்றே. அவ ளுக்குக் கசக்குமோ?''

''நான் கொடுத்துப் பார்த்தேன். வேண் டாம் என்று சொல்லி விட்டாள்.''

''வேண்டாமாமா? அதிகம் கிழிந்து விட்டது என்றா?''

''அப்படி ஒன்றும் கிழியவில்லை.''

''பின் என்னதான் சொன்னாள்?''

''நமக்கு அந்தப் புடவையின் பேரில் இருக்கும் மதிப்பு அவளுக்கு இல்லை. நமக்குப் பெரிதாகத் தெரிந்தது, அவளுக்கு லட்சியம் இல்லை. பச்சை வர்ணம் அவளுக்குப் பொருந் தாதாம். அவள் புருஷன் எப்போதும் 'லைட் கலர்'தான் வாங்குவானாம். பூப்போட்ட 'வாயில்' புடவை தவிர வேறு எதுவும் அவ ளுக்குப் பிடிக்காதாம். அதனால் அவள் உடுத்துவதில்லையாம்!''

கொடுப்பவர் உயர்ந்ததாக நினைத்த ஒரு பொருள் வாங்குபவருக்குத் துச்சமாக— அலட்சியமாக — வேண்டாமென்று ஒருக்கு மனவுக்குப் போய்விட்டால் அந்தப் பொரு ளின் மதிப்பு பாதாளத்துக்கு இறங்கிவிடு கிறது என்று நினைத்துக் கொண்டேன். அதே சமயத்தில் வேண்டாமென்று மறுத்தவர் களின் மதிப்புத்தான் எத்தனை உயர்ந்து விடுகிறது?


சீதா ஏக்கத்துடன் என்னைப் பார்த்தாள். ''எனக்கே அவமானமாக இருக்கிறது. அவள் புருஷன் பேச்சுக்கு அவள் அத்தனை மதிப்புக் கொடுக்கும்போது அத்தனை பெரிய வர்கள் சேர்ந்து பெரிய சபையில் ஆசீர் வாதம் செய்து கொடுத்த புடவையை நான் தூக்கி எறிய நினைத்தேன் பாருங்கள்! அந்த முட்டாள்தனத்துக்குச் சரியான பாடம்'' என்று அவள் உண்மையில் வருந்தினாள்.

''போகிறது!... சீதாவுக்கே ஞானோப தேசம் செய்த மீனுவுக்குப் பரிசாக...''

''எதுவும் கொடுக்க வேண்டாம். அவள் செய்த அதிகப்படி வேலைக்கும் என் கண் ணில் படாமல் அவளுக்கு நீங்கள் கால்வும் அரையுமாகக் கொடுத்தது எனக்குத் தெரி யும். இல்லாவிட்டால் இந்தக் காலத்தில் அத்தனை வேலைகளை ஒரு பேச்சுப் பேசாமல் அவள் எப்படிச் செய்வாள்?'' என்று கேட் டாள் சீதா.

நான் பதில் சொல்லவில்லை!

இவர்களுடைய வளமான வருங்காலம் இப்பொழுதே திட்டமிடப்படுகிறது



இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கின் ரெக்கரிங் டிபாஸிட் திட்டத்தின் சேமிப்பைக்கொண்டு,

குறைந்த பட்சம் ரூ. 5/-லிருந்து அதிக பட்சமாக அதன் பெருக்குத் தொகை ரூ. 500/- வரையில், டிபாஸிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிரதிமாதம் டிபாஸிட் செய்யும் தொகையான :

	ரூ. 5/-	ரூ. 10/-	ரூ. 50/-	ரூ. 100/-	ரூ. 500/-
கீழ்க்கண்டபடி பெருகும் :					
12 மாதங்களில்	ரூ. 61.00	ரூ. 122	ரூ. 610	ரூ. 1,220	ரூ. 6,100
24 மாதங்களில்	.. 124.50	.. 249	.. 1,245	.. 2,490	.. 12,450
36 மாதங்களில்	.. 192.00	.. 384	.. 1,920	.. 3,840	.. 19,200
48 மாதங்களில்	.. 262.00	.. 524	.. 2,620	.. 5,240	.. 26,200

இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் லிட்.

தலைமைக் காரியாலயம் : 151, மவுண்ட் ரோட், சென்னை-2

உங்களுக்கு சேவை செய்வதற்காக 100 க்கு மேற்பட்ட கிளை அலுவலகங்கள் இந்தியாவின் முக்கிய இடங்களில். இதில் தமிழ் நாட்டில் மட்டும் 60 க்குமேற்பட்ட கிளை அலுவலகங்கள் உள்ளது.

IOB- 17 SA

எம். ஸிடி. முத்தையா
சேர்மன்

கே. எம். கஞ்சப்பா
ஜெனரல் மானேஜர்


டிங்கு ஸௌக்கியமா?
வாய்க்கு ஒன்னுமே வேண்டாதுங்கல்லே! தர்மாமீட்டர் ஒண்ணு தான் வேண்டியிருக்கு!
பர்மாவிலிருந்து வந்த அகதிகளுக்கு இங்கு குடியிருக்க இட வசதி செய்து விட்டாங்க! அகதிகளோடு அகதிகளா வந்த 'டிங்கு' ஜுரத்துக்கும் நம் உடம்பிலே இட வசதி தயாராக இருக்கிறது!
சாமா
'நம்மால் தான் இந்த 'டிங்கு' ஜுரம் பரவுதுன்னு சுகாதார இலாக்கா சொல்கிறது. இதுக்கு என்ன பண்ணலாம்"
"முதல்லே போய் அவர்களைக் கடிக்கலாம் வாங்க."
ஜுரத்துக்குப் பிறகு முழங்கால் வலி!
சரி! நான் கொடுக்கும் மாத்திரையில் உடனே போய் விடும்.
ஏ! கம் பேஷண்ட்!
வந்துட்டேன்..!
அப்பப்பா! என்ன உதறியும் 106 டிகிரிலே குந்து இறங்கமாட்டேங்கறதே! இதுக்கும் டிங்கு ஜுரமோ?

வேதாந்தத் தத்துவக் கதை



கண்ணனின் தலைவலி

கலாபாரதி

வெகு நேரமாய் வேணுகானம் செய்த கண்ணனுக்கு ஒரு நாள் மாலை தாங்க முடியாத தலைவலி வந்து விட்டது. வலி தாங்காமல் கண்ணபிரான் தவிக்கிறார். அருகே சூழ்ந்து கொண்டிருந்த முனிபுங்கவர்களும், கோபிகைகளும் என்னென்னவோ சிகிச்சை செய்து பார்த்தனர். வலி நீங்கவில்லை. மேலும் அதிகமாகிக் கொண்டே யிருக்கிறது. பொறுக்க முடியாமல் துடிக்கிறார். மருத்துவர்கள் வந்து மூலிகைகளைச் சாறு பிழிந்து தடவுகின்றனர். கேட்கவில்லை. அருகிலுள்ளோர் அனைவரும் என்ன செய்வதென்று ஒன்றும் புரியாமல் கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றனர். அப்போது அவர்களே கண்ணனை அணுகிக் கேட்கின்றனர்.

''உலகின் பிணி, நோய், துன்பங்களையெல்லாம் போக்கவல்ல தன்வந்திரி தெய்வமான உங்களுக்கே தலைவலி வந்து விட்டால், நாங்கள் என்ன செய்வது, பகவானே! என்ன பாவங்கள் செய்தோமோ? ஆண்டவன் அவதிப்படுவதை அடியார்களால் அகற்ற முடியவில்லையே..... இதற்கு முன்பு எப்போதாவது இது மாதிரி வந்திருக்கிறதா.... அப்போது என்ன செய்தீர்கள்? அதனைத் தெரிவிக்க வேண்டுகிறோம்......''

கண்ணபிரான் முனகிக் கொண்டே, ''ஏற்கனவே முன்பு ஒரு முறை தலைவலி வந்தபோது ஒரு பக்தர் குணம் செய்தார். அது போலெல்லாம் உங்களால் முடியாது.... ஆ.... தலைவலி தாங்க முடியவில்லையே.... ஊம்..... ஊம்'' என்று தவித்தார்.

''எங்களிடம் சொல்லுங்கள். எந்தத் திக்கில் எந்தப் பச்சிலையோ, மூலிகையோ எது வேண்டுமானாலும் சில விநாடிகளில் கொணர்ந்து சேர்க்கிறோம்.....''

''மூலிகையோ பச்சிலையோ தேவையில்லை. ஆனால் ஒன்று செய்வீர்களா? நிச்சயம் சொல்லுங்கள்'' என்றார் கண்ணன்.

''ஒன்றென்ன, ஒன்பது ஆனாலும் ஒரே கணத்தில் செய்கிறோம்....''

''அது உங்களால் முடியாது....''

''எங்கள் மேல் நம்பிக்கையில்லையா...?''

''உங்களில் ஒருவருடைய கால் பாதத்தை என் தலையில் வைத்துப் பாதத்தால் தலையைத் தடவி விட வேண்டும்...... தலைவலி கண நேரத்தில் பறந்து விடும்.''

''என்ன? எங்களது பாதம் தங்களது சிரசிலா? என்ன சோதனை இது.... கண்ணா? எத்தனை அபசாரத்தைச் செய்யச் சொல்கிறீர்கள்...... உயர் திருவடிகளால் ஓங்கி உலகளந்த உத்தமரான உங்கள் சிரசிலா, எங்கள் பாதங்கள்..... எத்தகைய பாதகம் பாவம்.... கேட்கவோ, சொல்லவோ, நினைக்கவோ, உடல், உள்ளம், உயிர் எல்லாம் கூசுகின்றனவே.....என்ன பாவம் செய்தோமோ...... தாங்கள் தாங்க முடியாத தலைவலியால் தவிப்பதைத் தவிர்க்க முடியாமல் பார்த்துக் கொண்டிருக்கிறோம்..... இந்தக் கொடிய பாதகத்தைச் செய்து விட்டால், ரௌரவாதி நரகத்தை விடக் கொடிய தண்டனை அல்லவோ கிடைக்கும். கிருஷ்ணா.... கிருஷ்ணா !'' என்று சொல்லி விட்டு அவர் காலில் விழுந்து வணங்கிவிட்டு ஒவ்வொருவராக நகர்ந்து நழுவினர்.

அப்போது அங்கு நாரதர் வந்து விஷயத்தை அறிகிறார். ஏதோ யோசனை செய்து விட்டுச் சென்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ராதை மிகுந்த பரபரப்போடு ஓடி வருகிறாள். அவளைக் கண்டதும் முனிபுங்கவர்களும், கோபிகைகளும், நாரதரும் அவளைப் பின்தொடர்ந்து ஓடி வருகின்றனர். ராதை புலம்புகிறாள்.

''என்னிடம் உடனே தெரியப்படுத்துவதற்கென்ன? இத்தனை நேரமாகவா என் கண்ணன் தலைவலியால் துடித்துக் கொண்டிருக்கிறார்? அதோ அவர் நீல நிற மேனி வெயிலில் வாடி வதங்கும் தளிர் போல் சிவந்து விட்டதே..... பார்த்துக் கொண்டிருந்து விட்டு, 'பாவம்' என்று பேசிக் கொண்டிருக்கிறீர்களே.....

''என் காலை அவர் சிரசில் வைத்துப் பாதத்தால் தடவி விடுகிறேன். அவர் தலைவலி நீங்கிக் குணமானால்தான் நான் நிம்மதி பெறுவேன். எனக்கு எந்தப் பாவமும் வரட்டும்.... நரக தண்டனை எத்தகைய கொடியதாக இருந்தாலும் அநுபவிக்கிறேன். கண்ணன் தலைவலியால் தவிப்பதைக் காணுவதை விடவா உலகில் வேறு கொடிய தண்டனை இருக்கப் போகிறது....? கண்ணா...கண்ணா...இத்தனை தாமதத்துக்கும் என்னை மன்னிப்பீர்களா? எங்கே உங்கள் தலையைக் காண்பியுங்கள். என் பாதத்தால் வருடுகிறேன்.......''

ராதையின் பக்தியைக் கண்டு சூழ்ந்திருந்த அனைவரும் மெய்சிலிர்க்கின்றனர். நாரதர் ஒருவருக்குத்தான் — கண்ணனின் தலைவலியைப் போக்கவல்லவள் ராதைதான்— என்று தெரிந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் கண்ணன் தலைவலி நீங்கிப் புன்னகையோடு ராதையைப் பார்த்தார்.

''பக்தர்களின் பாதங்களுக்குத் தலை வணங்கிப் பணியும் பண்பும் பரிவும் கொண்டவன் பரந்தாமன்'' என்று கண்ணன் தன் பக்தர்களிடம் கொண்டுள்ள 'சௌலப்யம்' என்கிற எளிமைத் தன்மையை எடுத்துக் காட்டச் செய்த ஒரு சோதனை என்பது அப்போதுதான் அவர்களுக்கு விளங்கியது.

கண்ணன் தம் மோகனப் புன்னகையால் வசீகரித்தார். அவர் குழல் மீண்டும் ஒலித்தது. அந்தத் தெய்வீக கானத்தில் உலகத்தின் உயிர்கள் மெய்ம்மறந்து ஒன்றிப் போயின.



பூர்வாசிரமம்

பீஷ்மன்

மணி ஐந்தரை ஆகிவிட்டது. இன்னும் அவர் வந்தபாடாயில்லை. வாசலுக்கும் உள்ளுக்கும் அலைந்து அலைந்து வசந்திக்குக் கால்களும் மனமும் களைத்துப் போய் விட்டன.

ஒரு மணி நேர அனுமதிக்கு எழுதிக் கொடுத்து விட்டு, சீக்கிரமே வந்து விடுவதாகச் சொல்லி விட்டுப் போயிருந்தான் சுதாகர். எதிர்பாராதவிதமாய் அவசர வேலை ஏதாவது வந்து சேர்ந்திருந்தால்....? 'ஊஹும்! அதெல்லாம் கூடாது. அவர் இன்று சீக்கிரம் வந்துதானாக வேண்டும். வந்து விடுவார்!' — வாழ்வில் அவர்கள் இணைந்தபிறகு முதல் முதலாக இன்றுதான் உல்லாசமாக வெளிக் கிளம்ப நினைத்திருந்தார்கள். அது ஏமாற்றமாக முடிவதை அவள் விரும்பவில்லை.

'எப்படியும் அவர் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவார்.....!' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டே அவள் மறுபடியும் வாசலுக்கே வந்தபோது அவசரம் அவசரமாகச் சுதாகர் தெருக்கோடியில் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. தன் எண்ணத்தின் வலிமைதான் அவரை அழைத்து வந்து விட்டதாக ஒரு நினைப்பு அவளுக்கு. அந்தப் பெருமையில், நிலைகொள்ளாத மகிழ்ச்சியில், வாசல் என்பதையும் மறந்து வாய் விட்டுச் சிரித்து விட்டாள் அவள்.

''புறப்படலாமா....?'' என்று கேட்டுக் கொண்டேதான் வந்தான் அவன், முகத்தில் வழியும் வியர்வையைக் கைக்குட்டையினால் துடைத்தவாறே.

''ஊம்!....'' என்று அழகாகத் தலையசைத்தாள் அவள்.

''நீ நாலு மணிக்கே 'மேக்கப்' எல்லாம் முடிச்சுட்டு உட்கார்ந்திருக்கே! நான் அப்படி ஆபீஸிலிருந்து வரமுடியுமா? முகத்தைக் கழுவிண்டு வரலாமா, இல்லே, இப்படியே கிளம்பணுமா...?'' என்றான் அவன் சிரித்துக் கொண்டே:

''நான் ஒண்ணும் அப்படியெல்லாம் சொல்லலே'' என்றாள் அவள் பொய்க் கோபத்துடன். ''சரி, சரி. உள்ளே வாங்கோ.''

முகம் கோபமாக நடித்தாலும் நடையின் துள்ளல் உள்ளத்து மகிழ்ச்சியைக் காட்டிக் கொடுத்து விட்டது.

''காப்பி கிடைக்குமா?'' என்று கேட்டான் அவன் காலணியைக் கழற்றிக் கொண்டே.

''எல்லாம் கிடைக்கும். சீக்கிரம் போய் முகத்தைக் கழுவிக்கொண்டு வாங்கோ....!''

''உத்தரவு தேவீ.......!''

பொய்க் கோபம் போய் விட்டது. அவள் சிரித்துவிட்டாள்.

கேலியும் கிண்டலுமாக அவர்கள் வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளிக் கிளம்பும் போது மணி ஆறாகிவிட்டது:

''மணி ஆறாயிடுத்து!'' என்று முகத்தைச் சுளித்தாள் அவள்.

''டிக்கெட் ரிசர்வ் பண்ணியாச்சு! படம் ஆறரைக்குத்தான் ஆரம்பம் ஆகும்! இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது: சாவகாசமாகப் போகலாம்.''

''ஆனாலும் நீங்க ரொம்ப 'ஸ்லோ'....''

''இப்போ தேவலையே. முன்னெல்லாம் நாங்க படத்துக்குக் கிளம்பற போதே ஆறரையாகிடும்.'' — அவன் சிரித்தான்.

அவள் மனத்தில் அவன் பேச்சு ஒரு கொக்கியாக மாட்டிக் கொண்டு நின்றது. அவர் 'நாங்கள்' என்று கூறும்போது தன்னுடன் அவளையும் சேர்த்துத்தான் குறிப்பிடுகிறார். அந்த 'அவள்' வசந்தியில்லை. வசந்திக்கு முன் அவள் ஸ்தானத்தில் அவருடன் இணைந்திருந்த அவள் வேறொருத்தி! — அவர் நினைப்பில் அவள் இன்னும் நிறைந்துதான் இருக்கிறாள்.

வசந்திக்கு என்னவோ போல் இருந்தது.

இன்று அவளுடன் பேசிச் சிரித்துக் கொண்டு நடப்பதைப் போலவே, முன்னால் வேறொருத்தியுடன் எத்தனையோ முறை அவர் நடந்து போயிருக்கிறார் என்ற உண்மையை நினைக்கும்போது, அது அவளுக்கு ஏற்கனவே தெரிந்த விஷயமாக இருந்தும், ஏனோ வேதனையாகத்தான் இருந்தது. அவருடைய இதயத்தில் தனக்கு ஒரு பாகம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ....? தன்னுடன் நடத்தும் வாழ்க்கையில் சென்றுபோன நாட்களின் சாயையைக் காணும் இன்பத்தில்தான் அவர் மிதக்கிறாரோ.....?

தன் கேள்விக்கு விடை தேடுவதைப் போல் அவள் திரும்பி அவர் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். சலனமில்லாத அமைதியுடன் நிறைந்த மகிழ்வொளியில் அந்த முகம் அவளைக் கனிவோடு பார்த்தது.

''என்ன யோசனை இடரென்று....?''

''ஒண்ணுமில்லையே.....!''

''என்ன பெண்களோ......? அவர்களும் அவர்களுடைய மனசும்.....!''

''உங்களுக்கு அநேகம் பெண்களுடைய மனசைப் பற்றித் தெரியும்.....!'' என்று நொடித்தாள் அவள்.

''அதிகமில்லாத போனாலும் இரண்டு பேரைப் பற்றித் தெரியுமே....!''

இதற்கு அவள் ஒன்றும் சொல்லவில்லை. இரண்டு பேர்! ஒன்று அவள், மற்றொன்று அந்த முன்னவள்! சாரதா!

ஒரு நாளா. இரண்டு நாட்களா? இரண்டு ஆண்டுகள் சாரதாவுடன் வாழ்ந்திருக்கிறார் அவர். ஊரே அதிசயிக்கும்படி அத்தனை இலட்சிய தம்பதியாக அவர்கள் வாழ்ந்தார்களாம். சாமண்ணா அப்பாவுடன் இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததை வசந்தியே கேட்டிருக்கிறாள். அப்படிப்பட்ட வாழ்க்கையையோ அல்லது அதில் அவரோடு இணைந்து நின்ற சாரதாவையோ அவரால் எப்படி மறக்க முடியும்......? — எத்தனை நாட்கள் ஆனால்தான் என்ன? அவர் அதை மறக்க வேண்டும் என்று நினைப்பதில்தான் என்ன நியாயம் இருக்கிறது?

எல்லாம் தெரியத்தான் செய்கிறது வசந்தியின் மனத்துக்கு. என்றாலும் சில சமயங்களில் இந்த உறுத்தல் ஏன்....?

திடீரென்று அவளுக்கு ஒரு சந்தேகம். அவளிடம் கொண்டிருந்த அளவு அன்பு இவருக்கு என்னிடம் இருக்குமா? இதை எப்படி அளந்து கணிப்பது......? 'அவளிடம் அவருக்கு இருந்த அன்பைவிட என்னிடம் அதிகமாகத்தான் இருக்க வேண்டும்; இருந்தாக வேண்டும்.....!' — இது அவள் மனம் தனக்குத் தானே கூறிக் கொண்ட முடிவு. அவரிடமே கேட்டு விட்டால் என்ன என்று ஒரு கணம் தோன்றியது. அப்புறம் என்னவோ அது உசிதமாகப் படவில்லை.

''புறப்படும்போது இருந்த குஷியைக் காணோமே!'' என்று அவளது மௌனத்தைக் குலைத்தான் அவன்.

''பேசிண்டே வந்தால்தான் குஷின்னு அர்த்தமாகும்......?''

''இல்லே. மௌனமாக வந்தால் மனசு சரியில்லேன்னு அர்த்தம்!''

வசந்தியை மனைவியாக ஏற்றுக்கொண்ட பின்பு இரண்டு பேரும் தனியாக எங்கே நடந்து போயிருக்கிறார்கள்? பின்னே அவருடைய இந்தக் கணிப்பு எந்த அனுபவத்தின் அடிப்படையில் எழுந்தது? சாரதா மௌனமாக வந்தால் அவளுக்கு மனசு சரியில்லே என்று அவர் அனுபவத்தால் உணர்ந்திருக்கிறார். அந்த அனுபவம்தான் இப்போது பேசுகிறது.

முந்திய வாழ்வின் அடிப்படைதான் அவரது இன்றைய எண்ணங்களுக்கு ஆதாரம். வசந்திகூட அவரைப் பொறுத்த வரை சாரதாவின் சாயைதானே?

தியேட்டர் வந்து விட்டது. அவள் எண்ணங்கள் மேலே தொடராமல் நின்றன.

''படம் இன்னும் ஆரம்பிக்கவில்லே, பார்த்தாயா? என்னமோ பறந்து தவித்தாயே.''

அவள் கை மணிக்கட்டைப் பார்த்தாள். மணி சரியாக ஆறரை.

படம் வந்து மூன்று நான்கு வாரங்கள் ஆகி விட்டிருந்தபடியால் முதல் வகுப்பில் அவ்வளவாகக் கூட்டம் இல்லே. வசதியாக உட்கார இடம் கிடைத்தது.

எத்தனையோ முறை பார்த்துப் பார்த்து அலுத்துப் போன விளம்பரப் படங்கள் திரையில் ஓடிக் கொண்டிருந்தன.

''இந்த மாதிரி ஒரு நிலை உனக்கு ஏற்படும் என்று இரண்டு வருஷங்களுக்கு முன்னால் நீ நினைத்திருப்பாயா......?'' என்று கேட்டான் அவன். அவளது கையை மெல்ல அழுத்திக் கொண்டே.

அவள் பெருமூச்செறிந்தாள்.

அவர் இன்னும் இரண்டாண்டுகளுக்கு முன்னால்தான் இருக்கிறார் என்றாலும் இப்போது அவர் கேட்பது அவளைப் பற்றியல்லவா....? அந்தவரைக்கும் அவளுக்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

''இல்லே......!'' என்று முனகினாள்.

''சாமண்ணா வந்து அப்பாவிடம் என்னைப் பற்றிச் சொன்னபோது நீ என்ன நினைத்தாய்?.......?''

இந்தக் கேள்வியை அவளிடம் கேட்க வேண்டும் என்று சுதாகர் எத்தனையோ முறை நினைத்திருக்கிறான். இப்போதுதான் கேட்க முடிந்திருக்கிறது.

அவள் அவனுக்கு உடனே பதில் சொல்லவில்லை. அவனது கைவிரல்களை நெருடிக் கொண்டு பெருமூச்செறிந்தவண்ணம் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

''என்ன வசந்தி?''

''ஒன்றுமில்லே.......!''

''ஒன்றுமில்லேயென்றால்....? ஒன்றுமே நினைக்கவில்லேயா......?''

அவள் திரும்பி அவன் முகத்தைப் பார்த்தாள். தியேட்டரினுள் பரவியிருந்த அரை இருட்டில் அவன் கண்கள் ஆவலுடன் ஒளிர்வதை அவள் கண்டாள்.

''நான் அதைச் சொல்லவில்லே.''

''பரவாயில்லே. இப்போ அதைச்சொல்லு!''

இருளில் அவள் மெல்ல நகைத்தாள். அவன் கை, அவள் உட்கார்ந்திருந்த நாற்காலியின் பின்னால் நெளிந்து அவள் கேசத்தை வருடிக் கொண்டிருந்தது. அந்த ஸ்பரிச இதத்தில் அவள் ஒரு கணம் கண்ணை மூடிக் கொண்டாள்.

''என் வாழ்க்கை மலருமென்று நான் நினைத்ததேயில்லே. இந்த நாட்டில், நம்முடைய சமூகச் சூழ்நிலையில் எனக்கு அப்படி ஒரு நம்பிக்கை ஏற்பட வழியே இல்லே. அப்பா மட்டும் அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருப்பார்: 'உனக்கு ஒரு விடிவு இல்லாமல் எனக்கு ஒரு முடிவு "இல்லே' என்று. அவருடைய நம்பிக்கை பொய்க்காமல் இருக்க நீங்கள் வந்து உதவினீர்கள். சாமண்ணா வந்து உங்களைப் பற்றிச் சொன்னபோது, லட்சியப் பிடிப்புள்ள ஓர் ஆண் மகனாக உங்களை நினைத்துப் பார்த்தேன். அப்பாவின் நம்பிக்கையின் பலம் உங்களை என்னிடம் அழைத்து வந்தது என்றும் நினைத்துக் கொண்டேன். வேடிக்கை போல் பிரமிக்கத் தக்க ஒரு மாறுதல் எவ்வளவு எளிதாக என்னுடைய வாழ்வில் ஏற்பட்டு விட்டது!''

அவன் அவள் காதருகே குனிந்து மிகவும் மெல்லிய குரலில் கிசுகிசுத்தான்: ''உனக்குத் திருப்திதானே......?''

தன் விரல்களை நெருடிக் கொண்டிருந்த அவன் கையை அழுத்திப் பற்றிக் கொண்டாள் அவள்.


''வெறும் வார்த்தையால் அந்தத் திருப்தியின் அளவைச் சொல்லிவிட முடியுமா...?''

பரவசத்தில் அவள் உடல் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்ததை அவன் கவனித்தான். அவளுடைய இந்தப் பரவசநிலை அவனுக்கு மிகவும் இதமாக இருந்தது.

பளபளப்பான செந்நிறத் தரைகள்

— உங்கள் வீட்டிற்குப் பெருமை!

சிவப்பு கார்டினல் பாலிஷ் மூலம் உங்கள் வீட்டுத் தரைகளை செந்நிற ஒளியுடன் பிரகாசிக்கும்படி வைத்துக் கொள்ளுங்கள். மினுமினுப்பற்ற சாதாரண கல்தரையானாலும் சிமிட்டித் தரையானாலும் பளபளப்பைக் கொடுப்பதில் சிவப்பு 'கார்டினல் பாலிஷ்' அற்புதமாக வேலை செய்யக்கூடியது. க்ணநேரத்தில் மங்கலான தரையை புதியதோர் செந்நிற ஒளியுடன் பிரகாசிக்கும்படி செய்துவிடும்! உங்கள் வீட்டின் அழகான தரையை அழகாகவும் பளபளப்பாகவும் வைத்துக் கொள்ள இன்றே, சிவப்பு கார்டினல் தரைப் பாலிஷை உபயோகியுங்கள்!






சிவப்பு கார்டினல் பாலிஷ்

JWT-CP-1612

அட்லாண்டிக் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)



MERRITT
ஸிங்கர்*
அறிமுகப்படுத்தும்
'மெர்ரிட்' வரிசையில் மிகப்புதிய தயாரிப்பு
மெர்ரிட்* ஃபான்கள்
மெர்ரிட்
48" சீலிங் எலெக்ட்ரிக் ஃபான்
மெர்ரிட்
16" டேபிள் ஃபான்
"மெர்ரிட்" டேபிள் அல்லது சீலிங் மின்சார விசிறிகளை விடச் சிறந்தவைகளை நீங்கள் வாங்க முடியாது. மிக நுண்ணிய பொறி இயல் நுணுக்க நேர்த்தியுடன் தயாரிக்கப்பெற்ற இந்த மின்சார விசிறிகள் வருஷக் கணக்காக சப்தம் சிறிதுமின்றி, மிகத்திறமையாக குளிர்ந்த காற்றை வீசக்கூடிய உத்தரவாதம் கொண்டவை... விசேஷமான பராமரிப்பு இவைகளுக்கு தேவையில்லை... பயன்படுத்துவதற்கு மிகவும் சிக்கனமானவை... வாங்குவதற்கு மிகவும் சிக்கனமானவை.
உங்கள் அருகாமையிலுள்ள அங்கீகாரம் பெற்ற ஸிங்கர் வியாபாரியிடமோ அல்லது ஸிங்கர் கடையிலோ கிடைக்கும்.
எல்லாவற்றையும் விட-ஒவ்வொரு மெர்ரிட்
மெஷினுடனும் ஆயுட்
காலம் முழுவதும் ஸிங்கரின் சேவையையும்
நீங்கள் வாங்குகிறீர்கள்
ஆர்ட்நிட்டா
ஆட்டோமாடிக் நூலண்ட் நிட்டிங் மெஷின்கள்
மெர்ரிட்
தையல் மெஷின்கள்
மெர்ரிட்
மின்சார இஸ்திரிப் பெட்டிகள்
* ஸிங்கர் ஸ்தாபனத்தின் ஒரு ட்ரேட்மார்க்
SS. G. 11. TAM

'' உணர்ச்சி வசப்பட்டால் உனக்கும் உடம்பு நடுங்குகிறதே!''

இணைத்துப் பேசாமல் அவரால் இருக்க முடியவில்லையோ? எதற்காக இந்த 'உனக்கும்'...? சாரதாவுக்கும் உணர்ச்சி வசப்பட்டால் உடம்பு நடுங்கும் என்பதைத்தான் அவருடைய இந்த 'உனக்கும்' உணர்த்துகிறது என்று அவளுக்குப் புரிய வைக்கவா? இல்லை; சாரதாவைப் போலவே நீயும் இருக்கிருயே என்று மகிழ்கிருரா....?

பக்கத்தில் அமர்ந்திருப்பவர்கள் ருன் கொட்டினுர்கள்.

படம் ஆரம்பமாகி விட்டது. இனி பேசினல் மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும். அவன் திரையைப் பார்க்கத் தொடங்கினன். அவளும்தான்! ஆயினும்... மனத்தில் தெரியும் திரையில் வேறு காட்சிகளல்லவா தெரிகின்றன!

அவள் வாழ்வின் திருப்புமுனைக்குக் காரண கர்த்தரான சாமண்ணுவின் நெடிய உருவம் அவள் மனத் திரையில் தெரிகிறது.

முறத்தில் அரிசியைக் கொட்டி, கல் பொறுக்கிக் கொண்டு அவள் வீட்டுத் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருக்கிருள். உள்ளே கூடத்தில் ஊஞ்சல் ஆடும் முனகல் ஒலியோடு சாமண்ணுவும் அப்பாவும் பேசிக்கொண்டிருப்பது அவளுக்குத் தெளிவாகக் கேட்கிறது.

கை முறத்தில் அளைந்துகொண்டிருந்தாலும் மனம் அவர்கள் பேச்சில்தான் லயிக்கிறது.

''மதராஸில் எங்கள் தலைமைக் காரியாலயத்தில் பையன் சூப்பிரின்டெண்டெண்ட். தங்கமான குணம். நாலைந்து வருஷங்களாக எனக்கு நல்ல பழக்கம். மூணு வருஷமாச்சு, அவன் மனைவி இறந்து போய். கல்யாணத்தைப் பற்றின சிந்தனையே இல்லாமல் எதிலேயும் பற்றில்லாத நிலையில் வாழ்ந்திண்டிருக்கான். நான்தான் வசந்தியைப்பற்றி அவனிடம் சொன்னேன். உங்களுடைய எண்ணத்தையும் சொன்னேன்: பையன் லட்சியப் பிடிப்புள்ளவன். எப்படியும் மசிந்து விடுவான் என்ற என் நம்பிக்கை வீண் போகவில்லை. நாளைக்குப் பையனை அழைத்து வருகிறேன். வசந்திக்கு நல்ல காலம் ஆரம்பித்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்களேன்.''

சாமண்ணு கட்டியம் கூறின அந்த நல்ல காலம் வரத்தான் செய்தது. சுதாகர் அவளைப் பார்த்ததும், திருமணம் நடந்ததும் கனவில் நடந்தவை போல் அத்தனை வேகமாக நடந்து விட்டன. சாமண்ணுதான் எல்லோரையும் இயக்கித் துரிதமாகக் காரியங்களை நடத்தி வைத்தார்.

இந்த வாழ்க்கையை எனக்குத் தந்தவர் சாமண்ணுதான் என்று சுதாகர் அடிக்கடி அவளிடம் சொல்வதுண்டு. இரண்டாம் திருமணமே வேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருந்த அவனை, தம் சமத்காரமான பேச்சினுல் அவர் எப்படி மசிய வைத்தார் என்று அவன் சொல்லக் கேட்டிருக்கிருள் அவள்.

''இந்த உலகத்திலே நல்லவனுக உயர்வதற்கு இருக்கிற வசதிகளையும் வாய்ப்பையும்



'என்னப்பா இந்த 'டீ'யில் ஒரு தேனீ இருக்கிறது!'
'அது தேனீராச்சே சார்!'

விட, கெட்டவனுக ஆவதற்குத்தான் வசதிகளும் வாய்ப்பும் நிறைய இருக்கின்றன. உன்னை மாதிரி அழகும் இளமையும் உள்ள வாலிபர்கள் ஒரு பெண் துணையில்லாமல் இருப்பது உன் போன்றவர்களுக்கும் சமூகத்துக்குமே, சந்தர்ப்பக் கோளாறுல் ஆபத்தாக முடியும்!'' என்று அவர் சொன்னதைச் சிந்தித்துச் சிந்தித்துத்தான் திருமணம் செய்துகொள்ள அவன் சம்மதம் தெரிவித்ததாகச் சுதாகர் சொல்லியிருக்கிருன்.

'ஆயினும், என்னைக் கலியாணம் செய்துகொள்ள அவர் சம்மதித்தது அவருடைய இலட்சிய உள்ளத்தினுல்தானே.....!' என்று நினைத்தபோது அவளுக்குப் பெருமையாக இருந்தது.

அவளும் அவரும் அப்பாவிடம், சென்னைக்குப் புறப்படுமுன், விடைபெற வந்திருந்தபோது, கண்களில் பொங்கும் நீருடன் அவர் கூறிய வார்த்தைகள் அவள் நினைவுக்கு வந்தன.

''சுதாகர் உனக்குக் கணவராகக் கிடைத்திருப்பதற்கு நீ எவ்வளவோ புண்ணியம் செய்திருக்க வேண்டும், வசந்தி! என் காலம் முடிவதற்குள் உன்னைக் கைப்பிடிக்க ஒருவன் வருவாஞ என்று நான் மனத்தினுள் மறுகிக் கொண்டுதான் இருந்தேன். நான் கற்பனை செய்யாத அளவுக்கு ஓர் உயர்ந்த மனிதர் உனக்குக் கிடைத்திருக்கிருர். அவர் மனம் போல நடந்து உன் வாழ்க்கையையும் அவர் வாழ்க்கையையும் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு; சுதாகர்! உங்களுக்கு நான் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் தீர்க்காயுசோடு இருக்க வேணும். அவ்வளவுதான்!''

சொல்லி விட்டுக் குழந்தை போல் அவர் தேம்பியழுத காட்சி அவள் மனத் திரையில் இன்னும் ஆடுகிறது.

திரையில் எதிரே ஓடிக் கொண்டிருந்த படக் காட்சியை இத்தனை நேரமாக அவள் கண்கள்தான் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தனவே தவிர, அவள் மனம் பழைய நிகழ்ச்சிகளில்தான் மூழ்கிக் கிடந்தது.

ஆனல் அவள் மனதையும் ஈர்த்து இழுக்கும் காட்சியாகத் திரையிலே ஒரு முகம் தெரிந்த போது அவளுக்கு மெய் சிலிர்த்தது; கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டு பார்த்தாள்.

கையில் மண மாலையுடன் மகிழ்ச்சி பொங்கும் முகத்துடன் வரும் அந்த நடிகனின் முகம்......! அந்தக் காட்சி....!

சிறுவனும் சிறுமியுமாய் விளையாடிக் கொண்டிருந்த காட்சியின் தொடர்ச்சியாய் அவர்கள் பெரியவர்களாயும் இணைந்து விளையாடுவதைச் சித்திரிக்கும் காட்சி அது.

அவள் மனத்திரையில் மறுபடியும் சலனம்:

அவளுக்கு அப்போது பதினைந்து வயதிருக்கலாம். உலகத்தில் நிகழ்பவற்றுக்கெல்லாம் முழுப் பொருளும் தெரியாது போனலும் அரைகுறையாக எல்லாவற்றிலும் ஒரு ரசனையும் பிரமிப்பும் பிறக்கிற வயசு அது.

அப்போதுதான் அது நிகழ்ந்தது.

திரையிலே தோன்றிய இதே காட்சி அவள் வாழ்வில் ஒரு முறை நிகழ்ந்திருக்கிறது. அப்போது அவள் அம்மா உயிருடன் இருந்தாள். சின்ன மலர் போலச் சிரித்துக் கொண்டு அவள் மண மேடையில் உட்கார்ந்திருக்கிறாள். அவளுக்கருகிலே இந்தப் புதிய நடிகனைப் போன்ற சாயலுடன் அமர்ந்திருந்த விஜயன், அன்று அவள் கழுத்திலே மாலையிட்டான். கொட்டி மேளம் முழங்கியது. கனவு போல் இன்று தெரிந்தாலும் அந்தக் காட்சி பொய்யல்லவே!

அந்த முகத்தை அவள் சரியாகக் கூடப் பார்க்க வில்லை.

என்றாலும்......

கலியாணம் நடந்து விட்டது!

கலியாணமாகி இரண்டு நாட்களுக்கெல்லாம் அவன் புறப்பட்டுப் போய் விட்டான் பெங்களூருக்கு. இரண்டு மாதங்கள் கழித்து நாள் பார்த்துப் பெண்ணை வீட்டுக்கு அழைப்பதாகப் பையனின் பெற்றோர் சொல்லிச் சென்றார்கள். ஆனால் அவர்கள் அவளை அழைக்கும் சந்தர்ப்பம் வரவில்லை!

ஒரு வாரத்திலேயே எங்கோ கார் விபத்தில் விஜயன் இறந்து போன செய்தி அவளைத் தேடிக் கொண்டு வந்து விட்டது.

அது எத்தகைய பயங்கரமான செய்தி என்று அப்போது வசந்திக்குத் தெரியவில்லை. எல்லோரும் வருந்தும்படியான துயரம் நேர்ந்து விட்டது என்ற அளவுக்குத்தான் அது அவள் நெஞ்சில் அப்போது உறுத்தியது. ஆனால் அந்த அதிர்ச்சியைத் தாங்கும் வலு அவளைப் பெற்றவளுக்கு இல்லை. தன் மகளின் கழுத்தில் ஏறிய தாலிக் கயிறு, அதன் பொருளை அவள் சரியாக உணரு முன்பே, ஒரு வார காலத்திலேயே பறிக்கப்பட்டுவிட்ட இந்தக் கோரத்தை அவளால் சகிக்க முடியவில்லை. செய்தி கேட்டு மயக்கமுற்றுக் கீழே விழுந்தவள் படுத்த படுக்கையாக இரண்டு மாதங்கள் இருந்தாள். அப்புறம் கண்ணை மூடிக் கொண்டாள்!

வசந்தியைக் காப்பாற்றும் முழுப் பொறுப்பும் அவள் தந்தையின் தலையில் விழுந்தது.

அவள் கழுத்தில் தாலியைக் கட்டி விட்டுப் போய் மண்ணைப் போட்டு விட்டவனுக்காக, வசந்தி வாழ்விழந்து நிற்பது அவருக்கு அர்த்தமற்றதாகப் பட்டது.

பால் வடியும் மகள் முகத்தைப் பார்த்து மறுகினார் அவர். அந்த ஊரில் அவருக்கு நெருங்கிய நண்பர் சாமண்ணாதான். இதயம் திறந்து அவர் அவரிடம்தான் பேசுவார்.

''மண வாழ்க்கை என்றால் என்ன என்று தெரியாத இந்தக் குழந்தையை விதவை என்று எப்படியப்பா கூப்பிடுவது....? சந்தர்ப்ப வசத்தால் ஏற்பட்ட ஒரு விபத்து. இவள் வாழ்வில் நடந்த அந்தக் கலியாணம். அதற்காக இவளை வாழ விடாமல் அடிப்பது எந்த நியாயத்தில் சேர்ந்தது?'' என்று அவர் சாமண்ணாவிடம் குமுறுவார்.

மகளுக்குத் தெரியாமல்தான் அவர் பேசியதாக நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் வசந்தி தூங்குவது போலக் கண்களை மூடிக் கொண்டு படுத்திருப்பாளே தவிர திண்ணையில் அப்பா பேசுவதைக் காதைத் தீட்டிக் கொண்டு கேட்டுக் கொண்டிருப்பாள். இப்படிக் காலப் போக்கில்தான் வாழ்வின் பயங்கரத்தை அவள் உணர்ந்து கொண்டாள்.

''நீ சொல்வதெல்லாம் சரிதான். ஆனால் உன் பெண்ணைத் துணிந்து மறுமணம் செய்து கொள்ள யார் முன்வருவார்கள்?'' என்று தான் சாமண்ணா எப்போதும் சொல்லுவார்.

அப்படிப்பட்டவர் ஒருநாள் ''வசந்திக்கு நல்ல காலம் வருகிறது!'' என்று சொல்லிக் கொண்டு வந்து சேர்ந்தார்.

''கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள். அதைப் போல, ஒரு வழியாகச் சுதாகரை மாற்றிவிட்டேன். அவனும் 'அப்படிக் கல்யாணம் செய்து கொள்வதாயிருந்தால் ஓர் இளம் விதவையைத்தான் மணந்து கொள்வதாக இருக்கிறேன்!' என்று சொன்னான். வசந்தியின் கதையை நான் சொன்னபோது உருகிப் போய்விட்டான், போங்கள்!'' என்று சாமண்ணா அன்று கூறியவை இன்று போலக் காதில் ஒலிக்கின்றன.

அவளுக்காக அப்படி உருகிய சுதாகரைத் திரும்பிப் பார்த்தாள் வசந்தி. பரவியிருந்த மங்கிய ஒளியில் அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருப்பது தெரிந்தது.

''என்ன இது...?'' என்று பதறினாள் அவள்.

''ஒன்றுமில்லை....!'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டான்.

''ஏன் அழுகிறீர்கள்....?'' — அவன் முகத்தோடு நெருங்கி மெதுவாகக் கேட்டாள்.

''பாவம், கார் விபத்தினால் அவனுடைய அழகிய முகம் எவ்வளவு விகாரமாகப் போய் விட்டது! அவளே அவன் முகத்தைப் பார்க்கப் பயப்படுகிறாளே!''

''என்ன சொல்கிறீர்கள்....?''

''நீ படத்தைப் பார்க்கவில்லையா...?''

அப்பொழுதுதான் அவளுக்குப் புரிந்தது. சில கணங்களாக அவள் சுற்றுப்புறங்களையே மறந்து விட்டிருக்கிறாள். படத்தில் கவனம் நிலைக்கவில்லை. கனவு போல் அவள் மன வெளியில் தோன்றிய பூர்வாசிரம நினைவு அவளை அப்படி ஆக்கிவிட்டது. திரையிலே தோன்றிய காட்சி ஒன்றின் விளைவாய்க் கிளர்ந்த நினைவில், அவள் வாழாத வாழ்வின் தலைவனாய் ஒரு நாள் வந்து நின்று திடீரென்று அவளைச் சுற்றிலும் இருளைப் பரப்பிவிட்டு என்றோ மறைந்து போனவனின் முகம் ஏன் தெரிய வேண்டும்?

வாழாத வாழ்க்கையே இப்படி என்றால், வாழ்ந்த வாழ்க்கையின் நினைவு மறக்கக் கூடியதா?

''எங்கே நினைவு அப்படி...?'' என்று கேட்டான் அவன்.

''என்னவோ யோசனை....?''

''பெண்களே இப்படித்தானோ அல்லது எனக்கு வாய்ப்பதுதான் இப்படியோ...?'' என்றான் அவன்.

இப்போது அவன் பேச்சு அவளுக்கு வித்தியாசமாகப் படவில்லை. 'பூர்வாசிரம நினைவிலிருந்து துறவிகளே தப்ப முடியாதபோது எல்லாவித ஆசாபாசங்களும் நிறைந்த நம்மால் சென்ற கால வாழ்வை அடியோடு மறப்பது சாத்தியமாகுமா?' என்று தனக்குத் தானே மனத்துக்குள் சமாதானம் கூறிக் கொண்டாள் அவள்.



மூவிரண் டாண்டுகள்
மும்முரமாய்ப் படித்த பின்னர்
டாக்டராய் வந்த முகுந்தன்,
‘மக்கள் துயர் தீர்ப்பேன்;
நோய்க்கு எமனாவேன்.
உண்மையாய் உழைத்திடுவேன்
இன்முகம் காட்டிடுவேன்
பணத்தைப் பாரேன் - பகல்
ராவைப் பாரேன்’
என்றுப் போதினிலே, —
‘கை நிறையக் காசுண்டு, பாசுண்டு;
குடியிருக்க வீடுண்டு;
வந்திடுவீர், டாக்டர்களே!
என்றதைக் கண்ட துமே
எழுதிப் போட்டான்; வந்தது ஆர்டர்.
முதல் நாள் டிஸ் பென்சரியில்
கியூதனைக் கண்டதுமே
உள மகிழ்ந்தான்.
‘ரயில்வேக் காரர்கள்
நாட்டின் நரம்பு நாடிகள்;
இவர் நோய் துடைத்து
நாட்டுப் பணி புரிவேன்.’
வந்தார், நோயாளி.
அவர் கை பார்த்துக் கண் பார்த்து,
நாடி பார்த்து நயமாய்ப் பேசி,
சிந்தித்து,
எழுதிக் கொடுத்தான், சீட்டு
வயிற்று வலி, காது வலி,
காலில் புண், மூக்கில் நோவு,
என்றவர்கள் போனதுமே
வந்தார், அவர்.
‘ஐயனே
நோயில்லை, நொடியில்லை
அடியேனுக்கு.
வேண்டுகிறேன், ரெண்டுநாள் லீவு.
பாட்டிக் கடன் தீர்க்கப்
பட்டிக்காடு போக வேணும்.
கண் திறந்து பார்த்திடுவீர்;
வேறு வழியில்லை.’
‘நானோர் டாக்டர். மருந்து சொல்வேன்.
லீவுக்கு என்செய் வேன்?’
‘கத்துக் குட்டி, நீர்!
ரெண்டு ரூபாய்க்கு மூணுநாள்
மூணு ரூபாய்க்கு அஞ்சுநாள்
கணக்குத் தெரியாதோ?’
‘நான் படித்தது வைத்தியம்’
‘வைத்தியக் காரர்! வாழும் வகையறியீர்!
சொன்ன படிகேட் டால்
சொகுசாய் வாழ்ந் திடலாம்.
சும்மா கதைக்காதீர்;
மொட்டைப் பெட்டிஷன் போதும்!’
முகுந்தன் மூடவில்லை வாய்.
தலையைச் சொறிந்து கொண்டு
வந்துநின்றார், மூக்குக் கண்ணாடி —
கம்பௌண்டர்.
‘புத்திசொல்ல வந்தேன்.
புத்தம்புது டாக்டரய்யா! (நீர்)
எழுதிக் கொடுத்த மருந்தெல்லாம்
கேட்டதுண்டு; இங்கே
கண்ட தில்லை.
இண்டெண்டுப் போட்டிருக்கேன்;
இன்னும் வரவில்லை; வந்து
வழக்க மில்லை.
சீசாக்கள் கண்காட்சி
ரயில்வேக்கள் தனிமாட்சி.
பச்சை சிவப்புக்களாய்
வண்ணத் தண் ணீருண்டு.
பல்ஸ் பார்ப்பீர்;
பில்ஸ் எழுதாதீர், தயை புரிவீர்.
ஊசியுண்டு மருந்துக்கு
எங்கே போவேன்?’
கேட்டான் முகுந்தன்.
முகம் சிவக்கக் கேட்டான்:
‘எழுதிக் கொடுப்பது பொய்;
நீட்டி வாங்குவது மெய்.
என்னப் பிழைப்பு, சை!
பிணிதீர்க்க வந்தேன்; நாட்டுப்
பணிபுரிய வந்தேன்.
அந்தோ, மனம் மிகநொந்தேன்;
விடையும் கொண்டேன்.’
மூக்குக் கண்ணாடி கேட்டார்;
மூர்ச் சித்தே வீழ்ந்தார்.
‘ஸ்மெலிங் ஸால்ட், ஸ்மெலிங் ஸால்ட்’
என்றான்; ஓடினான்; தேடினான் முகுந்தன்.
ஐயகோ, அவனும் வீழ்ந்தான்
— பாட்டில் காலி!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon